JULY '52

34

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

AUG 1952
MADRAS
334.
3.52

-4-
அணா

பெற்றோர்களே!

கண்ணன் ஆரம்பித்து இரண்டரை ஆண்டுகள் ஆகின்றன. இன்று வரையில் தாங்கள் தங்கள் குழந்தையைப் போலவே கண்ணனிடம் அன்பு பாராட்டி, ஆதரித்து வருவதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

குழந்தைகள் தங்களுக்கென்று வெளியாகும் எதையும் ஆவலுடன் வாங்கிப் படித்து விடுவார்கள். அவற்றில் எவை சிறந்தவை, எவை தீமையற்றவை என்றெல்லாம் பார்க்கமாட்டார்கள். அவர்கள் கைக்கு எது கிடைக்கிறதோ அதை வாங்கிவிடுவார்கள்.

இந்த அபாயம் உள்ள துறையில் கண்ணன் தன் சிறப்பான தொண்டைச் செய்ய வேண்டியிருக்கிறது. குழந்தைகளை விரும்பிப் படிக்கும்படி செய்யவும் அந்த விஷயங்கள் ருசியுடன் பயனுள்ளவையாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்வதுமே எங்கள் பொறுப்பு. விஞ்ஞான விந்தைகளை அவர்கள் மனம் அலுக்காமல் தெரிந்து கொள்ளும்படி சித்திர விளக்கத்துடன் வெளியிடுகிறோம். நம் நாட்டிலுள்ள பல முக்கிய ஊர்களைப் பற்றியும், பெரியோர்களைப் பற்றியும் பட்சிஜாதிகளைப் பற்றியும், குழந்தைகளே தெரிந்து கொள்ளும்படியும் எழுதும்படியும் ஊக்குவிக்கிறோம் குழந்தைகளுடைய உலகம் விரிவடைவதற்கான முறையில் கண்ணன் கழகத்தை ஆரம்பித்து நடத்துகிறோம். அவர்களுடைய கற்பனையைத் தூண்டுகின்ற கதைகளும் கர்ணபரம்பரைக் கதைகளும் வெளியிடுகிறோம்.

இளம் மனத்தைக் கெடுக்கக் கூடிய முறையில் விஷயங்களை வெளியிடுவதில்லை. "அமெரிக்காவில் சிறுவர்களுக்கென நடத்தப்படும் பத்திரிகைகளில் பல, சிறுவர்கள் மனத்தைத் தீமையில் செலுத்துவனவாக இருக்கின்றன. வீரம் வீரம் என்று சொல்லிக் கொண்டு குற்றச் செயலையும் திருட்டு எத்துக்களையும் சொல்லிக் கொடுக்கின்றன. வாழ்க்கையில் இல்லாத துப்பாக்கிப் பிரயோகங்களைச் செய்யத் தூண்டுகின்றன" என்று ஹிந்துவில் வெளியான கட்டுரையைச் சமீபத்தில் படித்திருப்பீர்கள். வாழ்க்கையை ஒட்டிய முறையிலும் மனித இயல்புக்கு ஏற்ற வகையிலும் வருங்காலச் சந்ததியார்களை உருவாக்குவதே கண்ணனின் நோக்கம்.

கல்விமான்களும், ஆசிரியர்களும், பெரியோர்களும், குழந்தைகளுக்கு என்று கண்ணனில் எழுதுகிறார்கள். உங்கள் குழந்தைகளும் அவர்கள் பிஞ்சு உள்ளத்தில் எழும் கற்பனைகளை எழுத்தில் எழுதிப் பழகுகிறார்கள். பெற்றோர்களுக்கான பெரும் பொறுப்பைக் கண்ணன் பகிர்ந்து கொள்கிறது. நீங்கள் அவர்கள் சிறந்தவற்றையே படிக்கும்படி ஆரம்பித்து வைத்துவிட்டால் பிறகு தானாகவே அவர்களுக்கு உயர்ந்தது எது, தாழ்ந்தது எது என்று தெரிந்துவிடும். கண்ணன் குழந்தைகளுக்கு நல்ல ருசியும் பகுத்தறியும் திறமையும் வளர்ந்து வரும்படி பார்த்துக் கொள்கிறது. ஆகவே, உங்கள் ஆதரவுக்கும் நம்பிக்கைக்கும் இன்றுபோல் என்றும் கண்ணன் பாத்திரமாக இருக்கும் என்று உறுதி கூறுகிறோம்.

—ஆசிரியர்.

பொருளடக்கம்

மலர்: 3 இதழ்: 7

ஜூலை '52

குழந்தைகளே!	பக்கம் ..	2
ஜம்பு - 'ஆர்வி'	.. ..	3
குளிகைத் தீவு - சித்திரக் கதை	..	9
கெட்டிக்காரன் புளுகு - ஜ. ரா. சுந்தரேசன்	..	18
அசடா, அறிவாளியா? - 'தம்பி'	..	18
பிராயச்சித்தம் - ஏ. எஸ். ராகவன்	..	21
எண் விளையாட்டு - மாணிக்கம்	..	26
கண்ணன் கழக அங்கத்தினர்கள்	..	27
உண்மை எது? - 'எல்லார்வி'	..	29
எங்கள் ஊர் - கு. தண்டாயுதபாணி	..	34
ஏமாற்றம் - 'பூவண்ணன்'	..	87
வண்ணான் வந்தான் - நா. ஜகந்நாதன்	..	41
காமிரா - புரொபஸர் விஞ்ஞானம்	..	45
நீச்சல் பழக்கம் - டிமான்ஸ்டிரேட்டர்	..	49
கேட்டீர்களா!	..	52
கண்ணன் தபால்	..	53

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், மஞ்சரி, கண்ணன்

குடும்பச் சந்தா ரூ. 12/-

காப்பக நூலகம்

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

என்னுடைய சந்தோஷத்தைச் சொல்லி முடியவில்லை, போங்கள்! நான் எவ்வளவோ முயன்றும் என் மகிழ்ச்சியை அடக்கி வைத்துக்கொள்ளவே முடியவில்லை. அநேகமாக நீங்கள் எல்லாரும் மேல் வகுப்புக்குப் போய்விட்டீர்கள் அல்லவா? அதனால் உண்டான சந்தோஷத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

இந்த இதழில் இரண்டு தொடர்கள் முடிவுறுகின்றன. நீங்கள் வெகுவாகப் பாராட்டிய ஜம்பு ஒன்று; நீங்கள் ஆவலுடன் எதிர் பார்த்து ரஸித்த குளிகைத் தீவு இரண்டு இவற்றுக்குப் பதிலாக அடுத்த இதழில் வேறு ஒரு புதிய தொடர் கதை ஆரம்பமாகப் போகிறது. கதை என்றால் நம்பமுடியாத கதையோ, பெரிய துப்பறியும் கதைகளிலிருந்து தோண்டி எடுத்த கதையோ அல்ல. உங்களைப் போன்ற ஒரு பையன் கதையில் வரு கிறான். உங்களைப் போலவே பேசுகிறான்; நடந்து கொள்கிறான். அதிகம் என்ன? உங்களில் ஒருவனாகவே, உங்களோடு பழகுபவ னாகவே அவன் இருக்கிறான். அட அட.. அவனுடைய குறும்புத் தனமும் பேச்சும் அபாரமாய் இருக்கின்றன! 'அபாயச் சங்கு' என்று ஊரிலேயே அவனைப்பற்றித்தான் பேச்சு! கடைசியில் அவன் மட்டுமா திருந்துகிறான்? இல்லை; பல பெரியவர்களும் தங்களைத் திருத்திக் கொள்கிறார்கள். படிக்கப் படிக்கச் சுவாரஸ்யமாக இருக்கும்! 'அபாயச் சங்கு' என்ற அந்தக் கதை அடுத்த இதழிலிருந்து வெளி யாகிறது. அத்துடன் விட்டுப்போன பல அம்சங்களும் பகுதிகளும் மீண்டும் ஆரம்பமாகின்றன. பொறுத்துப் பாருங்கள்!

'ஆமாம்; கண்ணனை மாதம் இருமுறையாக்கும் விஷயம் என்ன ஆயிற்று?' என்று நீங்கள் கேட்பது தெரிகிறது. இந்த வருஷத்தின் நடுவில் எந்தவித மாறுதலும் செய்ய வேண்டாம் என்று எண்ணு கிறோம். இன்னும் ஐந்தே மாதங்கள்தானே! அதற்குப் பிறகு மாதம் இரு முறையாகச் செய்துகொண்டால் போகிறது. எதற்கும் ஒரு முகமான ஆதரவு வேண்டும். பாதிப்பேர் வேண்டும் என்கிறீர் கள். பாதிப்பேர் இப்படியே இருக்கட்டும் என்கிறீர்கள். எனக்கு என்ன செய்வதென்று புரியாமல் ஒரே குழப்பமாய் இருக்கிறது. கண்ணன் தபாலில் ஒரு பெரியார் கூறியிருப்பதுபோல் புது வருஷத்தி லிருந்து ஒரு புதிய 'மாதமிருமுறை'யே கொண்டுவந்தால் என்ன என்றுகூடத் தோன்றுகிறது. எதற்கும் இன்னும் ஐந்து மாதங்கள் இருக்கின்றன; அதற்குள் ஒரு முடிவு செய்துகொண்டால் போகிறது!

மதுரையிலும் சுற்றுப் புறங்களிலும் உள்ள குழந்தைகள் பாடு யோகந்தான்! ஜூலை மாதம் 19-ஆம் தேதி மதுரையில் பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில் உள்ள மதுரை காலேஜ் ஹைஸ்கூலில் கண்ணன் கழகக் கூட்டம் நடைபெறுகிறது மாலை 3-30 மணிக்குக் கூட்டம் ஆரம்பம். இதையே அழைப்பாக ஏற்றுக்கொண்டு எல்லா அங்கத்தினர்களும் தவறாமல் வந்துவிடவேண்டும். சாத்தியமானால் அங்கத்தினர்களுக்குத் தனித்தனியே அழைப்பு அனுப்புவோம்! விளையாட்டுப்போட்டி, விகடம், சிற்றுண்டி எல்லாம் உண்டு. அவசியம் வாருங்கள்.

ஜய் ஹிந்த்!

—ஆசிரியர்.

ஜம்பு

ஆர்வி

OFFICE OF THE REGISTRAR
AUG 19..
MADRAS

அந்தக் காட்சியைப் பார்க்கவே மயிர்க்கூச்செறிந்தது. கண் மூடிக் கண் திறப்பதற்குள் ஜம்பு சிங்கத்தின் பயங்கரப் பாய்ச்சலிலிருந்து தப்பி ஓடி வந்துவிட்டான். சிங்கம் ஆவேசத்துடன் உறுமிக்கொண்டே கம்பிகளில் எம்பித் தாவி அறைந்தது. கூரிய பெரும் நகங்களால் பிறாண்டியது. ஆயினும் என்ன பிரயோஜனம்? கூண்டின் கிராதியைத்தான் ஜம்பு மிகப் பத்திரமாய் மூடிவிட்டானே!

இன்ஸ்பெக்டர் பிரஸாத் ஆனந்த மிகுதியினுல் அப்படியே அவன்மீது பாய்ந்து கட்டிக்கொண்டார். "என்னடா ஜம்பு இது! சிங்கத்திடமா உன் சூரத்தனத்தைக் காட்டப் போனுய்?" என்று நாத் தழுதழுக்கக் கேட்டார்.

ஜம்பு உடனே பதில் ஒன்றும் சொல்லவில்லை. ஆனுல் மூச்சுத் திணறியபடியே, "ஸார், கவலைப் படாதீர்கள்!" என்று மட்டும் சமாதானமாகக் கூறினுன்.

அவர்களைச் சுற்றிலும் ஜனங்கள் ஒரே கூச்சலாகப் போட்டுக்கொண்டிருந்தபடியால் ஒருவர் பேசுவது மற்றவருக்குக் கேட்கவில்லை. இதற்குள் பயங்கர மிருகங்களை அடக்கிப் பழகும் லயன் மாஸ்டர் கையில் நீண்ட காந்தச் சாட்டையுடன் உள்புறம் தோன்றினுன்.

"கமான்.. அப்.. கோ-ஆன்..." என்று அடித்தொண்டையால் கத்தியபடியே சுளீர் என்று வலது கையிலிருந்த சாட்டையால் சொடுக்கினுன்.

சிங்கமோ ரத்தம் போல் சிவந்த தன் பிரம்மாண்டமான வாயைப் பிளந்து உறுமியது; இல்லாத இடக்கெல்லாம் செய்தது; எம்பித் தாண்டியது: எகிறிக் குதித்தது. அதனுடைய கோரைப் பற்களும் சிங்கப் பற்களும் அந்த மாஸ்டருடைய தலையைக் கிழிப்பதற்குத் தயாராக இருப்பன போல் நீண்டிருந்தன. இவன் கூச்சல் போட, அது அடங்காமல் உறும, பார்ப்பதற்கே குலை நடுக்கமாக இருந்தது. இந்தக் காரணத்தினுல் வெளியிலுள்ள நிலைமை ஒருவிதமாகக் கட்டுக்குள் அடங்கியது. ஜனங்கள் மூச்சுக் காட்டாதபடி சிங்கத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒரொரு சமயம் அந்த மாஸ்டரையே பிடித்து விழுங்கிவிடுமோ என்று திகிலாக இருந்தது. அது பாதத்தைத் தூக்கி அந்த மாஸ்டரை ஒரே அறையாக அறைய வரும். ஆனுல் அந்தக் காந்த ஊசி பதித்த குச்சியை அவன் நீட்டுவான்; உடனே சிங்கம் பின் வாங்கிவிடும்.

ஜம்பு இன்ஸ்பெக்டரின் காதோடு என்னவோ சொன்னுன்.

இன்ஸ்பெக்டர் திரும்பிப் பார்த்தார். அந்த ஊமையன் இந்த ரகளைகள் ஒன்றையும் கவனியாதவன்போல் பழைய இடத்திலேயே நின்முன்.

"இவனு?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம்; பிறகு எல்லாம் விவரமாகச் சொல்கிறேன். முதலில் நாம் வெளியே போவோம்" என்முன் ஜம்பு.

இருவரும் பின்புற வழியாக வெளியில் வந்தனர். ஸர்க்கஸ் கூடாரத்தினுள் கணகணவென்று மணியோசை ஒலித்தது. இந்த ரகளைக்குப் பிறகு ஆட்டம் நடத்துவது கஷ்டம் என்று முடித்துவிட்டார்கள். ஸி. ஐ. டி. ஆறுமுகம் கோஷ்டியார் ஸாண்டோ தங்கையாவுடன் மானேஜருடைய அறை வாசலில் நின்றிருந்தார்கள்.

"அது இருக்கட்டும்; சினிமாக் கொட்டகையில் உன் கண்களைக் கட்டி இழுத்துச் சென்றவன் இந்த ஊமையன்தான் என்று இப்போது உள்ளே சொன்னுயே, அது நிச்சயந்தானே?"

"அதிலும் சந்தேகமா? அவன் நம்மையே முறைத்துப் பார்ப்பதிலிருந்தே விஷயம் புரியவில்லையா? இன்னும் சொன்னுல் நான் டிக்கட் வாங்க, க்யூவில் நின்றபோது என் பின்னுல் நின்றவன் இவன்தான். சந்தேகமேயில்லை. அந்தக் கடிதத்தை எடுத்தவனும் இவனுகத்தான் இருப்பான்!"

"சரி பார்க்கலாம்; ஆனுல் நீ ஏன் அங்கே அந்தச் சிங்கக் கூண்டுக்குப் போனுய், ஜம்பு?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"சரி வாருங்கள். என்ன நடந்தது என்பதை விளக்கிக் காட்டுகிறேன். முதலில் அந்த ஊமையனை அரெஸ்ட் பண்ணச் சொல்லுங்கள்!" என்முன் ஜம்பு.

இன்ஸ்பெக்டர் விடுவிடு என்று போலீஸ்காரர்கள் நின்ற இடத்தை நோக்கிப் போனுர். அங்கே அவர்களிடம் ஊமையனைப் பிடிப்பதற்கான உத்தரவுகளைச் சொல்லிவிட்டு மறுபடி ஜம்புவிடம் வந்து, "வா—போகலாம்" என்முர்.

இருவரும் இருளில் மறைந்து சிங்கம், புலிகளை அடைத்து வைத்திருக்கும் கூண்டுப் பக்கம் போனுர்கள். ஜம்பு அவரிடம் ரகசியமான குரலில் சற்று முன் நடந்தவற்றையெல்லாம் விவரித்துச் சொல்லிக்கொண்டு வந்தான்.

ஸர்க்கஸ் கூடாரத்துக்கு வெளியே எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. சிங்கம், புலி இவற்றை அடைத்திருக்கும் கூண்டுப் பக்கம் இவர்கள் வந்தபோது திடீரென்று ஏதோ சத்தம் கேட்டது. உடனே இன்ஸ்பெக்டர் கையில் ரிவால்வரைப் பிடித்துக்கொண்டு ஜம்புவை அங்கே நிற்கும்படி சொல்லிவிட்டு அவர் வலது புறமாகச் சுற்றிப் போனுர்.

இருளில் ஒரு கரிய உருவம் ஊர்ந்து தன் பக்கம் நோக்கி வருவதை ஜம்பு கண்டான். உடனே சற்று ஒதுங்கி கூண்டுக்கு அடியில் ஒளிந்துகொண்டான். அந்தக் கரிய உருவம் மெல்ல கூண்டுக்கு அருகில் வந்து தயங்கி நின்றது. மெல்லச் சீட்டி அடித்தது. ஆனுல் அதற்குள், "நில் அப்படியே, நகர்ந்தால் சுட்டுத் தள்ளி விடுவேன்" என்று இன்ஸ்பெக்டரின் அதட்டும் குரல் கேட்டது. அவர் உடனே போலீஸ் குழலை எடுத்து ஊதினுர். எங்கிருந்தோ இரண்டு போலீஸ்காரர்



கள் அந்த இடத்துக்கு ஓடி வந்தார்கள். அடுத்த நிமிஷம் அந்தக் சரிய உருவம் அவர்களிடம் சிக்கிக்கொண்டது. ஊமையன் தான்!

“ஜம்பு எங்கே?” என்றார் இன்ஸ்பெக்டர்.

“பே.. பே.... பே!”

“சரி.. டேய் 408! நீ ஜம்புவைப் பார்த்து அழைத்து வா! நாங்கள் அங்கே காபின் அருகில் இருக்கிறோம்” என்று சொல்லிவிட்டு ஊமையனை இழுத்துக் கொண்டு போனார்.

* * *

ஸாண்டோ தங்கையாவும் மானேஜர் சிங்காரமும் கையில் விலங்குகளுடன் நின்றார்கள். ஊமையன் கையிலும் விலங்கு மாட்டப்பட்டிருந்தது.

இவ்வளவும் நேரம் ஹிந்தியிலேயே பேசி வந்த சிங்காரம், “இன்ஸ்பெக்டர் ஸார்! உங்களுடைய நடத்தை விசித்திரமாய் இருக்கிறது. ஒரு குற்றமும் புரியாத எங்களைக் கைது செய்து அவமானப் படுத்துவதுதான் குற்றம். நாங்கள் சும்மா விடமாட்டோம்!” என்றான்.

“நீங்கள் ஒரு குற்றம் மட்டும் செய்யவில்லை. பல குற்றங்கள் செய்தவர்கள் என்றுதான் கைது செய்திருக்கிறேன்” என்றார் இன்ஸ்பெக்டர் சிரித்தபடியே.

“பே...பே...பே!” என்று ஒரேயடியாகக் கூவினான் ஊமையன். அவன் என்ன சொல்கிறான் என்று ஒருவருக்கும் புரியவில்லை. ஸாண்டோ தங்கையாவோ, வெகு விறைப்புடன், “நாங்கள் குற்றவாளிகள் என்பதற்கு என்ன ருசு? உங்களால் அதை நிரூபிக்க முடியுமா?” என்று கேட்டான்.

“அதெல்லாம் என்னைக் கேட்க வேண்டிய கேள்வியில்லை. கோர்ட்டில் கேட்க வேண்டியவை. இருந்தாலும் உங்களுக்காகச் சொல்கிறேன்: நீங்கள் திருட்டுத்தனமாகக் கள்ள இறக்குமதி செய்திருக்கிறீர்கள். இரண்டு லட்சத்துக்கு மேல் பெறுமானமுள்ள பொருள் இன்று உங்களிடம் இருக்கிறது. லைஸென்ஸ் இல்லாமல் மோட்டார்ப் படகு விட்டீர்கள். எல்லாவற்றையும் தூக்கி அடிக்கும்படியாக ஒரு சினிமாத் தியேட்டருக்கே தீ வைத்ததுடன் அதில் ஒரு சிறு பையனையும் பிடித்து அடைத்துத் தள்ளியிருக்கிறீர்கள். இவ்வளவு குற்றத்துக்காகவும் உங்களை இன்று கைது செய்திருக்

எமன்: என்ன சித்திரகுப்தரே! லீவு கேட்கிறீரே பூலோகத்திலே பரீட்சை ரிஸல்ட் வெளிவரும் சமயம் ஆச்சே! லீவு கொடுக்க முடியாது, போம்!

—ரமேஷ்.

கிறேன். இவ்வளவுக்கும் என்னிடம் ஆதாரங்கள் இருக்கின்றன. நீங்கள் நிரபராதிகள் என்றால் அதைக் கோர்ட்டில் நிரூபியுங்கள்!” என்றார்.

அந்தக் கைதிகள் மூவருடைய முகங்களும் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பேயறைந்தது போலாகிவிட்டன.

“அக்கிரமம்! அபாண்டம்! அநியாயம்!” என்று அந்த இருவர் மட்டும் கூவினார்கள்.

“மரியாதையாக அந்தப் பொருளைக் கொடுத்து விடுங்கள். இல்லையோ எங்களுக்கு வீண்சிரமத்துடன் உங்களுக்கும் வீண்கஷ்டம் உண்டாகும்!” என்றார் பிரஸாத்.

ஸாண்டோ தங்கையாவுக்கு இன்னும் அந்தப் பொருள் இவர் கையில் சிக்கவில்லை என்ற தைரியம் வந்துவிட்டது.

“எந்தப் பொருள்?” என்றான் எரிச்சலுடன்.

“அதுதான்! புதுச்சேரியிலிருந்து வந்த கப்பலிலிருந்து கொண்டுவந்தீர்களே!”

“பெரிய சூரராக இருந்தால் அதையும் நீங்களே கண்டுபிடிக்கிறதுதானே!”

இந்தச் சமயத்தில் ஜம்பு, “ஸார்!” என்று சந்தோஷத்தோடு சிரித்துக்கொண்டே ஓடி வந்தான். அவருடைய காதருகில் ஏதோ சொன்னான். இன்ஸ்பெக்டருடைய முகம் அதைக் கேட்டதும் ஆனந்தத்தினால் மலர்ந்தது.

ஸாண்டோவுக்கும் மானேஜருக்கும் ஜம்புவை அப்படியே சுட்டுவிடலாமா என்பதுபோல் ஆத்திரம் வந்தது.

“சரி; நாம் புறப்படுவோமே!” என்றார் இன்ஸ்பெக்டர்.

“எங்கள் விலங்கை எடுங்கள்! எங்கள் குற்றத்தை நிரூபிக்காமல் எங்களைக் குற்றவாளிகளாக்குவது கொடுமை!” என்றான் தங்கையா.

“ஜம்பு....இவர்களை முதலில் அங்கேயே அழைத்துப் போகலாமா?” என்றார் பிரஸாத்.

“அப்படியே செய்வோம்!”

உடனே எல்லாரும் முன்பு ஜம்பு ஒளிந்துகொண்ட சிங்கக் கூண்டுக்கு அருகில் வந்தார்கள்.

“மிஸ்டர் தங்கையா! உங்கள் ஊமையன் மகா சூரன்! அவன் அந்தப் பொட்டலத்தை எங்கே ஒளித்து வைத்திருக்கிறான், பார்த்தீர்களா! சிங்கக் கூண்டுக்குள் போட்டுவிட்டால் யாரால் சோதனை போட்டுக் கண்டுபிடிக்க முடியும்?” என்றார் சிரித்துக்கொண்டே

ஊமையன் பயங்கரமாய், "பே.. பே.." என்று ஏதோ கத்தினன்.

"நான் மோட்டார் சைக்கிள் சீட்டிலிருந்து வந்த உங்களைப் பிடித்துக்கொள்ள வந்தேன். ஆனல் இந்த ஊமையன் பைக்குள் கொண்டுவந்த பொட்டலத்தை எடுத்துக்கொண்டு சிங்கக்கூண்டுப் பக்கம் போயிருக்கிருன். அடடா, என்ன அபாரமான மூளை! இது நல்ல வழியில் பயன்பட்டால் எவ்வளவு பிரமாதமாக இருக்கும்!" என்று சொல்லிக்கொண்டே போனர் இன்ஸ்பெக்டர்.

இதற்குள் ஸி. ஐ. டி. ஆறுமுகம் சிங்கத்தை ஆட்டி வைக்கும் மாஸ்டரை இழுத்து வந்தான். கடைசியில் பெரு முயற்சி செய்து அந்தப் பொட்டலத்தை வெளியே எடுத்தார்கள். ஒருவர் முகத்திலாவது ஈயாடவில்லை.

இன்ஸ்பெக்டர் அதைக் கையில் எடுத்தார். மெல்லப் பிரித்தார். ஸாண்டோ தங்கையா கோஷ்டியார் கண்களில் தீப்பொறி பறக்க அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டே இருந்தார்கள்.

பொட்டலத்துக்குள் பொட்டலமாக அது நன்ருகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. கடைசியில் அதைப் பிரித்ததும் எல்லாக் கண்களும் கூசின. பளபளவென்று பல வர்ண ஜாலங்களை வீசுகின்ற வைரக் கற்களுடன் தங்கக் கட்டிகளும் இரண்டு தனியாக இருந்தன.

"ரூபாய் இரண்டு லட்சம்! புதுச்சேரியிலிருந்து வந்தவை என்னப்பா ஸாண்டோ உண்மையை ஒப்புக்கொள்கிருயா, இல்லை இன்னும் மறைக்கிருயா?" என்ருர் இன்ஸ்பெக்டர்.

"ஹூம்....இது உங்கள் சூழ்ச்சி! எங்களுக்கு ஒன்றுமே தெரியாது!" என்ருன் தங்கையா.

"சரி; இது என்ன பார்! ஜம்பு! நீ அந்தக் கூண்டுக்கு அடியிலிருந்து எடுத்த கடிதம் எங்கே, எடு; இவருக்குக் காட்டலாம்!"

ஜம்பு அந்தக் கடிதத்தைக் கொடுத்தான். "ஸாண்டோ அவர்களே! இந்தக் கடிதம் ஏது தெரியுமா? உங்கள் குரங்கு இந்தப் பையன் வீட்டில் போட்டுவிட்டுப் போனதே அந்தக் கடிதம். சினிமாக் கொட்டகையில் இந்தப் பையனை ஏமாற்றி, பிக் பாக்கெட்

பெண்: எங்க அம்மா உங்களுக்கு ஓரணாத் தரணுமாமே.
கடைக்: ஆமாம், கொண்டா!
பெண்: இந்தாங்க!
கடைக்: சரி; உங்க அம்மா யாரு?

—உமா, மயிலாப்பூர்.

செய்து ஊமையன் மறுபடி எடுத்து வந்தானே அதே கடிதம்! உங்கள் ரகசிய வார்த்தை 'ஸர்க்கஸ்', கப்பல் வரும் நேரம், சந்திக்க வேண்டிய இடமெல்லாம் இதில் இருக்கிறதே! பார்த்துக்கொள்ளுங்கள், ஐயா, ஸாண்டோவே! மேலுக்கு ஸர்க்கஸ் பீட்ஸ் - உள்ளுக்குள் 'ஸ்மக்ளிங்!' இல்லே?"

பதில் யாரும் பேசவில்லை. எல்லாரையும் போலீஸ் வானில் ஏற்றினார்கள். வான் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சென்றது.

"ஜம்பு! நீ சிறிய பையனாக இருந்தாலும் உன் உதவி மிகப் பெரியது. நீ முதலிலேயே இந்தக் கடிதத்தை எங்களுக்கு அனுப்பியிருந்தால் உனக்கு இவ்வளவு கஷ்டம் ஏற்பட்டிராது! போகட்டும்; நீ இருந்ததால் தானே ஊமையன் திருட்டுத்தனமாகச் சிங்கக் கூண்டுக்குப் போனதைக் கண்டு பிடித்தாய்? அவனைப் பின்பற்றிப் போய் அவன் சிங்கக் கூண்டுக்குள் போட்டதைக் கண்டிராவிட்டால் நாம் இவர்களை என்ன செய்ய முடியும்? அதெல்லாம் சரி; நீ என் சிங்கத்தைத் திறந்து விட்டு விட்டாய்?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"சிங்கக் கூண்டில் இரண்டு அறை உண்டு. ஒன்றில் சிங்கம் இருக்கும். மற்றொன்றில் ஆகாரம் போடுவார்கள்; கழுவி விடக் கொள்ள அந்த அறை உபயோகப்படும். ஊமையன் அந்தக் காலி அறையில் அந்தப் பொட்டலத்தைப் போட்டு விட்டுப் போனான். ஆனால் அவனும் வந்து எடுக்க முடியாமல் இருப்பதற்காகச் சிங்கத்தை அந்த அறையில் அடைக்க நினைத்து நடுவிலிருந்த கிராதியைத் தூக்கினேன். இருட்டானபடியால் நான் எதைத் தூக்குகிறேன் என்பது தெரியாமல் வெளிக் கதவு திறந்துகொண்டுவிட்டது! சிங்கம் பாய்ந்துகொண்டு வெளியில் வந்த பிறகுதான் என் தவறு தெரிந்தது" என்றான் ஜம்பு.

"ஜம்பு! உன் அப்பாவிடம் நானே வந்து எல்லாவற்றையும் சொல்லி உன்னை ஒன்றும் செய்யாமல் இருக்கச் சொல்கிறேன். நீ இனி ஒழுங்காக உன் பாடங்களைப் படி. படித்துப் பாஸ் பண்ணி இந்த இன்ஸ்பெக்டர் உத்தியோகத்துக்கே நீ வரலாம்! இதைவிடப் பெரிய உத்தியோகத்துக்கும் போகலாம்" என்று தட்டிக்கொடுத்தார் இன்ஸ்பெக்டர். ஜம்பு இனி தீவிரமாகப் படிப்பில் புத்தியைச் செலுத்துவது என்று தீர்மானித்துக்கொண்டான்.

முற்றும்.

குளிகைத் தீவு
கதை: ஆர்வி சித்திரம் சங்கர்...
அந்த மாலையைக் கொடுத்து விடு இல்லையேல உன் தலை போய் விடும்!
என்னுடன் குளிகைத் தீவுக்கு வருவதாய இருந்தால தருகிறேன்.
யார் அங்கே! இவளைப் பிடித்துக் கட்டி என் மந்திர மாலையை உடனே அபகரியுங்கள்!
அவள் எங்கே இருக்கிறாள் தெரியவில்லையே!
கிளி சொன்னது சரியாயிற்று. இந்த மாலை என்னிடம் இருக்கும் வரைக்கும் என் எவலை யாரும் தட்ட மாட்டார்கள்!
உன்னைத் தப்ப வைக்கிறேன் மாலையைக் கொடு!
முதலில் அந்த மாலையை அணிந்து கொள். மந்திரச் சேலையை அவிழ்த்து விடலாம்!
நாகநந்தன மாலையை அணிந்து கொண்டு சேலையை எடுத்ததும பழைய உருவை அடைகிறான
மந்திரச் சேலைகள இருக்கும் அறைக்கு என்னை அழைத்துப் போங்கள்!
உத்தரவு!
வழி நெடுகிலும் எல்லாரும் தலை வணங்கி அவனுக்கு வழி விடுகிறார்கள்
ஜல்தி! ராஜகுமாரி பலே சாகஸக்காரி. உன்னை மயக்கி விடுவாள்!
உம், பார்த்துக் கொள்ளலாம்!
ஜகஜ் ஜோதியாய் விளங்கிய ஓர் அறையினுள் அரக்கன் வழி காட்ட நாகநந்தன் நுழைகிறான். அங்கே கண்ணைப் பறிக்கும் சேலைகளும் விதவிதமான பொருள்களும் இருப்பதைக் கண்டு வேண்டிய மட்டும் சேலையை எடுத்து மூட்டையாகக் கட்டிக் கொள்கிறான்
டேய்! இது என்ன? பாதரட்சைக்கு இரகு மூதை திருக்கிறது
அது மந்திரப் பாதரட்சை! நினைத்த இடத்துக்குப் பறந்து செல்லும்!
இதற்குள் அவர்கள் இருந்த கட்டிடமே கிடுகிடுவென ஆட்டம் கண்டது. ஆனால் நாகநந்தன சடடென்று பாதரட்சையில் ஏறி அதை அணிந்து கொள்கிறான்.....
இது அந்தச் சாகஸக்காரியின் வேலை!
எல்லாம் தலைகீழ் மேல் போய விட்டது. என பாட்டியையும், மாமனையும் கொன்றவன் இந்த ராஜகுமாரன் தானும்!
அவா தப்பித்துக் கொண்டார்!
அதோ அவரே வருகிறார். எல்லாவற்றிற்கும் அந்த ஸ்வர்ணக் கிளிதான் காரணம்!
இளவரசே! என்னைக் காப்பாற்றுங்கள்! உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை. என் பிழையை மன்னியுங்கள்!
இவளுக்கா நீ இரக்கம் கொள்கிறாய் வேண்டாம்!
பெண்ணே! எழுந்திரு! உன் கொடுஞ்செயலை விட்டு விடுவதாக வாக்களித்தால் மன்னிக்கத் தயார்!
ராஜகுமாரா! உனக்கு நான வேண்டுமா? இவள் வேண்டுமா? சொல்!
எனக்கு நீ தான் வேண்டும். ஆனால இவளையும மன்னிக்க வேண்டும்!
கிளியே! உன்னைப போல நானும ஒரு பெண. சத்தியம் செய்து வாக்களிக்கிறேன என்னிடம இரக்கம் காட்டு

என்ன? இந்தக் கிளி ஒரு பெண்ணு?
ஆம் உங்களுக்குத் தெரிந்த ஒரு பெண்தான் உங்கள் வாளால் என்னை ஒரே வெட்டாக வெட்டுங்கள்!
நாகநந்தன் தன் உடைவாளை எடுத்து, கிளி சொன்னபடியே அதை ஒரே வெட்டாக வெட்டுகிறான். அடுத்த கணம்.........
ஆ! குளிகைத் தீவின் இளவரசி! நீ எப்படி கிளியாக மாறினாய்?
இளவரசே! என்னையும் மன்னித்து விடுங்கள் எல்லாம் அந்த அந்தக கிழவியைக் காப்பாற்றவே பாடுபட்டேன் கனும் தொலைந்தார்கள். நீங்கள் வாக்களித்தபடி இனி நான் உங்களுடையவள்!
இனி இந்தத் தீவும் உங்களுடையதே நீங்கள் காட்டிய வழிப்படி நடக்கிறேன். வாருங்கள் எல்லாரும் குளிகைத் தீவுக்கே போகலாம்!
எல்லாம் இறைவன் அருள்!
என்னுடைய நண்பர்கள் எனக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களையும் அழைத்துக் கொண்டு செல்வோம்!
தாதிமார்களே! ராஜகுமாரி திரும்பி வருவாள் கவலை வேண்டாம்!
காட்டில்.....
நண்பா! நான் வந்த காரியம் அநேகமாக முடிந்து விட்டது. இனி நீ கன்னிகைத் தீவின் சிற்றரசன். இந்தப் பாதரட்சையை அணிந்து கொண்டு புறப்படு. நாங்கள் கருடன் மீது ஏறி வருகிறோம்.
கன்னிகைத் தீவில்.........
இளவரசே! உங்கள் அன்புக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்?
நாகநந்தா! உன் ஆட்சிக்கு அடங்கிய தீவாக நான் இதை ஆண்டு வருவேன்!
பஞ்சகன்னிகைகளிடமும் காட்டில் சந்தித்த வாலிபனிடமும் அங்குள்ள தலைவனிடமும் பூதத்திடமும் பிரியா விடை பெற்றுக் கொண்டு நாகநந்தன் அந்த இரண்டு இளவரசிகளுடன் கருடன் மீதேறி குளிகைத் தீவை நோக்கிப் புறப்பட்டான்
குளிகைத் தீவின் அரண்மனைக்குள் இருவரும் ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்து கொள்கிறார்கள்.
ஆ! பிம்பதரா!
ஆ! நாகநந்தா!
இங்கிருந்து புறப்பட்டது முதல நடந்த கதை இதுதான்!
இந்த இளவரசியின் சகோதரன் சீரகன் பூம்புகாருக்குப் போயிருக்கிறான்!
அதோ இளவரசருடன் இருப்பவர் தானே மந்திரி குமாரர்?
ஆமாம் மந்திரி குமாரராய் இருப்பவர் இனிமேல் ஒரு தீவுக்கே அரசராகப் போகிறார்!
ஒரு பெரிய ராஜவிருந்துக்கு ஏற்பாடு செய்ய எண்ணுகிறேன்! உங்கள் இஷ்டம் என்ன?
மந்திரவாதி இல்லாமலா?
உன்னுடைய பூதத்தின் உதவியால் மந்திரவாதியைக் கண்டு பிடிக்கலாமே!
பேஷ்! சரியான யோசனை தான்!

அரசே! என்னுடைய மாந்தரீகத்தை விட உங்கள பராக்கிரமம் மிகவும் உயர்ந்தது என்பதை நிரூபித்து விட்டீர்கள்.
அந்தக் குகையில் அடைபட்டு அன்று தூங்கினவன்தான. இன்றுதான் எழுந்தேன்...
இளவரசே! அந்தக் குளிகையைப் பொடியாக்கினை இந்நகரமே முன் இருந்தது போல ஆகும்.
நாகநந்தனும் பிம்பருபனும் குளிகைகளை எடுத்துப் பொடியாக்கியதும் பெரிய சத்தம் எழுந்து அடுத்த ஒரு நாழிகை நேரத்தில் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் எழும்பி நகர மாந்தர்கள் அனைவரும் மந்திர சக்தியால் எழுந்தவர்கள் போல நடமாடத் தொடங்கினார்கள்....
நகரப் பெருமக்களே! ஆண்டவன் அருளால் இந்த நாட்டைப் பிடித்திருந்த இருள் விலகி விட்டது. இனிப் பழைய படி அரசாட்சி நடைபெறும்.
தமிழ் நாட்டு இளவரசர் வாழ்க!
குளிகைத்தீவு வாழ்க!
வாழ்க!
நந்தவனத்தில்.
இளவரசி! உன் முகம் வாட்ட மடைந்திருப்பானேன்?
கொடுத்த வாக்கை நிறைவேற்ற வில்லையே!
கொடுத்த வாக்கை மீறும் வழக்கம தமிழ் நாட்டு இளவரசனிடம் கிடையாது!
'நீதான வேண்டும்' என்று அன்று நீங்கள் சொல்ல வில்லையா?
இளவரசே! நம் நாட்டுக்குப புறப்பட மரக்கலம் சித்தமாய் இருக்கிறது! புறப்படலாமே!
இந்தத் தீவின் இளவரசியும் நீ மணக்கப் போகும் ராஜகுமாரியும் நம்முடன் வருகிறார்கள்!
என் மந்திரக்கோலை இழந்து விட்டேன் என் கடமையிலிருந்து தவறி விட்டேன். நான் அரசா முகத்தில் எப்படி விழிப்பேன்! நான் வர வில்லை; இங்கேயே இருந்து விடுகிறேன்.
உன்னிடம் மந்திரக்கோல் இருந்திருந்தால் என் வீரம் எவ்விதம் வெளிப்பட்டிருக்கும்! அது நம்மிடம் இல்லாமல் போனதற்காக நான் சந்தோஷப் படுகிறேன். கவலைப் படாமல் புறப்படு!
தங்கள் சித்தம்!
ராஜகுமாரி! பிம்பருபன் உன்னை மணந்து கொள்ளச் சம்மதித்து விட்டாராம்! அவரே உன் தீவுக்கும் உனக்கும் அரசராக இருப்பார்!
நடந்ததற்கெல்லாம் என்னை மன்னித்துவிடு!
கூரா! இன்று முதல் உனக்கு விடுதலை! எப்பொழுது உனக்கு வரவேண்டும போல் தோன்றுகிறதோ அப்பொது வரலாம்!
குறிப்பிட்ட நாளில்.......
மகா ஜனங்களே! உங்கள் இளவரசி வெகு சீக்கிரமே சக்கரவாத்தினியாகத் திரும்புவாள். எங்களுக்கு அன்புடன் விடையளியுங்கள்!
ஜயவிஜயீ பவ!
இளவரசி வாழ்க!
உன் தீவை விட்டுப் புறப்படுகிறோமே என்று வருந்துகிறாயா சர்மிலா?
இல்லை, நீங்கள் இந்தத் தீவுக்கு வந்தபோது உங்களை வரவேற்காமல் போனனே என்றுதான் வருந்துகிறேன்..
மரக்கலம் பூம்புகாரை நெருங்குகிறது.....
இளவரசே! நாம் மாறு வேடத்தில் செல்வதே நல்லது!
என் நகரமே வெறிச் சோடிக் கிடக்கிறது!

ஐயா! நாங்கள் அயல் நாட்டுப பிரயாணிகள்! இந்தச் சத்திரத்தில் தங்க கொஞ்சம் இடம் தரவேண்டும்!
ஆஹா! தாராளமாகத் தங்கலாம்! ஆனால் நீங்கள் எதையும் சுற்றிப் பார்க்க முடியாதே! நகரமே வெறிச்சோடிக் கிடக்கிறது!
அரசரையும் அரசியையும் குந்தலா சிறையில் அடைத்திருக்கிறாள்... அவள் முடிசூட்டிக் கொள்ள ஏற்பாடு நடக்கிறது. அதோ பாருங்கள், யானை மீது காவிரி ஜலம்!
ஏன்?
பட்டத்து யானை மேளதாளங்களுடன் அம்பாரிமேல் அபிஷேக ஜலத்துடன் வருகிறது.......
சிறையில்.......
அதோ! வாத்திய முழக்கம்!
இனி நாம் உயிரோடு இருந்து என்ன பிரயோஜனம்! இந்தாருங்கள் விஷம்!
வேண்டாம்! நில்லுங்கள்! நாகநந்தன் வந்து விட்டான். கவலை வேண்டாம்! இது உண்மை!
ஹா! வந்து விட்டானா? உனக்கு எப்படித் தெரியும்?
பாருங்கள் இந்த மோதிரத்தை! என் சகோதரியும் வந்திருக்கிறாள்! நான் போய் மேலே நடப்பதைப் பார்க்கிறேன்.
முடி சூட்டு மண்டபத்தில் குந்தலா நிற்கிறாள். அபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. சீரகன் அச்சமயம் கூட்டத்தில் மாறு வேடத்திலிருந்த நாகநந்தனை இழுத்து வருகிறான்.......
பூம்புகார் பெருமக்களே! இனி இவனே உங்கள் அரசன்!
சூடசீ! இந்த நய வஞ்சகனைக் கைது செய்யுங்கள்!
சேவர்கள் விலங்கை மாட்ட அருகில் வரும்போது.........
இதோ! மாறு வேடத்தில் நம் இளவரசர்!
ஆ!
உடனே பெருத்த ஆரவாரமும் குழப்பமும் ஏற்படுகின்றன. குந்தலா மயக்கமடைந்து விழுந்து விடுகிறாள். நாகநந்தனும் பிம்புருபனும் சகல மரியாதைகளுடனும் அரண்மனைக்குள் சீரகனை அழைத்துச் செல்லப் படுகிறார்கள்.
ஹா! நாகநந்தா!
தந்தையே! வெற்றி வாகை சூடி திரும்பி விட்டேன். ஆசி கூறுங்கள்!
சபா மண்டபத்தில்....
எந்தையே! இவளே உங்கள் புதிய மருமகளாக வரப் போகிறவள். அருகில் பிம்புருபனை மணக்கப் போகும் ராஜகுமாரி!
ஒரு சிறு வேண்டுகோள்! பாவம், குந்தலாவையும் பெரிய மனத்துடன் மன்னிக்கவேண்டும்
நாகநந்தன் குளிகைத்தீவின் இளவரசி சர்மிலாவை மணந்து சக்கரவர்த்தியாக முடிசூட்டிக்கொண்டு நீதி நெறி தவறாமல் பூம்புகாரை ஆண்டான். அவ்விதமே பிம்புருபன் ராஜகுமாரியையும், சீரகன் குந்தலாவையும் மணந்து கொண்டார்கள். பிம்புருபன் மந்திரத்தீவுக்கும், சீரகன் குளிகைத் தீவுக்கும் அரசர்களாகி நாகநந்தனிடம் விசுவாசத்துடன் நடந்து இனிதே வாழ்ந்தார்கள்.
சுபம்

கெட்டிக்காரன் புளுகு

ஜ. ரா. சுந்தரேசன்

காட்சி - 1.

[கிச்சாமி சைக்கிளில் விர்ரென்று போய்க் கொண்டிருக்கிறான். எதிரே போலீஸ்காரன் வருகிறான்.]

போலீஸ்: ஏய் தம்பீ! பிரேக் போடு.

கிச்சாமி: (தனக்குள்) ஐயோ, நான் என்ன செய்வேன்! பிரேக் பிடிக்க மாட்டேன் என்கிறதே!

(மூச்சைப் பிடித்துக் கொண்டு போலீஸ்காரன் சைக்கிள் பின்னால் ஓடி, கிச்சாமியை நிறுத்தி விடுகிறான்.)

போ: என்ன தம்பீ, டபாய்க்கிறியே! உன் வண்டிக்கு பிரேக் இல்லே தானே?

கிச்: ஆமாங்க....

போ: பிரேக் சரியில்லாமெ இருந்தா, கேஸ் பிடிப்பாங்கன்னு உனக்குத் தெரியுமில்லே?....

கிச்: தெரியாதுங்க!

போ: தெரியாமலே இருக்கட்டும்..பிரேக் சரியில்லாட்டி வீதியிலே போறவங்க மேலே ஏத்திப் புடுவோங்கறதாவது தெரியுமா?..

கிச்: தெரியும்.

போ: தெரிஞ்சும் என் இப்படி பிரேக் இல்லாமல் போறே? சைக்கிளுக்கு பிரேக் இல்லாத மாதிரி உனக்கும் மூளை இல்லே போலிருக்குது!

கிச்: இந்தா ஐயா, போலீஸ்! மூளை விஷயமா நீ சந்தேகப்படாதே. நான் ரொம்ப ஜோராக சைக்கிள் விடுவேன். அடுத்த ஒலிம்பிக்கிலே சைக்கிள் ரேசுக்குப் பேர் கொடுத்தாலும் கொடுப்பேன்.

போ: தம்பீ, ஒலிம்பிக்குக்கு நீ பேர் கொடுக்கறது சரி; முன்னே என் கிட்ட உன் பேர், விலாசம், வண்டி நம்பர், இதெல்லாம் சொல்லு, அப்பேன்.

கிச்: என் பேர் 'ஜில் ஜிப்!'

போ: என்ன விளையாடறே?

கிச்: என் பேர் 'ஜில்ஜிப்' தான்!

போ: தம்பீ, என்ன நீ பாட்டுக்குப் பயமில்லாமெ அளக்கறே.. எனக்குக் கோபம் வந்ததோ?..

கிச்: இந்தாய்யா கான்ஸ்டபிள்! நீ கோபிச்சுக்க, என்ன வேணுமா

ணும் பண்ணு. என் பேரு நிஜமாகவே 'ஜில் ஜிப்' தான். நான் ஒரு பிரபல குழந்தை எழுத்தாளர். நீகூடக் கேள்விப்பட் டிருப்பாயே, 'குல்குந்து' பத்திரிகையில் எழுதிக் குவித்திருக்கிறேனே.. 'பச்சை மிளகா'யில் என் கதை நிறைய வந்திருக்கிறது. 'பாதாம் அல்வா' நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றிருக்கிறேன்.

போ: (சிறிது கோபமாக) தம்பீ.. நீ என்ன பெரிய கலாட்டா பண்றியே! உன் பூனைப் பெயரையும் ஆனைப் பெயரையும் சொல்ல வேண்டாம். நிஜப் பெயரை சொல்லு.

கிச்: இந்தாய்யா கான்ஸ்டபிள் சார்.. நான் உன்கிட்டே என் நிஜப் பெயரைச் சொன்னால் எல்லார் கிட்டேயும் சொல்லிடுவே..

போ: தா தம்பி.. நீ நேரே ஸ்டேஷனுக்கு நட.

கிச்: நான் வந்தேன்னு என்னை இன்ஸ்பெக்டர் கட்டிப் பிடித்துக் கொண்டு விடவே மாட்டார்.

போ: அதென்ன தம்பீ, அப்படி?

கிச்: அப்படிக் கேள், சொல்றேன். நான் எழுதற கதையை ரொம்பப் புசழ்ந்து இன்ஸ்பெக்டர் மகன் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கு. இன்ஸ்பெக்டரும் என்னைப் புகழ்ந்து, "நீ அவசியம் ஒரு முறை என் பையனைப் பார்க்க வீட்டுக்கு வரவேண்டும்" என்றும் எழுதியிருக்கிறார்!

போ: என்ன தம்பீ நிஜந்தானா?

கிச்: (சிரித்துக் கொண்டே) நிஜந் தான்!

போ: நீ எதற்கும் ஸ்டேஷனுக்கு வந்துவிட்டுப் போ.

கிச்: என்னால் போலீஸ் ஸ்டேஷனுக்கு வர முடியாது. வேணுமானால் அட்ரஸ் கொடுக்கிறேன். 'ஜில்ஜிப்,' ஸன் ஆப் ஏ. என். தேவன், பத்தொன்பது, முச்சந்தித்தெரு..

போ: சரி! நீ போகலாம் தம்பீ!

காட்சி - 2.

போலீஸ் ஸ்டேஷன்.

இன்ஸ்: என்ன, நூத்திப்பதினெண்ணு!

இன்னிக்கும் கேஸ் நூத்திப் பதினொன்னுதானா?

போ: இன்னிக்குக் கெடச்சு துங்க! 'ஜில்ஜிப்'பைத்தான் இன்னிக்கிப் புடிச்சேனுங்க! உங்களுக்கு ரொம்பத் தெரிஞ் சவராமே ஜில்ஜிப்!

இன்ஸ்: அதென்னடாது ஜில்ஜிப்! எனக்கு ஒண்ணுமே தெரியாதுடா..

போ: அதாங்க, குழந்தை எழுத்தாளர்.. ஜில்ஜிப்!

இன்ஸ்: நாசமாப் போச்சு.. இந்த நாளிலே எழுதத் தெரிஞ்சவனெல்லாம் எழுத் தாளனா இருக்கான்.. நீ போய் எங்கேயோ ஏமாந்துட்டு வந் திருக்கே..

போ: இன்னிக்குக் காலை யிலே சைக்கிள் 'பிரேக் கேஸ்' ஒண்ணு புடிச்சேனுங்க! அந்தப் பயல் தன் பேர் 'ஜில்ஜிப்' என்றான். பெரிய குழந்தை எழுத்தாளராம்! நீங்ககூட அவன் கதையைப் புகழ்ந்து சடுதாசி எளுதினீங்களாம். உங்க மகன் கூட எளுதினதுங் களாம்! எதுக்கும் இருக்கட்டும்னு நான் வீட்டு அட்ரஸ் கேட்டு எளுதிக்கிட்டு வந்திருக்கிறேன்.

ஜில்ஜிப், ஸன் ஆப் ஏ. என். தேவன், முச்சந்தித் தெரு.

இன்ஸ்: (தலையில் அடித்துக் கொண்டு) நீயும் ஒரு போலீஸ் என்று இருந்துகொண்டு இப்படி ஏமாந்துட்டியே, வெட்கமில்லே?

போ: சார், மன்னிக்கணும் சார்.. எப்படியாவது அந்தப் பயலை நான் பிடித்து வந்து உங்கள் முன் நிறுத்தலேன்னா என் நம்பர் நூத்திப் பதினொண்ணு இல்லே!

இன்ஸ்: போ..போ!

காட்சி - 3

இடம்: ஏ. என். தேவன் வீடு. (ரகுபதி தன் அறையில் உட் கார்ந்து மும்முரமாகக் கதை எழு திக்கொண்டிருக்கிறான்.)

அப்: ஏண்டா, பாவம், நீயும் காகிதத்துக்குக் கேடா, அவுன்ஸ் கணக்கில் 'இங்கை'க் கொட்டி எழுதிக்கொண்டிருக்கே.. ஒரு வரும் உன் கதையைப் பிரசுரிக்கற தில்லே.. சுவரிலே எறிஞ்ச பந்து போலத் திரும்பி வந்துடறது.

ரகு: அப்பா, இன்னும் கொஞ்ச நாளில் பாரேன்...

அப்: முதல்லே உன் புனை பெயரை மாத்திக்கணும்! 'ஜில் ஜிப்' என்று என்னடா பேர், சகிக்க வில்லே!

ரகு: வெச்சிண்ட பேரை மறுபடி யும் மாத்திக்கப் போறதென்பது கிடையாது.

அப்: என்னமோ வெச்சுக்கோ. அந்த 'ஜில் ஜிப்' என்கிற புனை பெயர் சகிக்கவில்லை.

(வெளியே இருந்து, "மிஸ்டர் ஜில்ஜிப்..மிஸ்டர் ஜில்ஜிப்" என்ற குரல் கேட்கிறது.)

அப்: டேய், உன் பிராண சிநேகிதன் கிச்சாமி உன் பிராணனை எடுக்க வந்துவிட்டான்..

(அப்பா வெளியே போகிறார்.)

ரகு: ஹலோ.. கமான்: கிச்சாமி..மைடியர் பிரண்ட்....

கிச்: என்ன ஜில்ஜிப், இன்னிக்குப் பெரிய ஸ்டன்ட் ஒண்ணு பண்ணிட்டு வந்தேன். சைக்கிளில் அப்படியே நம்ப ஹால்ஸ் ரோடு வழியே போய்க்கொண்டிருந்தேன். எவனோ போலீஸ்காரன் திடீர்னு வந்துட்டான். "எய்..பிரேக் போடு!" அப்படீன்னான். நம்ம சைக்கிள்தான் தெரியுமே! பிடித்துக்கொண்டு விட்டான். "உங்கப்பா யார்? பாட்டி யார்? நீ எங்கே இருக்கே? எப்படி இருக்கே!" அப்படி இப்படீன்னான். சட்டுனு உன் விலாசம் ஞாபகத்துக்கு வந்தது. விட்டேன் சரடு! "என் பேர்தான் 'ஜில்ஜிப்'. நான் பெரிய குழந்தை எழுத்தாளராக்கும். நீ என்னை ஸ்டேஷனுக்கே கூட்டிக்கொண்டு போனாலும் இன்ஸ்பெக்டர் என்னை ஒன்றும் செய்யமாட்டார்" என்றேன். அவன் நிஜமாகவே நம்பி விட்டான்.

ரகு: சபாஷ் கிச்சாமி, சபாஷ்! என் பெயரை நீயாவது இந்த மாதிரி பிரபலப் படுத்தினாயே!

(வெளியே இருந்து ஜில்ஜிப்பின் அப்பா, "எய் ரகுபதி, உன்னை யாரோ தேடிக்கொண்டு வந்திருக்கிறார். வந்து பார்!" என்கிறார்.)

ரகு: (கிச்சாமியிடம்): பார்த்தாயாடா, கிச்சாமி, இந்தப் பிரபல எழுத்தாளரைத் தேடிக்கொண்டு எத்தனை பேர் வருகிறார்கள் என்று. வா, போய் வந்தவருக்குப் பேட்டி கொடுக்கலாம்...

(வெளியிலே வெள்ளை வேஷ்டி கட்டிக்கொண்டு ஒருவர் நிற்கிறார்.)

அப்பா: சார், இவன்தான் என் பையன் ரகுபதி. இவனுடைய புனைபெயர்தான் 'ஜில்ஜிப்' என்பது. பிரபலமான குழந்தைகள் பத்திரிகைகளுக்கெல்லாம் கதைகள் எழுதுவான்..ஆனால்..

ரகு: (பல்லை இளித்துக் கொண்டே) ஆமாம்..நான்தான் 'ஜில்ஜிப்; உங்களைப் பார்த்தால் 'குல்கந்து' ஆசிரியர் மாதிரியே இருக்கிறது.

வந்: எனக்குக் குல்கந்தும் தெரியாது; ஜிலேபியும் தெரியாது. ஆமாம், உன் பக்கத்தில் இருக்கிற பையன் பேர் என்ன?

ரகு: இவன்தானே? இவன் என் பிராண சிநேகிதன் கிச்சாமி. ஈருடலும் ஒருயிருமாய், ரேஷன் அரிசியும் களிமண்ணுமாய், நாங்கள் கலந்திருக்கிறோம். இவனுடைய அப்பாதான் பிரபல வக்கீல் வராக மூர்த்தி. உங்களுக்குக்கூட இவன் அப்பாவைத் தெரிந்திருக்கலாம். ஆமாம்..நீங்கள்..

வந்: நான்தானே? நான்தான் நம்பர் நூத்திப்பதினொண்ணு. உன் ஆத்ம சிநேகிதன் கிச்சாமியை என்னுடன் ஸ்டேஷன் வரைக்கும் அழைத்துக்கொண்டு போகப் போகிறேன்.

கிச்: ஹா..என் சைக்கிளைப் பிடித்த போலீஸ்காரனா நீ? அட பாவி! இப்படி வேஷ்டியைக் கட்டிக்கொண்டு ஆசிரியர் போல வந்து ஏமாத்திட்டியே...

அப்: (ஒன்றும் புரியாமல்) என்னப்பா..நீ சொல்றது ஒண்ணும் புரியலியே...

போ: (சிரித்துக்கொண்டே) காலையிலே சைக்கிள் பிரேக் சரியில்லேன்னு பிடிச்சேன். இவன், "நான்தான் ஜில்ஜிப்..பெரிய குழந்தை எழுத்தாளர். இன்ஸ்பெக்டர் என்னை ஒண்ணும் பண்ண மாட்டார். அவர்கூட என்னைப் புகழ்ந்திருக்கார்...அப்படீன்னு கப்ஸா அடிச்சான். நான் நம்பிட்டேன். இருந்தாலும், அட்ரஸ் எழுதி வாங்கிக்கிட்டேன். இங்கே வந்தா ஆளு வசமா மாட்டிக்கிட்டான். வா தம்பீ, கிச்சாமி.. கெட்டிக்காரன் புளுகு எட்டு மணி நேரங்கூட நிக்கலையே..

கிச்: (அழாத குறையாய்) டேய் ரகுபதி. என்னடா பண்ணறது?

அப்: டேய் குழந்தை, அழாதே..நானும் ஸ்டேஷனுக்கு உன்னோடு வறேன். இன்ஸ்பெக்டர்கிட்டே சமாதானம் சொல்லி உன்னைக் கூட்டிக் கொண்டு வந்துடறேன். நீ இன்ஸ்பெக்டர் முன்னால், "இனிமேல் கப்ஸா அடிக்கறது இல்லே"ன்னு சொல்லிடணும், சரிதானே?

கிச்: சரி...

(எல்லாரும் ஸ்டேஷனுக்குச் செல்கின்றனர்.)

பழ வியாபாரி: பழத்தைத் தின்னுப் பார், தம்பி, அசல் கல்கண்டு கட்டிதான். 1 டசன் ஒரு ரூபா.

பையன்: அப்போ பழத்தை நீயே வச்சுக்கோ. நான் அரையணாவுக்குக் கடையிலே கல்கண்டை வாங்கித் திங்கறேன்.

—(K. 398.)

அசடா, அறிவாளியா?

‘தம்பி’

மூன்று பேர் கிராமத்திலிருந்து பட்டணத்துக்குக் கிளம்பினார்கள். தாங்கள் சேர்த்து வைத்த சில பொருள்களை பட்டணத்துச் சந்தையில் விற்று வருவதற்கு அவர்கள் அடிக்கடி பட்டணம் போவது உண்டு.

ஆனால் இந்த முறை அவர்கள் ஏறிவந்த வண்டியின் மாடுகள் நடு நடுவே முரட்டுத்தனமாய்ப் பிடிவாதம் பிடிக்கவே, பட்டணம் போய்ச் சேருவதற்குள் நன்றாக இருட்டி விட்டது. சாதாரண நாளாயிருந்தால் பரவாயில்லை. அப்போது அமாவாசை சமயம். மேலும் அந்த வழியில் திருடர் பயம் அதிகம்.

“ஐயையோ! இது மாதிரி ஆகும் என்று தெரிந்திருந்தால் இன்று நான் வந்தே இருக்க மாட்டேனே!” என்றான் ஒரு வியாபாரி. அவன் பட்டணத்திலிருந்து சரக்கு வாங்கி வருவதற்காக மடி நிறையப் பணம் எடுத்து வந்திருந்தான். ஆகவே அவன் திருடர்கள் என்ற பேச்சைக் கேட்பதற்கே அஞ்சினான்.

“என்னப்பா! இவ்வளவு மோசமான மாட்டைக் கட்டிக்கொண்டு



வந்தாயே! நாம் பத்திரமாய்ப் போய்ச் சேருவோமா?'' என்று கவலைப்பட்டான் மற்றொரு துணி வியாபாரி. ஒரு மூட்டை நிறைய நல்ல துணிகளை எடுத்துக்கொண்டு கிளம்பி இருந்தான் அவன். வழியிலே திருடர்களிடம் அவ்வளவு துணிகளையும் பறிகொடுக்க அவன் சம்மதிப்பானா?

மூன்றாவது மனிதன் தான் வண்டிக்குச் சொந்தக்காரன். அவன் எழை. சந்தைக்கு அவன் கொண்டு சென்றதெல்லாம் ஒரு கூடை நிறைய மாடப்புறாக்களே. அவன் மட்டும் ஒன்றும் பேசாமல் மௌனமாக வண்டி ஓட்டினான்.

அவன் கையில் பணமே இல்லை. ஆகவே அவன் அன்று காலையில் வியாபாரியிடமும் ஜவுளிக்காரனிடமும் போய்க் கடன் கேட்டான். யாரும் கடன் தர மறுத்து விட்டார்கள்.

வேறு வழியில்லாமல் அந்தக் குடியானவன் தான் அருமையாக வளர்த்த மாடப் புறாக்களை மறுநாள் பட்டணத்துச் சந்தையில் விற்பதென்று தீர்மானித்துத் தன் வண்டியைப் பூட்டிக்கொண்டு கிளம்பினான்.

காலையில் குடியானவனுக்கு உதவ மறுத்த வியாபாரியும் ஜவுளிக்காரனும், குடியானவன் வண்டி கட்டிக்கொண்டு சந்தைக்குப் போகிறான் என்று தெரிந்ததும் தாங்களும் அவன் வண்டியில் வருவதாய்ச் சொல்லிக் கிளம்பினார்கள். அந்தக் குடியானவன் ரொம்ப நல்லவனாதலால் அவர்களை வெறுக்காமல் தன் வண்டியில் எற்றிக்கொண்டு போனான்.

மற்ற இரண்டு பேரும் அவனிடம் நன்றியோடிருப்பதற்குப் பதிலாக அவனை அப்பாவி, அசடு என்று மதித்துப் பேசி வந்தார்கள்.

பயந்தது நடந்து விட்டது. இருட்டில், திடீரென்று சில கொள்ளைக்காரர்கள் வண்டியைச் சுற்றிக்கொண்டார்கள். பணம், துணிமூட்டை எல்லாவற்றையும் பறித்துக்கொண்டு, அவர்களையும் சிறைப்படுத்தினார்கள்.

சிறிது தூரத்திலிருந்த ஒரு மலையடிவாரத்துக்கு எல்லாரும் போனார்கள். திருடர் தலைவன் மூன்று பிரயாணிகளையும் பார்த்து, "நல்ல வாட்ட சாட்டமான ஆட்கள் தான் நீங்கள். சரி சரி, என்னிடம் ஒழுங்காக வேலைசெய்து வருவதானால் உயிர்ப் பிச்சை தருகிறேன்'' என்றான்.

பணத்தையும் புதுத் துணிகளை யும் மட்டும் எடுத்துக்கொண்டு அந்தத் தலைவன் புறாக் கூடையை எறிந்துவிட்டான்.

ஆனால் குடியானவன் தலைவனிடம் மன்றாடிப் புறாக்கூடையைத் தானே வைத்துக்கொண்டான். தன் ஆகாரத்திலேயே அவைகளுக்கும் தீனி போட்டான்.

வியாபாரியும் ஜவுளிக்காரனும் வேலை செய்தது போக ஒழிந்த நேரங்களில் தங்கள் விதியை நினைத்து அழுதுகொண் டிருப்பார்கள். ஆனால் குடியானவன் மட்டும் தன் அருமைப் புறாக்களோடு கொஞ்சிக்கொண் டிருப்பான். அவனைப் பார்த்தால் மற்ற இரண்டு பேருக்கும் எரிச்சலாக வரும். அவனால்தான் தாங்கள் திருடர்களிடம் அகப்பட்டுக் கொண்டதாக எண்ணினார்கள்.

குடியானவன் தன் விதியை நினைத்து அழுதுகொண் டிருக்கவில்லை. ஒரு நாள் இரவு யாரும் அறியாதபோது ஒரு துண்டுக் காகிதத்தில் தன் நிலையைப்பற்றி எழுதி அந்தக் காகிதத்தை ஒளித்து வைத்துக் கொண்டான். மறு நாள் காலையில் தன் புறாக்களுக்குத் தீனி கொடுக்கும்போது ஒரு புறாவின் காலில் அதைக் கட்டிவிட்டான்.

அன்று காலையில் குடியானவன் சந்தோஷமாகத் தன் புறாக்களோடு கொஞ்சிக்கொண் டிருப்பதைப் பார்த்த திருடர் தலைவன் கோபமாக, "காலையில் என்ன விளையாட்டு! எழுந்து வேலையைப் பார்!" என்று அதட்டிவிட்டு, புறாக் கூடையைப் பலமாக எட்டி உதைத்தான். அந்த வேகத்தில் மூடி திறந்துகொண்டது. உள்ளே இருந்த புறாக்களெல்லாம் தப்பிக் கொண்டு பறந்து போயின!

மறு நாள் விடியற்காலையில் எல்லாரும் தூங்கிக்கொண் டிருந்த போது, கிராமத்து மக்களும் போலீஸ்காரர்களுமாக ஒரு பட்டாளம் சத்தம் செய்யாமல் வந்து அவர்களைச் சூழ்ந்துகொண்டது. மடமடவென்று திருடர்கள் எல்லாரும் பிடிபட்டனர்.

திருடர் தலைவனைப் பார்த்து இன்ஸ்பெக்டர், "சரியான சமயத்தில் இங்கிருந்து கடிதம் வந்தது" என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

"கடிதமா, எது?" என்று விழித்தான் திருடன். மற்ற எல்லோரும் திருதிருவென்று விழித்தார்கள்.

அப்போது குடியானவன் தலைவனைப் பார்த்துப் புன்சிரிப்புடன், "நேற்றுக் காலையில் என் கடிதத்தைக் கொண்டு போகும்படி நீங்கள்தானே புறாக்களை அனுப்பினீர்கள்!" என்றான் போலி மரியாதையுடன். பழக்கப்பட்ட புறாக்களாகையால் அவை நேரே குடியானவன் வீட்டைத் தேடிப் பறந்து போயின.

வியாபாரியும் ஜவுளிக்காரரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். அவர்களுக்கும் இப்போதுதான் விஷயம் புரிந்தது. அசடு, அப்பாவி என்று அவர்கள் நினைத்த குடியானவன் உண்மையில் மகா அறிவாளி என்று தெரிந்துகொண்டார்கள்.

பிராயச்சித்தம்

ஏ. எஸ், ராகவன்

நன்றாக இருட்டி விட்டது. அமாவாசைக்கு முதல் நாளானதால் இருளின் கருமை பயங்கரமாக இருந்தது. ஆனால் இந்த இருட்டைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் நடந்துகொண்டிருந்தான் தியாகு. அவன் மனத்திலே எக்கம் கவிந்திருந்தது. கோபம் கொந்தளித்தது.

தோட்டத்தை அடைந்ததும் வேலைக்காரச் சின்னான் இருக்கிறானோ என்று பார்த்தான். நல்ல வேளை, அவன் இல்லை. இருந்தால் வீட்டிற்குத் தகவல் அனுப்பிவிடுவான்.

உள்ளே நுழைந்த தியாகு சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுத் தோட்டத்தின் நடுவிலிருந்த சிறு வீட்டை அடைந்தான். அங்கே பண்ணை மாடுகள் கட்டப்பட்டிருந்தன. மாடியில் தனி அறை உண்டு. அங்கே மாம்பழங்கள், தேங்காய், மற்றும் நெல் மூட்டைகள் முதலியன கிடந்தன. அந்த அறையை அடைந்தான் அவன். வெளிப்புறம் பூட்டியிருந்தது. அதைப் பார்த்ததும் சின்னான்மீது கோபம் வந்தது அவனுக்கு. 'இவனை யார் இதைப் பூட்டச் சொன்னது? இப்போது நான் எங்கே படுத்துக் கொள்வது?' என்று முணுமுணுத்தபடி தியாகு கீழே இறங்கி வந்தான். மூலையில் வைக்கோற்போர் கண்ணில் பட்டது. அங்கே போகலாம் என்று கிளம்பினான்.

அந்த இடத்தை அடைந்ததும்தான் அவனுக்குச் சந்தோஷம் பிறந்தது. நல்ல பாதுகாப்பான இடம். யாரும் பார்க்க முடியாது. மடியைத் தொட்டுப் பார்த்து அவன் ஒரு கணம் தன் சாமர்த்தியத்திற்காக வியந்து கொண்டான். படுத்து யோசிக்க ஆரம்பித்தான்.

இரவு ஊர்ந்தது. சின்னான் வரவே இல்லை. அவன் காவல் பார்க்கும் லட்சணம் இப்போது புரிகிறது. இப்படி இருந்தால் பண்ணை உருப்படுமா? அப்பாவிடம் சொல்ல வேண்டும். ஆனால் அப்பாவையே இனி அவன் பார்க்கப் போவதில்லை! அவர் மீது அவனுக்கு எற்பட்டுள்ள கோபம் கொஞ்சநஞ்சமல்ல. 'பிள்ளையைவிட அவருக்கு அந்த.. அந்த.. காமு என்கிற காமாட்சிதானே உயர்வாகப் போய்விட்டாள்! ..இருக்கட்டும்; அவருக்கு, பின்னால் என்ன நடக்கும் என்பதை உணர்ந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கும்.'

காமுவை நினைத்ததும் அவனுக்கு முதலில் கோபம்தான் முன் நின்றது. அவள் அவனுடைய அத்தையின் பெண்தான். ஆரம்பத்தில் ரொம்ப நல்ல பெண் என்று அவளை எண்ணியிருந்தான். நாளாவட்டத்தில்தானே தெரிகிறது? எல்லாம் வெறும் வேஷம். அவனைக் காட்டிக் கொடுத்து விட்டாள் அவள்.

தியாகுவுக்குப் பள்ளிக்கூடம் போவதும் வருவதும்

பிடிக்காத விஷயங்கள். ஆனால் தினமும் காலையிலும் மாலையிலும் அருமையான இரட்டை மாட்டு வில் வண்டியில் பள்ளிக்கூடம் போவது மட்டும் பிடித்திருந்தது. பகலில் சாப்பாடு வந்துவிடும். ஹோட்டலிலேயே சாப்பிட வேண்டுமென்று அவனுடைய ஆசை. இதற்கு அப்பா இடம் தர மாட்டார். மேலும் காமு பள்ளிக் கூடத்திற்கு அவனுடன் வருவ தால் இருவருக்கும் சேர்த்து, சாப் பாடு வந்துவிடும். அவளை அவன் வெறுத்ததற்கு வேறொரு காரணம் கூட உண்டு. அவள் அவனைவிட ஒரு வகுப்பு மேலே படிக்கிறாள். வெட்கக்கேடு! சில சமயம் அவள் அவனுக்குப் பாடம் சொல்லித் தர வரும்போது அவனுக்கு ஆத்தி ரமாக இருக்கும். தன்னைவிட அவள் புத்திசாலி என்பதை அவன் ஏற்க விரும்பவில்லை.

அன்று செலவுக்குக் கையில் காசு இல்லை. அப்பாவின் சட்டை யைச் சோதனை செய்து ஒரு ரூபாய் எடுத்துக்கொண்டான் அவன். இதைக் காமு பார்த்துவிட்டாள். பள்ளிக்கூடத்திலிருந்து வரும் போது அவன் அவளைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். "தயவு செய்து சொல்லிவிடாதே. அப்பா முதுகுத் தோலை உரித்துவிடுவார்" என்றான்.

அவள் சிரித்தபடியே, "நன்றாய் உரிக்கட்டுமே. உனக்கு வேண்டி யதுதான்" என்றாள்.

அவன் கோபத்துடன், "சரி, போய்ச் சொல்லிக்கொள். பீடை! ..உன் முகத்திலேயே இனிமேல் விழிக்கப் போகிறதில்லை" என்று கத்தினான்.

அவளுக்கு ஆத்திரம் பொங்கி யது. எப்போதும் தன்னை உதா சீனம் செய்யும் தியாகுவைப்பற்றி அப்பாவிடம் சொல்ல வேண்டும் என்றுதான் தீர்மானித்தாள்.

சாப்பாட்டின்போது அப்பா அவனைக் கேட்டார்: "எலே, சட் டையிலேருந்து ஒரு ரூபாய் எடுத் தியா?"

"இல்லையே!" என்று அவன் பதிலளித்தான். குரலில் அசட் டுத் தைரியம்.

"இல்லையா? உன்னிடம் பணம் ஏது? சட்டைப் பையில் முழுசாகப் பதினைந்து அணா இருக்கிறதே! அது ஏது?"

அவன் திணறினான். விழித்தான். அப்பாவின் கோபம் பொல்லாதது. ஒரு புறம் காமு சிரிப்பை அடக்க முடியாமல் சிரமப்பட்டுக்கொண் டிருப்பதைக் கண்டான். அவள் மீது ஆத்திரம் வந்தது அவனுக்கு.

"என்னடா, கேட்கிறேன்? பதில் சொல்லேன்" என்று அப்பா கத்தினார். அப்பாவிடம் ஒரு குணம். இவ்வளவு பணம், காசு இருந்தும் அவனுக்குக் காசு கொடுக்க மாட்டார். அவன் கெட்டு விடுவானாம்! இதற்கு அம் மாவும் கூட அநுசரணை.

"ஆமாம், எடுத்தேன்" என்று ஒப்புக்கொண்டான் தியாகு.

'பளார்' என்று ஓர் அறை விழுந்தது. அவன் நடுங்கிப் போய் விட்டான். நல்ல வேளை, மேற் கொண்டு அடி விழாதபடி அம்மா தடுத்துவிட்டாள்.

சாப்பிட்ட பிறகு அவன் வீட் டிற்கு வெளியே வந்தான். அவ மானம் அவனைத் துளைத்தது. அப் பாவிடம் அவன் எவ்வளவோ தடவை உதைபட் டிருக்கிறான்.

ஆனால் இந்தத் தடவையைப்போல அவன் அவமானம் அடைந்ததே கிடையாது. அவனைக் கண்டால் யாருக்குமே பிடிக்கவில்லை. எங்கேயாவது ஓடிவிட வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு. சப்தம் செய்யாமல் கிளம்பித் தோட்டத்திற்கு வந்தான். வரும்போது முன்னேற்பாடாக அப்பாவுடைய பையிலிருந்து பத்து ரூபாய் எடுத்துக் கொண்டுதான் வந்தான். ஊரை விட்டே போவதாயிருந்தால் பணம் வேண்டாமா? தன்னை உதாசீனம் செய்யும் அவரிடமிருந்து கேட்டு வாங்குவதை விட, கேட்காமல் எடுப்பதே நல்லது என்று எண்ணினான்.

காலையில் எழுந்ததும் முதல் வேலையாக, கரூர் போகும் பஸ்ஸில் ஏறிவிட வேண்டும். அங்கே அவனுடைய அக்காவின் வீடு இருக்கிறது. ஆனால் அங்கே போவதாக அவனுக்கு உத்தேசமில்லை. அங்கிருந்து அடுத்த ரெயிலில் திருச்சி போய்விடலாம். அப்புறம் ஜாலியாகச் சினிமா பார்த்துவிட்டு, இஷ்டம்போலச் சாப்பிட்டுவிட்டுப் பிறகு....

யோசனைகளிலேயே மூழ்கிய தியாகு அயர்ந்து தூங்கிவிட்டான். விழித்துப் பார்த்தபோது நன்றாக விடிந்துவிட்டது தெரிந்தது. சின்னான் மாட்டுத் தொழுவத்தில் குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டதும் தியாகுவுக்குப் பயமாயிருந்தது.

வைக்கோல் எடுக்க வந்தான் சின்னான். முன்புறமாக இருப்பதை எடுத்துக்கொண்டு தொலையக் கூடாதா, பின்புறம் வந்து சோதனை செய்ய ஆரம்பித்தான். அதே சமயம் தியாகுவைப் பார்த்துவிட்டான். "தம்பி, இங்கேயா இருக்கே?.. ராத்திரி ஊர் பூரா உன்னைத் தேடியாச்சு.. உங்கம்மா ஒரே கவலையா இருக்காங்க.. குளத்திலே கூடத் தேட ஆள் போயிருக்குது. நல்ல புள்ளை நீ!" என்றான்.

தியாகு தனக்குள் சிரித்துக்கொண்டான்: 'நன்றாகத் தேடட்டும், யார் வேண்டாம் என்றது? இவர்களுக்கு இன்னமும் வேண்டும். பிள்ளை வீட்டிலிருக்கிறவரை அடிப்பது, காணாமற்போனதும் தேடுவது!'

"சின்னான்!" என்று கூப்பிட்டான் அவன்.

"என், தம்பி" என்று மகிழ்ச்சியுடன் அருகில் வந்தான் சின்னான்.

"நான் இங்கே இருக்கிறது யாருக்கும் தெரியக்கூடாது" என்றான் தியாகு.

அவனை மிரள மிரளப் பார்த்து விட்டுச் சின்னான் துயரமான குரலில், "போ, தம்பி! வீட்டிலே அம்மா படற கஷ்டத்தை என்னாலே பார்க்க முடியல்லே...என்ன இருந்தாலும் நீ செஞ்சுது தப்புத்தான். பணம் வேணும்னு அம்மாவைக் கேட்டா தரமாட்டாங்களா?.. உன்னைப் போலத்தானே காமுவும். நைஸா தனக்கு வேணுங்கற போதெல்லாம் அம்மா கிட்டே பணம் வாங்கிடுதே!" என்றான்.

"அவளைப்பற்றிப் பேசாதே, சின்னான்.. எனக்குப் பொல்லாத கோபம் வரும்" என்றான் தியாகு ஆத்திரத்துடன்.

"சரி. பேசல்லே... நீ இங்கேயே இரு.. நான் அம்மா கிட்ட மட்டும் சொல்லிட்டு ஓடியாந்துடறேன்" என்று கிளம்பினான் சின்னான்.

அவனை அவசரமாகத் தடுத்து நிறுத்தினான் தியாகு. "நீ போய்ச் சொல்லவேண்டாம்.. நான் சொல்லிக்கறேன்... சின்னான், இளநீர் இருந்தால் கொண்டுவாயேன்" என்றான்.

"இதோ வந்துட்டேன்" என்று சின்னான் வெளியே போனான். அவன் போனதும் தியாகு பெருமையுடன் மாடுகளின் அருகில் போய் நின்றான். தன்னைக் காணாமல் எல்லோரும் தேடுவது அவனுக்குப் பெருமையாயிருந்தது. இப்பொழுதே இப்படி. நாளைக்கு அவன் திருச்சி போய்விட்டால் என்ன செய்வார்களோ? என்ன வேண்டுமானாலும் செய்யட்டுமே!

"தம்பி, இந்தா செவ்விளநீர்.. குடி" என்று சின்னான் கையில் இளங்காயுடன் உள்ளே வந்தான்.

தியாகு அதை வாங்கி ஒரே வாயில் குடித்தான். எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது! தலை மறைவாக இருப்பது கூட ஒரு விதத்தில் சந்தோஷமாயிருக்கிறது என்று அவன் நினைத்துக் கொண்டான்.

"சின்னான்!" என்று வெளியே குரல் கேட்டது. தியாகு பதறிப் போய் எழுந்தான். அதைக் கண்டு சின்னான் சிரித்துக்கொண்டான். தியாகு வைக்கோல் போரைத் தஞ்சமடைந்தான். அங்கே பால் பாத்திரத்துடன் நுழைந்தாள் காமு. அவளைக் கண்டதும் திகைத்து விட்டான் சின்னான். "என்ன இது, காமாச்சி.. முகமெல்லாம் வீங்கி இருக்கிறது?" என்று கேட்டான்.

"ஒண்ணுமில்லே.."

"ஒண்ணுமில்லையாவது? முகமெல்லாம் எப்படிச் சிவந்து போயிருக்கிறது? அடேடே! இது என்ன கன்னத்திலே விரல் தழும்பு?...ஐயா அடிச்சாரா?"

"ஆமாம்."

"பாத்தியா? முதல்லே ஒண்ணுமேயில்லேன்னு சொன்னியே.. நீ நல்ல பொண்ணுச்சே.. ஐயாவுக்கு ரொம்பக் கோவம் வருது வர, வர."

அவள் பதில் பேசாமல் நின்றாள்.

"என் உன்னை அடிச்சாரு, ஐயா?.. சொல்லு, காமச்சி" என்று உரிமையுடன் கேட்டான் சின்னான்.

"எதுக்கோ அடிச்சாரு?... அதை என் கேக்கரே?" என்றாள் அவள்.

தியாகு இந்தச் சம்பாஷணையைக் கேட்டு உள்ளம் குளிர்ந்தான். காமுவுக்கும் உதை கிடைத்ததில் அவனுக்குத் திருப்தி ஏற்பட்டது.

சின்னன் விடாமல் கேட்க ஆரம்பிக்கவும் அவளே சொல்லி விட்டாள் நடந்ததை. "காலை யிலே மாமா ரொம்பக் கோவமா யிருந்தாரு.. அவர் பையிலே பத்து ரூபா நோட்டைக் காணே மாம்.. நான்தான் எடுத்தேன்னு சொன்னேன். உதை கிடைச்சுது."

"நீ எதுக்காக எடுத்தே?"

"தையல் நூல், ஊசி இதெல் லாம் வாங்கறத்துக்கு வேண்டி யிருந்தது..."

"பைத்தியக்காரப் புள்ளையா இருக்கியே!.. நேத்து ராவுதானே தியாகுவுக்கு உதை விழுந்திச்சு. அதைப் பார்த்த பின்பும் நீ இப்படி நடக்கலாமா?.."

"ஆமாம் .. சின்னன்.. தியாகுவைப் பத்தி எதா வது தெரிஞ்சுதா? அவ னுக்கு என் மேலே கோவம். நான்தான் மாமா கிட்ட அவனைக் காண் பிச்சுக் கொடுத்தேன்னு. ஆனா பாரு, நான் அவர் கிட்டெ ஒண்ணுமே சொல் லல்லே. மாமாவுக்கு இதெல்லாம் நான் சொல் லித்தான் தெரியணுமா? பண விஷயத்திலே பலே சூரராச்சே!"

"நல்லாச் சொன்னே, காமாச்சி .... இல்லாட்டி ஐயா இவ்வளவு சேர்க்க முடியுமாம்மா?.."

"சின்னன், சின்னன். இதோ பாரு..இது எது பத்து ரூபா நோட்டு இங்கே கெடக்குது?" என்று காமாக்ஷி [illegible] பிரமி[illegible] போனான். [illegible] கூட நிலை குலைந்து அவசரமாக மடியைப் பார்த்தான். அடடா! இளநீர் சாப் பிடும்போது நோட்டு எப்படியோ நழுவிவிட்டது!

தியாகு வெளியே வந்தான். அவனைக் கண்ட காமு விழித்தாள்.

தியாகு அவள் தோள்மீது கை வைத்தபடி, "காமு, அதை நீ வைத்துக் கொள்..அதை எடுத் தவன் நான். அதுக்காக நீதானே உதை வாங்கினே?.. தையல் ஊசி, நூல் எது வேண்டுமோ வாங் கிக் கொள்" என்றான்.

அவள் பேச முடியாமல் கண் ணீர் பெருக்கினாள். சின்னன் பால் கறப்பதில் முனைந்தான்.



எண் விளையாட்டு

மாணிக்கம்

இந்த ஆட்டத்துக்குக் குறைந்தது 10 பேராவது இருக்க வேண்டும்.

ஆடும் விதம்: முதலில் ஒரு பெரிய வட்டம் போட்டுக் கொள்ள வேண்டும். தலைவன் மட்டும் வட்டத்தின் நடுவே நிற்பான். மற்ற ஆட்டக்காரர்கள் வட்டத்தின் கோட்டின்மேல் ஒருவர் பின் ஒருவராக 4 அடிபோல இடைவெளி விட்டு நிற்பார்கள். தலைவன் ஊதலை ஊதியவுடன் எல்லாரும் வட்டத்தைச் சுற்றி ஓடவேண்டும் ஒவ்வொருவருக்கும் 2 முதல் 10 வரையில் வரிசைக் கிரமமான எண் கொடுத்திருப்பான் தலைவன்.

இப்பொழுது தலைவன் நூறு எண்களுக்குள் ஒரு நம்பரைச் சொல்லிக் கட்டளையிடுவான் உடனே ஓடுபவர்கள் அந்த எண்ணைத் தன்னுடைய எண்ணால் மீதி வராதபடி வகுக்க முடியுமா என்று பார்க்க வேண்டும் மீதி வராமல் வகுக்கக் கூடியவர்கள் உடனே நின்றுவிடவேண்டும். நிற்காமல் ஓடிக்கொண்டேயிருந்தால் அவன் அவுட் உடனே அவன் வட்டத்துக்குள் நின்றுவிடவேண்டும் யார் கடைசிவரையில் தப்புக் கணக்குப் போடாமல் ஓடுகிறார்களோ அவன் தான் வின்னர் அவனுக்கு முதலில் அவுட்டானவன் ரன்னர். இதற்குப் பரிசு வைத்துக்கூட விளையாடலாம்.

உதாரணம்: தலைவன் 63 என்று சொல்வதாக வைத்துக்கொள்வோம். 3,7.9 இந்த நம்பருள்ளவர்கள் டக்கென்று நின்றுவிடுவார்கள். நிற்காவிட்டால் அவுட். பின்ன எண்களைத் தலைவன் சொல்ல மாட்டான் நூற்றுக்கு மேலும் சொல்லமாட்டான். ஆடிப் பாருங்கள். மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(U)23. உலகநாதன், தஞ்சாவூர். 24. உமா, ஜயசிம்மன், C. V., சென்னை-20. 25. உமாராணி, லோகமூர்த்தி, B., கோயம்புத்தூர். 26. உமா, S., நாகர்கோயில். 28. உமார், S. K., கீரனூர். 29. உஷா ராணி, M. S., சென்னை-4. 30. உமா, உஷா, கல்கத்தா. 31. உமாதேவி, ராஜாபாதர், M., சென்னை-17.

(V) 130. வைத்தியநாதன், R., சென்னை-14. 131. மகாதேவன், R., பாப்பநாயக்கன் பாளையம். 132. விஸ்வநாதன், கிருஷ்ணன், A., ஆதிகுடி. 133. விஸ்வநாதன், K., தஞ்சாவூர். 134. வெங்கடேசன், N., சென்னை-4. 135. வைத்தியநாதன், சிவராமகிருஷ்ணன், சென்னை-11. 136. வேலு மணி, M., பாப்பநாயக்கன்பாளையம். 137. வேதநாயகி, G. S., கோபி செட்டிப் பாளையம். 138. வெங்கடேசன், A., கீழ ஆலத்தூர். 139. வீராரெட்டி, சரோஜினி, T., ராயபுரம். 140. வனஜா, கிருஷ்ணசாமி, R., மஞ்சக்குப்பம். 141. வேணுகோபால், சுசீலா, L., சத்தியமங்கலம். 142. வெங்கடபதி, லக்ஷ்மிநாதன், T., கடலூர், N. T. 143. வரதராஜன், தியாகராஜன், சுந்தரம், செங்கம். 144. வரதப்பன், K. R., கொங்கனுபுரம். 145. விஜயராகவன், V., போதனூர். 146. வீரபாகு, A., சென்னை-1. 147. வாசன், M. S., சென்னை-12. 148. விஜயலக்ஷ்மி, S., நீர்வேலி, சிலோன்.

(A) 195. ஆதப்பன், A.D., காரைக்குடி. 196. ஆதிநாராயணன், R., பல்லடம். 197. அருணசலம், K.R., காவாய்ப்பட்டி. 198. அப்துல், P.S., குன்னத்தூர். 199. அருணசலம், A., சென்னை - 5. 200. அனந்தகிருஷ்ணன், V., கல்லிடைக்குறிச்சி. 201. அழகப்பன், C., மொரட்டுவா, சிலோன். 202. அபூபக்கர், M.I.S., கொழும்பு. 203. அனந்தபத்மநாபன், ராமநாதன், P., நாகப்பட்டினம். 104. அமுல்ராய், S. R., மெல்போர்ன். 205. அமார் ஜோதி, ராஜசேகரன், சிதம்பரம், K., சென்னை-4. 206. அன்சாரி,

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி......................

(தேதி, மாதம், வருஷம்)

ஜுலை' 52 கூபன் நெ:

ஹமீத், ஆழ்வார் திருநகரி. 208. அமிர்தலிங்கம், சாந்தா, நிர்மலா, C. D., சேலம். 209. அப்துல் ஹாகூர், N. M., ஆழ்வார் திருநகரி. 210. ஆச்சார், S T., சென்னை-4. 211. அழகியாதேவி, பிரஹதாம்பாள், மீனுக்ஷி, விசாலாக்ஷி, சொக்க லிங்கம், S.K., சென்னை-4. 212. அலமேலு, C., மோயர் காம்பு. 213. அகிலாண்டம், பிரஹதாம் பாள், K., சென்னை - 4. 213. அமிர்தம், R., சிவகங்கை. 214. ஆறுமுகம், M., மதுரை. 215. அனந்த நாராயணன், K. V., சென்னை-4. 216. ஐயாதுரை, R., ராமராஜபுரம். 217. அன்பு மணி, சௌரிபாய், K., திரு மங்கலம். 218. அனந்தநாதன், G., சென்னை-4.

★★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் 1952-ஆம் வருஷக் கூபன்களைத் தான் அனுப்பவேண்டும். 1951-ஆம் வருஷக் கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★★

(B) 160. பாலகிருஷ்ணன், N. A., ராசிபுரம். 161. பால தண்டபாணி, S. R., சத்திய மங்கலம். 162. பாலா, லக்ஷ்மி, T. S., புதுடில்லி. 163. பால குமாரன், V., காரமடை, சிலோன். 165. பாலகிருஷ்ணன், கணபதி, K., ராஜபாளையம். 166. பூபால் ராஜ், J., தஞ்சாவூர். 167. பால கிருஷ்ணன், P.V., சிவகாசி. 168. பாலசுப்பிரமணியன், K., கோயம்புத்தூர். 170. பாஸ்கரன், பாலசுப்பிரமணியன், திருப்பத்தூர். 171. பாலகிருஷ்ணன், S., திருச்சிராப்பள்ளி. 172. பலராமன் V. T. D., கடலூர். O. T. 173. பாபு ராஜேந்திரன், V., பாளையங் கோட்டை. 174. பாக்கியம், K. R., ஹாஸ்பெட். 175. பால சுந்தரம், C. D., பெங்களூர்-5. 176. பாலசுப்பிரமணியன், M. S., மதுரை. 177. பாலசுப்பிரமணி யன், S.B., சங்ககிரிதுர்க்கம். 179. பாபு, S., கோலார் - தங்கவயல். 180. பாலகிருஷ்ணன், V. A., வரகூர். 181. பாஸ்கரன், K.P., சென்னை-1. 182. பத்திரிநாரா யணன், J., சென்னை-1. 183. பால சுப்பிரமணியன், S., சென்னை-4. 184. பாலசுப்பிரமணியன், R., சென்னை - 17. 185. பாப்பி, R., கரூர். 187. பாபு, C., சென்னை-11. 188. பீர்முகமத், M., போகொடு வதாரா, சிலோன். 189. பால சுப்பிரமணியன், M., திண்டுக்கல். 190. பாலசுப்பிரமணியன், T. K., சென்னை-4. 191. பாலசுப்பிர மணியன், R., சென்னை-4. 192. பாலசுப்பிரமணியன், B., திருநெல் வேலி. 193. பாலன், A., கோயம் புத்தூர்.

(மீதி அடுத்த இதழில்)

உண்மை எது?

'எல்லார்வி'

பார்த்திபன் பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பிய போது அவன் மனம் ஒரேயடியாகக் குழம்பிக் கிடந்தது. அவன் முகத்திலே காணப்பெற்ற சோர்வைக் கண்ட அவன் தம்பி மணி, தங்கை ராஜேசுவரி, தாய் பாலாம்பாள் எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொண்டு, "என்னடா பார்த்திபா, எண்டா என்னவோ போல் இருக்கிறாய்?" என்று கேள்வியாகக் கேட்டு அவனைத் துளைத்து எடுத்தார்கள். அவர்களெல்லாம் கவலையோடு கேட்டது அவனுக்கு ஆத்திரத்தைத் தான் அதிகமாக உண்டு பண்ணிற்று. "ஒன்றும் இல்லை" என்று வெறுத்துக்கொண்டான். பிறகு உள்ளே போய்ப் புத்தகங்களை வைத்துவிட்டுச் சட்டையைக் கழற்றினான். குழாயடிக்குச் சென்று கைகால்களைக் கழுவினான். முன்புற அறையிலே போய் அங்கே கிடந்த அப்பாவின் சாய்வு நாற்காலியிலே படுத்தான். பாலாம்பாள் பர்பி, பக்கோடா, காபி எல்லாம் கொண்டு வந்து அவனுக்குக் கொடுத்தாள். ஆனால் அவன் எதையுமே கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. தாய் மோவாயைப் பிடித்துக் கெஞ்சி வற்புறுத்தினாள். அவன் மனம் இளகி, "நான் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில் சொன்னால் இதையெல்லாம் சாப்பிடுகிறேன். இல்லையானால் இதையெல்லாம் தொட்டுக்கூடப் பார்க்கமாட்டேன்; ராத்திரியும் சாப்பிட மாட்டேன்" என்றான்.

பாலாம்பாள், "ஒன்று செய்: காபி ஆறிப்போய் விடும். அதை மட்டும் முன்னால் சாப்பிட்டு விடு. அப்புறம் நீ என்ன வேண்டுமானாலும் கேள். பதில் சொல்கிறேன். அப்புறம் பட்சணங்களைச் சாப்பிடலாம்" என்றாள். பார்த்திபனுக்கும் அவள் சொன்னது நியாயமாகப் பட்டது. எனவே காபியை எடுத்துச் சாப்பிட்டான்.

* * *

பள்ளிக்கூடத்துப் பையன்கள் கூடி நாடகம் ஒன்று போடுவதென முடிவு கட்டினார்கள்.

என்ன நாடகம் போடுவது என்பது பற்றிப் பிரச்னே எழுந்தது. புராணமா, சரித்திரமா, சமூகமா என்ற பிரச்னே முதலில் எழுந்தது. ஒரு சாரார் புராணம் என்றனர்; ஒரு கோஷ்டியினர் சரித்திரம் என்றனர்; இன்னெரு சாரார் சமூகம் என்றனர். இப்படி மூன்று பிளவுகள் தோன்றின. புராணக் கட்சியிலே பாமா விஜயம், கிருஷ்ண லீலா, பக்த துருவன், சீதா கல்யாணம் என்ற பெயர்கள் அடிபட்டன. சரித்திரக் கோஷ்டியார் ராணி சம்யுக்தை, சிவாஜி, தேசிங்கு ராஜன் என்றெல்லாம் ஆர்ப்பரித்தனர். சமூக வகுப்பினர், முன்னேற்றம், பதிபக்தி, தேச சேவை என்று ஜாபிதாவை விஸ்தரித்துக் கொண்டே போனுர்கள். கடைசியில் ஒவ்வொரு கோஷ்டியும் தனித் தனியே பிரிந்து ஒவ்வொரு நாடகத்தை நடத்திவிடுவது என்று முடிவு செய்துகொண்டனர். பார்த்திபன் புராணக் கட்சியிலே சேர்ந்தவன். ஆனல் அதிலே ஒரு பெரிய சந்தேகம் தோன்றி அவனேச் சங்கடப்படுத்திற்று. 'இதை விட்டு விலகிச் சரித்திரக் கோஷ்டியிலே சேர்ந்துவிடலாமா?' என்று யோசித்தான். அதிலும் அதே சந்தேகந்தான். இந்த இரண்டையும் தாண்டிச் சமூகக் கட்சியிலே சேர அவனுக்குப் பிடிக்கவில்லே அவன் தனித்து நின்று தன் சந்தேகத்தைப்பற்றி மற்றவர்களுடன் வாதாடினன். எல்லோரும் அவனேக் கேலி செய்தனர்; கண்டித்தனர்; இரைச்சல் போட்டனர். அதனல் தான் அவன் குழம்பிய உள்ளத்துடன், சோர்ந்த முகத்துடன் வீட்டை அடைந்தான். அப்படி அவன் மனத்தைக் குழப்பிய விஷயம் என்ன தெரியுமா? 'முன் காலத்துப் பத்தினிப் பெண்கள் கணவர் இறந்தால் கூடவே இறப்பார்கள்' என்ற விஷயந்தான். ஒருகாலும் அப்படி இராது என்று பார்த்திபன் வாதாடினன். பயன் இன்றி வீட்டுக்கு வந்தான். அதைப் பற்றித்தான் இப்போது தாயிடம் கேட்டான். அவளாலும் அதைப் பற்றி ஒன்றுமே முடிவு சொல்ல முடியவில்லே. கடைசியில், "பார்த்திபா, என்னேயும் அப்பாவையும் விடப் பாட்டிக்கு இந்த விஷயமெல்லாம் நன்ருகத் தெரியும். பாட்டி கோயிலிலிருந்து வந்ததும் கேள். விடை கிடைக்கும்" என்ருள்.

இரவு எட்டு மணி. பாட்டி நிலா முற்றத்திலே படுத்துக் கொண்டிருந்தாள். பார்த்திபன் பரபரப்புடன் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அவளிடம் வந்து சேர்ந்தான். பள்ளிக்கூடத்தில் நடந்ததைச் சொல்லி, "பாட்டி, முன் காலத்திலே பெண்கள் கணவனேடு உடன்கட்டை ஏறினது உண்மைதானு?" என்ருன்.

"உண்மைதான்!"

"அதுதான் உண்மை என்பதற்கு என்ன ஆதாரம்? நீ நேரில் பார்த்திருக்கிருயோ?"

"அந்த நாளில் நான் பிறந்ததே இல்லேயே!"

"நீ பிறந்த பிறகு அப்படி ஒன்றும் நடக்கவில்லேயே?"

"நடந்ததாகத் தெரியவில்லே."

"நடக்கவில்லே என்று திட்டமாகச் சொல்ல மாட்டேன் என்கிருயே, பாட்டி!"

பாட்டி கலகலவென்று சிரித்தாள்.

"என் கட்சி ஜயிக்க வேண்டும். அதற்கு வழி சொல்" என்றான் பார்த்திபன்.

"அப்படியானால் ஒன்று செய். நான் நேரில் கண்ட சம்பவம் ஒன்றைச் சொல்கிறேன். அதை வைத்துக்கொண்டு உன் சாமர்த்தியத்தினால் மற்றவர்களிடம் வாதாடி ஜயித்துக் கொள்."

"சொல்லு பாட்டி" என்று உற்சாகத்துடன் கேட்கத் தொடங்கினான் பார்த்திபன். பாட்டி சொன்னாள்.

* * *

மருதஞ்சேரி என்கிற கிராமத்திலே நடந்தது இது. அப்போது நான் ஏழு வயசுப் பெண். என் அப்பாவிடம் கோவிந்தன் என்று ஒரு பண்ணை ஆள் இருந்தான். அவனுக்கு மிகவும் அழகான மனைவி ஒருத்தி இருந்தாள். அவள் பெயர் எல்லம்மா. இருவரும் மிகவும் ஒற்றுமையுடன் குடித்தனம் செய்து கொண்டிருந்தார்கள்.

கோவிந்தனுக்கு எல்லம்மாளிடம் அளவு கடந்த ஆசை. எங்கே எது கிடைத்தாலும் தான் சாப்பிடாமல் அவளுக்குக் கொண்டு போய்க் கொடுத்து அவள் சாப்பிடுவதைக் கண்டு சந்தோஷமடைந்து வந்தான். அவனுக்கு எப்பொழுது பார்த்தாலும் அவள் நினைவுதான். அவளைப் பற்றியே வாய் ஓயாது பேசுவான். சதா அவளைப் பற்றியே புகழ்வான். "நீ அவளிடம் இத்தனை அன்புடன் இருக்கிறாயே கோவிந்தா, அவளுக்கு உன்னிடம் இதே அன்பு இருக்குமா?" என்று யாராவது கேட்டுவிட்டால் போதும்; உடனே, "அது என்னங்க, அப்படிக் கேட்டுட்டீங்க? எம் பொஞ்சாதி எம்மேலே உசிரையே அல்ல வச்சிருக்கா? அவ என்ன சொல்லிக்கிட் டிருக்கா தெரியுமா? நான் செத்துப்போனா எங்கூடவே ஒடனேயே செத்துப் போயிடுவேனுக்கும் சொல்லிக்கிட்டிருக்கா!" என்பான்.

ஒரு நாள் என் தகப்பனார் அவனைக் கூப்பிட்டு, "பைத்தியக்காரா, நீ நினைத்துக்கொண் டிருப்பது சுத்தத் தவறு. ஒரு நாளும் அவள் உன்னோடு சாகமாட்டாள். அதெல்லாம் வெறும் பேச்சு" என்றார். உடனே அவனுக்குக் கோ

பெரியவர்: அப்பா எங்கேடா?

பையன்: இப்பத்தான் பிள்ளையார் கோயிலுக்குப் போனார்.

பெரியவர்: நான்தான் வரேன்னு சொல்லியிருக்கேனே, அவர் ஏன் அங்கே போகணும்?

பம் வந்துவிட்டது. அவரிடமே ஒரு நாளும் இல்லாத முறையிலே எதிர்த்துப் பேச ஆரம்பித்து விட்டான். 'சரி, இவனுக்கு மனைவியின் பைத்தியம் தலைக்கேறிக் கிடக்கிறது; அதைத் தெளிய வைக்க வேண்டும்' என்று தீர்மானித்த என் தகப்பனார் அவனிடம் ரகசியமாகச் சில வார்த்தைகள் சொன்னார். அவனும் அதன்படியே நடந்து கொள்வதாகச் சொல்லி வீட்டுக்குச் சென்றான்.

மறு நாள் பிற்பகலில் கோவிந்தன் வயல் வெளியிலே வேலை செய்துகொண்டிருந்தான். எல்லம்மா வழக்கம்போல அவனுக்குச் சோறு எடுத்து வந்தாள். தொலைவில் அவள் வரும்போதே அவளைப் பார்த்துவிட்டான் கோவிந்தன். அவள் சற்று அருகில் வரட்டும் என்று காத்துக் கொண்டிருந்து அவள் அருகில் வந்ததும் நின்ற நிலையில் தடாலென்று கீழே விழுந்து கையையும் காலையும் உதைத்துக் கொண்டு வீரிட்டு அலறினான். அதைக் கண்ட எல்லம்மா சட்டென்று ஓடிச் சென்று அவனைக் கவனித்தாள். அதற்குள் கோவிந்தன் கட்டைபோல ஆகிவிட்டான். கண்கள் இறுக மூடிவிட்டன.

எல்லம்மா அவனைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். மூக்கிலே கைவைத்துப் பார்த்தாள். மூச்சு நின்றுவிட்டதுபோல் இருந்தது. அவன் இறந்து போய்விட்டான் என்று தீர்மானித்துக் கொண்டாள் அவள். சற்று நேரம் மலைத்தாற்போல உட்கார்ந்திருந்தாள். பிறகு அவனுக்கு என்று கொண்டு வந்த சாப்பாட்டைத் தானே சாப்பிட்டாள். சட்டி, குவளை முதலியவற்றை எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டாள். நாலடி நடந்ததும் மீண்டும் திரும்பி வந்தாள். கோவிந்தன் தலையில் இருந்த முண்டாசுத் துணியை எடுத்துச் சுருட்டிக் கொண்டாள். இடையிலே இருந்த முழத்துணியோடு அவனைக் கட்டைபோல அங்கேயே கிடக்க விட்டுவிட்டு வேகமாகச் சென்றாள்.

கோவிந்தனுக்கு ஆச்சரியம் தாளவில்லை. அவள் நடந்துகொண்ட முறை அனைத்தையும் எண்ணி எண்ணிப் பெருமூச்செறிந்தான். தலையைத் தூக்கி அவளைப் பார்த்தான். அவள் கனவேகமாகப் போய்க்கொண்டிருப்பதைக் கண்டான். அவனுக்குத் தன் மதியீனத்தை எண்ணிப் பார்த்ததும் சிரிப்புத்தான் வந்தது.

உடனே பெரும் குரலெடுத்துப் பின் வருமாறு சொன்னான்:

சாறேன் சாறேன் இன்னவளே!
சாறும் சோறும் தின்னவளே!
கூடச் சாறேன் இன்னவளே!
கொண்டுவாடி என் அறைத்
துணியை!

இது அவள் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. விழுந்திருந்தால் திரும்பிப் பார்த்திருக்க மாட்டாளா? அவள் போயே போய் விட்டாள். கோவிந்தன் நிதானமாக எழுந்து வீட்டை அடைந்தான். அங்கே போய் அவன் என்ன சொன்னால் என்ன? அதற்கு அவள் என்ன சமாதானம் சொன்னால் என்ன? அதைப்பற்றியெல்லாம் நமக்கு அவசியம் இல்லை. அன்று முதல் கோவிந்தனின் பிரமை அடியோடு நீங்கிவிட்டது என்பது ஒன்றுதான் நமக்கு முக்கியம். புராணமும் சரித்திரமும் என்ன சொன்னால் என்ன? 'உடன் கட்டை என்பதெல்லாம் வெறும் பேச்சு' என்ற முடிவு கோவிந்தன் உள்ளத்திலே நிலைத்துவிட்டது.

* * *

பாட்டி கதையை முடித்ததும் பார்த்திபன் துள்ளிக் குதித்தான். "இது போதும் பாட்டி, என் கட்சிக்கு" என்றான்.

மறுநாள் பாட்டி சொன்ன தையை அவன் சொல்லக் ட்ட பையன்கள் திருதிருவென்று விழித்தார்கள். கடைசியில் ஒரு பையன் சொன்னான்.

"புராணத்திலும் சரித்திரத்திலும் இருப்பதெல்லாம் பொய்யா மெய்யா என்பது நமக்குத் தெரியாது. இதெல்லாம் பெரியவர்கள் விவகாரம் என்று விட்டுவிடுவோம். இப்போதைக்கு நமக்குத் தேவை நல்ல பொழுது போக்கு. அத்துடன் அதில் நல்ல நீதியும் இருக்க வேண்டும். அதை விட்டு இந்த வீண் விவகாரமெல்லாம் நமக்கு எதற்கு?" என்றான். பார்த்திபன் உள்பட எல்லோரும் ஏகமனத்துடன் அதை ஒப்புக் கொள்ளவே கடைசியில் 'பக்த துருவன்' நாடகத்தையே போடுவது என்று முடிவு செய்தார்கள். மாலையில் வீடு திரும்பிய பார்த்திபன் தன் வெற்றியைப் பாட்டியிடம் கூறினான். அவள் பேரனின் சாமர்த்தியத்தைக் கண்டு சந்தோஷம் அடைந்து தன் பொக்கை வாயைத் திறந்து சிரித்தாள்.

சூப்பன்: ரேஷன் எடுத்துட்டாங்களே, இனிமே என்னாங்க நடக்கும்?

சுப்பன்: நடக்கிறது என்ன? வந்த விருந்தாளி திரும்பிப் போக மாட்டாங்க. அவ்வளவுதான்!

—வி. ஆர்.

எங்கள் ஊர்

கு. தண்டாயுதம்

எங்கள் ஊர் பழனி. பழனிக்குப் பெயர் வந்த கதையைப் பற்றிப் பலர் பலவிதம் கூறுவார்கள். நாரத முனிவர் சிவபெருமானிடம் சென்று ஒரு மாதுளம் பழத்தை வைத்து வணங்கினார். சிவபெருமான் தம் குமாரர்களில் யாருக்கு அதைக் கொடுப்பது என்று யோசித்தார். கடைசியில், ''விரைவில் பூமியை வலம் வருபவருக்கே இப்பழம் கிடைக்கும்'' என்று கூறினார். உடனே சுப்பிரமணியக் கடவுள் பூமியை வலம் வரச் சென்றார். அதற்குள் விநாயகப் பெருமான் தம் தந்தையை வலம் வந்தார். அவர் செயலைக் கண்ட சிவபெருமான் மகிழ்ந்து பழத்தைக் கொடுத்தார். முருகவேள் பூமியை வலம் வந்து தந்தையிடம் சேர்ந்தார். பழம் அண்ணனிடம் இருப்பதைக் காணக் கோபம் கொண்டு திரு ஆவினன் குடியில் அமர்ந்தார்.

உமாபிராட்டியார், தம் செல்வப் புதல்வரின் பிரிவாற்ருமையால் சிவபெருமானுடன் இங்கு வந்து அவரை எடுத்து, அணைத்து, "பழம்நீயே! உனக்கு வேறு பழம் வேண்டாம்" என்று கூறி, அவர் கோபத்தைத் தீர்த்தமையால் பழநி என்ற பெயர் வந்தது என்று பழநித்தல புராணம் கூறுகிறது.

இன்னும் சிலர் இவ்வூர் பழனம் என்று சொல்லக்கூடிய செழுமையான வயல்கள் சூழ்ந்த இடமாக இருப்பதால் இது பழனி என நாளடைவில் வழங்கி வருகிறது என்று கூறுகிருர்கள்.

சங்க இலக்கியத்தில் பொதினி என்னும் நகரைப் பேகன் என்ற கடை எழு வள்ளல்களில் ஒருவன் ஆண்டதாகவும், அதுவே இப்பொழுது பழனி என்று வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

பழனி மதுரைக்கு வடமேற்கில் இருக்கிறது. இது மதுரை மாவட்டத்தில் உள்ள ஒரு தாலுக்கா. கடல் மட்டத்திற்கு மேல் 1058 அடி உயரத்தில் பழனி நகரம் அமைந்துள்ளது. சிவசுப்பிரமணியர் வீற்றிருக்கும் பழனி மலையின் உயரம் 450 அடி என்றும், செல்லும் வழியில் 558 படிகள் என்றும் கணக்கிட்டிருக்கிருர்கள்.

வெள்ளி ரதம்

பழனித் தாலுக்காவில் பதினெரு கிராமங்கள் இருக்கின்றன. நகராண்மைக் கழகம், நடுத்தரப்பள்ளி, நீதி மன்றங்கள், விவசாய ஆபீஸ், அரசாங்க வைத்தியசாலை, கால்நடை வைத்தியசாலை, தேவஸ்தான ஆபீஸ் முதலியனவும் உள்ளன.

எங்கள் ஊரைச்சுற்றிப் பாலாறு, பச்சையாறு, கல்லாறு, காஞறு, பொருந்தலாறு, வரத்தாறு முதலிய ஆறுகள் சேர்ந்து 'சண்முக நதி' என்று கரூர் வரை சென்று அமராவதியில் கலக்கிறது.

பழனி நகருள் பெரியநாயகி அம்மன் கோயிலும், வரதராஜப் பெருமாள் கோயிலும், மாரியம்மன் கோயிலும், பட்டத்து விநாயகர் கோயிலும் முக்கியமானவை. பழனி அடிவாரத்தில் திருஆவினன்குடி என்ற கோயிலும் இடும்பன் கோயிலும் மற்றும் சிறு கோயில்களும் உள்ளன.

பழனி நகரில் பெரியநாயகி அம்மன் கோயிலில்தான் அநேக திருவிழாக்கள் நடக்கும். இங்கே வெள்ளி ரதம் ஒன்று இருக்கிறது. இது ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்து தயாரிக்கப்பட்டது. இதைப் புகைப்படத்தில் பாருங்கள். மலையில் ஒரு தங்கரதம் இருக்கிறது. அங்கே நடக்கும் திருவிழாக் காலங்களில் மலை மேலேயே அது ஓடும். மலைக்குச் செல்லும் வழியில் மண்டபங்கள் பல இருக்கின்றன. மின்சாரவசதியும் தண்ணீர் வசதியும் இருக்கின்றன.

மலைமீது ஸ்ரீ தண்டாயுதபாணியும் சிவபெருமானும் நாச்சியம்மனும் ஸ்ரீ புவனேஸ்வரியும், போகரும் வீற்றிருக்கிறார்கள். காலை முதல் இரவு வரை அபிஷேகங்கள் நடந்துகொண்டே இருக்கும். காலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்தே இருக்கும். ஆயிரக்கணக்கான மக்கள் வந்து போய்க்கொண்டிருப்பார்கள். திருவிழாக்கள் நடந்த வண்ணமாகவே இருக்கும். பள்ளிகளில் விடுமுறை விட்டுக்கொண்டே இருப்பார்கள்.

பழனி மலைக்கு அருகில் 'இடும்பன் மலை' என்று ஒரு மலை இருக்கிறது. 'ஆடும்பாறை' என்ற சிறு மலைக்குன்று உள்ளது. இடும்பன் குளமும் வையாபுரிக் குளமும் சின்னநாயக்கன் குளமும் மிகப் பெரியவை.

பழனி நகருக்கு மூன்று மைலில் 'பெரிய ஆவுடையார் கோயில்' என்ற சிவத்தலம் இருக்கிறது.

இந்தக் கோயிலின் முன் வெங்கலரதம் இருந்ததாகவும் வெள்ளம் வந்தபொழுது நதியில் மூழ்கிவிட்டதாகவும் சிலர் சொல்லுகிறார்கள்.



தங்க ரதம்

பழனி நகருக்கு ஒன்பது கல்லுக்கு அப்பால் 'ஐவர்மலை' என்ற மலை இருக்கிறது. இந்த மலையில் பஞ்சபாண்டவர் வந்து தங்கினதாகப் புராணம் கூறுகிறது. பழனி மலைக்கு அருகில் 'மயில் ஆடும் பாறை' உள்ளது. அக்காலத்தில் பொதினியை ஆண்ட பேகன் ஒரு நாள் மாலைப்பொழுதில் அவ்வழியே சென்றானாம். மயில்கள் மகிழ்ச்சியால் சிறகை விரித்து அழகுற ஆடிக்கொண்டிருந்தன. அவை குளிர் பொறுக்க முடியாது தன்புறுவதாக எண்ணி, தன்மேலே போட்டிருந்த விலையுயர்ந்த போர்வையை எடுத்து ஆடிக்கொண்டிருந்த மயில்மீது போர்த்தி அகமகிழ்ந்தானாம் பேகன்.

மான்கள், மயில்கள், கிளிகள், சேவல்கள், யானைகள், பசுக்கள், குரங்குகள் முதலியன கோயில்களில் இருக்கின்றன.

'பஞ்சாமிர்தம்' என்ற அமிர்தத்திற்குப் பழனி மிகவும் பெயர் பெற்றது. பழனியைப்பற்றி எவ்வளவோ எழுதலாம். படிப்பதைவிட நேரில் பார்த்தால்தான் இதன் சிறப்பு விளங்கும்.

நீங்கள் வருவதாக இருந்தால் திண்டுக்கல் சந்திப்பிலிருந்து கோயம்புத்தூர் சந்திப்புக்குச் செல்லும் ரெயிலில் வந்தால் பழனி ஸ்டேஷனில் இறங்கலாம். ஒரு முறை வாருங்கள். அப்புறம் பல முறை வராமல் இருக்க மாட்டீர்கள். வணக்கம்.

இங்ஙனம்,
கு. தண்டாயுதம்.
(க.க. எண் D. 129) பழனி.

ஏமாற்றம்

'பூவண்ணன்'

'மல்லிகை' சிறுவர் சிறுமியர்களுக்காகச் சேவை செய்யும் சிறந்த பத்திரிகை. மற்றப் பத்திரிகைகளைப் போல மாணவர்களுக்குத் தேவையில்லாதவைகளை, பயனற்றவைகளை அந்தப் பத்திரிகை தராது. அதனால்தானோ என்னவோ அது ஏராளமாக விற்பதில்லை.

அதன் ஆசிரியர் மனோகரன் சிறந்த கருத்துக்கள் நிரம்பிய கதைகளைத் தருவார். அவரது ஹாஸ்யக் கதையில்கூட ஏதாவது ஒரு கருத்து நிறைந்திருக்கும்.

அன்று மனோகரன் மகிழ்ச்சிக் கடலில் நீந்தி இன்பக் கரையை அடைந்திருந்தார். காரணம் அன்று அவருடைய கதை கட்டுரைகளைப் படித்துவிட்டுப் பரவசமடைந்த தம்பி தங்கைகள், அவரைப் பாராட்ட நடந்த கூட்டத்துக்கு அழைத்திருந்தார்கள்.

மனோகரன் அன்று மாலை பாராட்டுக்கூட்டத்திற்குச் சென்றார். ஆயிரக்கணக்கான தம்பி, தங்கைகள் அவரைப் பார்ப்பதற்காகவே கூடியிருந்தனர். அவர்கள் மனோகரனைக் கண்டதும் கைதட்டி ஆரவாரித்தார்கள். அந்தச் சத்தம் அடங்க அரை மணி நேரம் ஆயிற்று.

பிறகு மனோகரன் பேச எழுந்தார். என்ன பேச வேண்டும் என்று எதை எதையோ குறித்துக் கொண்டு வந்திருந்தார். ஆனால் அவர்களையும் அவர்களது ஆர்வத்தையும் கண்டதும் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. மனோகரன் சிறிது நேரம் பேசாமலிருந்தார். பிறகு மெதுவாகப் பேச ஆரம்பித்தார். எதை எதையோ கூறினார். அவர்

எதிரிலிருக்கும் வருங்காலப் பெரிய மனிதர்களைப் பார்க்கப் பார்க்க அவருடைய பேச்சு வளர்ந்தது. பேச முடியாது என்று நினைத்தவர் நீர் வீழ்ச்சியைப் போல நல்ல கருத்துக்களைக் கொட்டினார்.

ஒருவாறு பேசி முடித்ததும், "அண்ணன் மனோகரன்!" என்று தைரியமாய் எழுந்து கத்தினான் ஒருவாண்டுத் தம்பி. உடனே

"வாழ்க" என்ற சப்தம் வானைப் பிளந்தது.

மனோகரனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. ஆனால் சில தம்பி தங்கைகள், அவர்கள் போட்ட கடிதத்திற்குப் பதில் போடவில்லை என்று கோபித்துக்கொண்டார்கள். எவ்வளவு வேலைகள் மனோகரனுக்கு! தினமும் அவருடைய கதைகளைப் பாராட்டி நூற்றுக் கணக்கான கடிதங்கள் வரும். அவற்றிற்கெல்லாம் பதில் எழுத அவரால் முடியுமா? ஆகையால் எந்தக்கடிதத்திற்கும் அவர் பதில் எழுதுவதில்லை. மனோகரன் அவர்களுக்குத் தக்க சமாதானம் கூறினார்.

வீட்டை நோக்கி வந்தபோது அவரது அன்பு நிறைந்த உள்ளம், 'இந்தச் சிறுவர்களுக்குத்தான் எவ்வளவு ஆர்வம்! நாம் இவர்களுக்கு உண்மையில் உயர்ந்த விஷயங்களையே தரவேண்டும். வெறுமே பணத்திற்காகக் கதை அளக்கக் கூடாது' என்று தீர்மானித்துக் கொண்டது.

வீட்டுக்குள் நுழைந்ததும்வேலைக்காரன் சில கடிதங்களைக் கொண்டு வந்து கொடுத்து, "எஜமான், இந்தக் கடுதாசிகள் பகலே வந்ததுங்க. நான் மேஜைமேலே வைச்சேன். நீங்க பார்க்காமலே போயிட்டீங்க" என்று கூறினான்.

மனோகரன் கடிதங்களைப் பிரித்துப் படிக்கலானார். கடைசிக் கடிதத்தைப் பிரித்தார். அதைப் படிக்க ஆரம்பித்தார்.

ஐயோ! ஏனோ அவர் முகம் விகாரமாய்விட்டது. கண்கள் வேறு சிவக்கத் தொடங்கின. கைகள் கூட மெதுவாக நடுங்கின. அவர் அதை 'விடுவிடு' என்று படித்து முடித்தார். 'முட்டாள்' என்று கூறிவிட்டு அதைக் கசக்கி மூலையில் எறிந்தார். பிறகு கூண்டில் அகப்பட்ட புலிபோல அந்த அறையில் முன்னும் பின்னுமாக உலவினார்.

இன்னும் அவரது கோபம் தணிந்ததாகத் தெரியவில்லை. என்ன நினைத்தாரோ என்னவோ, சிறிது நேரத்திற்கு முன்பு கசக்கி எறிந்த அதே கடிதத்தை எடுத்து மீண்டும் படிக்கலானார். ஆத்திரத்தில் பெற்றெடுத்த பிள்ளையை அடித்து நொறுக்கி அழவைத்துவிட்டு, அவன் அழும்போது தூக்கி வைத்துக் கொஞ்சுவதில்லையா? அதைப் போல், அவரே கசக்கி எறிந்ததைக் கவனமோடு எடுத்துப் படிக்கலானார்.

26-5-..

மாதுங்கா, பம்பாய்.

அன்புள்ள அண்ணா,

வணக்கம்.

தங்களுக்குப் பாராட்டுக் கூட்டம் நடக்கப் போவதாகப் பத்திரிகைகள் மூலம் அறிந்தேன். அதன் பிறகே இதை எழுதுகிறேன்.

குழந்தைகளுக்காகத் தாங்கள் எழுதிய பல கதைகளை, புத்தகங்களை நான் படித்துப் பார்த்தேன். அவைகள் மிகமிக அபாரமாக இருந்தன. ஆனால் .... இனிமேல் நான் எழுதப்போவது உங்களுக்(எட்டிக் காயாகத் தோன்றும்; என்(றாலும் எழுதுகிறேன்.

நீங்கள் எழுதும் எல்லாக் கதைகளும் புத்தகங்களும் உங்களுடைய சொந்தச் சரக்கல்ல; இரவல் பொருள்கள். பிறருடைய சொத்து; ஆனால் அதை நீங்கள் உங்கள் பெயரில் வெளியிடுகிறீர்கள். அவ்வளவும் 'காப்பி' அடித்தவை.

என்னடா இவன் அளக்கிறானே என்று எண்ணாதீர்கள். உங்களுடைய ஒவ்வொரு கதையும் எதிலிருந்து, எந்தக் கதையிலிருந்து காப்பியடித்தது என்பது எனக்குத் தெரியும். என்னிடம் அவைகள் உள்ளன. உங்களுடைய ஊழலை வெளிப்படுத்தி உண்மையை நிரூபிக்க முடியும்.

ஆகவே உங்களுக்கு முதல் தடவையாக எச்சரிக்கிறேன்.

இனிமேல் இவ்விதம் ஒரு முறை நடந்தால் உங்களுடைய இழிதொழிலை உலகறிய உரைப்பேன். ஜாக்கிரதை. சொந்தமாக எழுத முயலுங்கள். உங்களுக்கு வெற்றி கிட்ட ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்.

உங்கள் நன்மையை நாடும்,
நல்ல தம்பி, ராஜாமணி.

இந்தக் கடிதத்தைப்படித்ததும் அவருக்குக் கோபம் வராதா? அவர் உள்ளம் ஒடிந்து விட்டது. 'நானா காபியடித்துக் கதை எழுதுகிறேன்? ஈ, காக்காய் கூட இதை நம்பாதே!' என்று வருந்தினார். அந்த வருத்தத்தில் ஆத்திரம் எழுந்தது. உடனே அவனுக்குக் காரசாரமாகக் கடிதம் எழுதினார்.

"தம்பி, உன் பயமுறுத்தல் கடிதம் வந்தது. மகிழ்ச்சி! உன் உருட்டல் மிரட்டல்கள் என்னிடம் செல்லா. வீண் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறாய். நான் எதிலிருந்து காப்பி அடித்தேனோ அதை நீ வைத்திருப்பதாக எழுதினாயே! அதைத் தாராளமாக அனுப்பலாம். நீ கூறியது உண்மையாய் இருந்தால் உனக்கு ஓராயிரம் ரூபாய் பரிசளிக்கிறேன்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்.

அன்புள்ள, மனோகரன்."

மனோகரன் பதில் கிடைக்க வேண்டிய நாள் அன்று தபால்காரனின் வரவை எதிர்பார்த்த வண்ணம் இருந்தார். தபால்காரன் வந்தான். ஏனோ அவர் உள்ளம் காரணமில்லாமல் படபடத்தது. கடிதங்களை வாங்கிக் கொண்டு உள்ளே வந்தார்.

எல்லாவற்றையும் பிரித்துப் பார்த்தார். அவர் எதிர் பார்த்த பம்பாய்க் கடிதத்தைக் காணோம்.

"பயல் சும்மா மிரட்டியிருக்கிறான். இல்லையென்றால் உடனே பதில் எழுதி என் மானத்தை வாங்கி இருக்க மாட்டானா! நான் காப்பி அடிக்கிறேன் என்கிறான்! அவனுக்கென்ன தெரியும், அந்த வேலை செய்வது வேறு சிலர் என்பது!" என்று எண்ணிக்கொண்டிருக்கும் போதே வேலைக்காரன் வந்தான்.

"எஜமான், இந்தக் கடிதம் வாசலில் விழுந்திருந்தது. அவ்சரத்தில் கீழே விழுந்துவிட்டது போலிருக்கிறது" என்று கூறிக் கொடுத்தான்.

அது பம்பாய்க் கடிதம்தான். அதைக் கண்டதும் அவர் மனம் நடுங்கியது. 'ஒரு சமயம் அவன் எழுதியது உண்மையாயிருக்குமோ? நமக்குத் தெரியாமல் ஏதாவது நடந்திருக்குமோ? ஒரு வேளை இருவர் கருத்தும் ஒன்றாக இருந்ததோ?' என்று குழம்பிக்கொண்டே அதைப் படிக்கலானார்.

"1—6—..

மதுங்கா, பம்பாய்.

அன்புள்ள அண்ணா,

தங்கள் பதில் கிடைத்தது. மகிழ்ச்சி! நன்றி!

உங்கள் கதைகளை ரசித்து அதைப் பாராட்டிப் பல கடிதங்கள் (சிலவல்ல) எழுதினேன். பதிலே இல்லை. என் நண்பர்கள் உங்களுக்குக் கடிதம் எழுதும்போது 'பதில் வராதுடா, ராஜாமணி. அவர் ஒரு கடிதத்தையாவது படிப்பதே இல்லை' என்று கிண்டல் செய்தனர். கோபம்கொண்ட நான் எந்த விதத்திலும் உங்களிடமிருந்து ஒரு பதில் கடிதத்தை வரவழைக்கிறேன் என்று சபதம் செய்தேன்.

அது நிறைவேற ஒரு யுக்தியைக் கண்டுபிடித்துக் கடிதம் எழுதினேன். உங்கள் கதைகள் காபியடித்தவை என்று எழுதியதும் கோபம் வந்துவிட்டது போலிருக்கிறது. உடனே பதில் எழுதிவிட்டீர்கள்.

என் சபதம் நிறைவேறிவிட்டது. என் நண்பர்களின் சந்தேகமும் தீர்ந்துவிட்டது. நீங்கள் எல்லாக் கடிதங்களையும் படிக்கிறீர்கள் என்பது தெரிந்துவிட்டது. உங்களைக் கோபப்படுத்திய என்னை மன்னித்துவிடுங்கள். உங்கள் கதைகள் காப்பி அடித்தவை அல்ல. அவை உயர்ந்தவை. இது உலகறிந்த உண்மை.

தங்களுக்கு என் வணக்கம்

அன்புள்ள, ராஜாமணி."

அவரது மானத்தைப் பறிக்கும்படி, மனத்தை வருத்தும்படி, உள்ளம் பதைக்கும்படி ஏதாவது பதிலிருக்கும் என்று எதிர்பார்த்த ஆசிரியர், தாம் ஏமாந்ததை அறிந்ததும், இடியிடியெனச் சிரித்தார்.

வெளிவந்து விட்டன !

கலாசக்தி பிரசுரத்தின் 8-வது 0-1-0 செட் புத்தகங்கள். ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களில் ஏஜெண்டுகள் தேவை.

1. அமெரிக்கன் குண்டு 0-1-0
2. ரஷ்யன் குண்டு 0-1-0
3. சீனக் குண்டு 0-1-0
4. ஜப்பான் குண்டு 0-1-0

பிரதிகள் தீர்ந்துவிடுமுன் ஏஜெண்டுகள் 25% கமிஷன் நீக்கிப் பணம் அனுப்பி வைப்பது நலம். V. P. P. யில் பெற விரும்புவோர் உடன் ஆர்டர் செய்வது நலம். எமது மற்றைய வெளியீடுகளின் விபரமடங்கிய "கேட்லாக்"கிற்கும் இன்றே எழுதுங்கள்:

கலாசக்தி பிரசுரம்

80, மேல ஆவணிமூல வீதி

மதுரை

வண்ணான் வந்தான்

நா. ஜகந்நாதன்

"நம் பள்ளிக்கூடத்தில் முப்பது ஆண்டுகளுக்குமேல் தமிழாசிரியராக இருந்து வந்த தரும நாயகம் பிள்ளை அவர்கள் 'ரிடையர்' ஆகப்போவதால் அவருக்கு உபசாரமளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே ஒவ்வொரு மாணவனும் தேநீர் விருந்திற்காகவும், போட்டோவிற்காகவும் மூன்று ரூபாய் கொடுக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறது. அனைவரும் அவசியம் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வேணுகோபால்,
விழாக் கமிட்டித் தலைவன்."

அச்சடித்த மேற்படி விளம்பரம் அந்தப் பள்ளியின் ஒவ்வொரு மாணவனிடமும் காணப்பட்டது. எல்லா மாணவர்களும் விழாவில் கலந்துகொள்ளப் பெரிதும் மகிழ்ந்தனர் என்றே கூறவேண்டும். நம் தாய்மொழியை நமக்குக் கற்பிக்கும் நல்ல தொண்டில் ஈடுபட்டு, முப்பதாண்டுகள் தமிழுக்காக உழைத்த தரும நாயகம் பிள்ளை நம்மைவிட்டுப் பிரிகிறாரே என்ற கவலையும் அப்போதே ஏற்பட்டது. என்ன செய்வது? காலம் நமக்காகத் தன் கடமையை ஆற்றாமல் இருக்க முடியுமா? தரும நாயகம் பிள்ளையைச் சிறப்பிக்க வேண்டி எல்லா மாணவர்களும் விழாவில் பங்கு கொள்ள முடிவு செய்தனர்.

வேணுகோபால் எல்லாரிடமிருந்தும் பணவசூலை மும்முரமாகச் செய்துகொண்டிருந்தான். தேநீர் விருந்து, அதற்குப் பிறகு ஒரு குரூப் போட்டோ, ஹெட் மாஸ்டர் தலைமையில் ஒரு கூட்டம். அதில் தருமநாயகம் பிள்ளைக்கு

உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கவேண்டும் - இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தான் வேணுகோபால். நாள் நெருங்க நெருங்க, அவன் பலவிதமான ஏற்பாடுகளைச் செய்யலானான். போட்டோ நிபுணர் ஒருவரை ஏற்பாடு செய்துவிட்டு வந்தான். சிற்றுண்டி விருந்திற்காகச் சிறந்த ஹோட்டல் ஒன்றிற்கு ஆர்டர் கொடுத்தான்.

அன்றைக்கு மறுநாள்தான் விழா நடக்க இருந்தது. அன்று ஐந்துமணி வரை ஓயாத வேலை வேணுவுக்கு. மறுநாள் குரூப் போட்டோவில் தான் நன்றாக விழ வேண்டும் என்ற ஆசை அப்போது தான் அவன் மனத்தில் வேரூன்ற ஆரம்பித்தது. எந்த உடை உடுத்துக் கொள்வது என்று யோசனை செய்யலானான். உடனே தன் பீரோவைத் திறந்து எதை அணிந்து கொள்ளலாம் என்று பார்த்தான். இரண்டு மூன்று சட்டைகளும் ஒரு வேஷ்டியும் இருந்தன. சட்டைகளைப் பிரித்துப் பார்த்தான். பகீர் என்றது அவனுக்கு. கிழிந்து போன சட்டைகள் அவை! வீட்டில் போட்டுக் கொள்வதற்காகத் தனியே எடுத்து வைத்திருந்தவை. நாளைக்குச் சிற்றுண்டி விருந்தின் போது சலவை செய்த அழகான வெள்ளைச் சட்டையை அணிந்து கொள்ளவேண்டும்..! அவன் மனம் பட்டபாட்டை எப்படி விவரிப்பது? வண்ணான் போய் எத்தனை நாட்களாயின என்று பார்ப்பதற்காக, கணக்குப் புத்தகத்தைப் பிரித்துப் புரட்டினான். வண்ணான் போய் இருபத்தைந்து நாட்களுக்கு

மேலாகிவிட்டன. வழக்கமாகப் பதினைந்து நாட்களில் வந்துவிடும் வண்ணான் இந்த முறை மட்டும் இருபத்து ஐந்து நாளாகியும் வரவில்லை. அவனுக்குக் கோபம் வந்தது என்று கூறவும் வேண்டுமா? வண்ணான் நிச்சயம் இந்த வாரத்தில் வந்துவிடுவான்; அப்போது சலவை செய்து வரும் அழகான சில்க் சட்டையை அணிந்து கொண்டு ஜம்மென்று விருந்துக்குப் போகலாம் என்ற தைரியத்தில்தான் அவன் தன்னிடமிருந்த மற்றொரு வெள்ளைச் சட்டையைப் பள்ளிக்கூடத்துக்கு அணிந்து சென்றான். அதை ஒரு வாரகாலமாக அணிந்து கொண்டிருந்ததால் அதுவும் அழுக்காகிவிட்டது.

வேறு என்ன செய்வது? அந்தச் சட்டையைத்தான் தவைத்து, 'இஸ்திரி' போட்டுச் சலவை செய்ததுபோல் அணிந்து கொள்ள வேண்டும்.

கடைக்குச் சென்று சோப்பு வாங்கிக்கொண்டு வந்தான். அந்தச் சோப்பு வாங்க அவன் தாயிடமிருந்து பணம் வாங்குவதற்குள் அவன் பாடு போதும் என்றாகி விட்டது. அவன் கோபமெல்லாம் வண்ணான் மீது திரும்பியது.

சட்டையை நன்றாகச் சோப் போட்டுத் துவைத்து, கொடியில் உலரப் போட்டான். அப்போது இரவு மணி எழாகிவிட்டது. அப்போதாவது வண்ணான் வரக் கூடாதா என்று எண்ணினான் அவன். மறுநாள் காலையில் வண்ணான் வராவிட்டால் 'இஸ்திரி' போட ஓரணா வேண்டுமே! என்ன செய்வது? இந்தக் கவலையால் அவன் அன்று இரவெல்லாம் தூங்கவே யில்லை.

மறுநாள் பொழுது விடிந்தது. காலை எட்டரை மணி வரையில் வண்ணான் வருகிறானா என்று பார்த்தான். இனிமேல் வண்ணான் வர மாட்டான் என்று தெரிந்துவிட்டது. இரவு துவைத்துப் போட்ட சட்டையைப் பார்த்தான். வெள்ளை வெளேரென்று பால்போல் இல்லாவிட்டாலும் சுமாராக, பார்ப்பதற்கு வெளுப்பாகக் காட்சியளித்தது. சற்றுக் கூர்ந்து கவனித்தால், துவைத்த சட்டை என்று எவரும் கூறிவிடலாம். அந்தச் சட்டையை நன்றாக இஸ்திரி போடவேண்டும். அதற்கு ஓரணா கேட்பார்களே! சரி; மறுமுறையும் அம்மாவிடம்

கேட்டால் அடிதான் விழும். அதனால் அடுத்த வீட்டு ஆறுமுகத்திடம் சென்றான். அவன் செல்லும்போதுதான் அவன் வீட்டு எதிரில் வண்டியிலிருந்து டாக்டர் வந்திறங்கினர். யாருக்கு உடம்பு சுகமில்லை என்று அறிந்துகொள்ள உள்ளே சென்றான். ஆறுமுகம் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தான். நேற்று இரவு முதல் பலத்த ஜுரம். பேசாமல் திரும்பித் தன் வீட்டிற்கு வந்துவிட்டான்.

வேறு வழியில்லை என்று தன் தாயிடம் கெஞ்சிக் கூத்தாடி ஓரணவைப் பெற்றுக்கொண்டு லாண்டிரிக்குச் சென்றான். அங்கே சட்டையை நன்றாக இஸ்திரி போட்டுக் கொடுத்தார்கள். அப்போது சட்டை முன்னைவிட நன்றாக விறைப்பாகச் சலவைசெய்தது போல் காட்சியளித்தது. என்றாலும் சலவை செய்த சட்டையைப் போட்டுக்கொண்டு போக முடியவில்லையே என்ற வருத்தம் அவன் மனத்தை வாட்டியது.

சலவை செய்த பளபளப்பான சில்க் சட்டையை அணிந்துகொண்டு பல மாணவர்கள் வருவார்கள். ஆனால் தான்மட்டும் அங்கே இந்தமாதிரிச் சட்டையை அணிந்துகொள்ள வேண்டிவந்ததே என்ற ஆத்திரம் அவன் உள்ளத்தை வருத்தியது. இந்த வண்ணான் மட்டும் குறித்த தேதியில் வந்திருந்தால்....? அவன் கோபமெல்லாம் வண்ணான்மீது திரும்பியதில் ஆச்சரியமில்லை. பளபளப்பான சட்டையை அணிந்துகொண்டு போட்டோவில் நின்றால் எவ்வளவு அழகாக விழலாம்! ஆனால் அந்தப் பெருமை தனக்கு இன்று கிடைக்காமல் போய்விட்டது. தோய்த்துப் போட்ட சட்டையைப் போட்டுக்கொண்டு போட்டோவில் நின்றிருக்கிறான் என்று அந்தப் போட்டோவே காட்டிக் கொடுத்துவிடும்! இவ்வாறு பல விதமாக எண்ணி மனம் நொந்து கொண்டான். கடைசியில் ஒருவாறு சமாதானமடைந்து அதே சட்டையை அணிந்துகொண்டு விழாவுக்குக் கிளம்பினன்.

சிற்றுண்டி விருந்தின்போது மாணவர்கள் விதம் விதமான சட்டைகளை அணிந்துகொண்டு அழகாகக் காட்சியளித்தார்கள். ஆனால் அவனோ..? சிலர் அவனை ஒரு மாதிரியாகப் பார்க்கலானார்கள். அவனுடைய நெருங்கிய நண்பர்கள், "என்னடா இது, இதைப் போட்டுக்கொண்டா போட்டோவில் உட்காரப் போகிறாய்?" என்று கேட்டனர். அவனுக்கு அழுகை வந்துவிடும்போலிருந்தது. வீட்டுக்குத் திரும்பிவிடலாமா என்று நினைத்தான். ஆனால் விழாக் கமிட்டித் தலைவனாயிற்றே, அவன் நடுவில் போய்விடுவது உசிதமல்லவே! எப்படியோ எல்லாம் ஒருவாறு முடிந்தது.

வீட்டிற்குப் போனதும், அவன் அறையில் அவன் கண்ட காட்சி திடுக்கிடச் செய்தது. வண்ணான் சலவை செய்த துணிகளை மூட்டையாகக் கொண்டுவந்து வைத்திருந்தான்.

"நீ போன அஞ்சு நிமிஷத்துக்கெல்லாம் வண்ணான் வந்துவிட்டான். நாளைக்கு வந்து அழுக்கை எடுத்துக்கொண்டு போகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனான்" என்று அவன் தாயார் கூறியபோது வேணுவின் தலை சுற்றியது.

காமிரா ✶ புரொபஸர் விஞ்ஞானம்
1
எனக்கும் ஆச்சரியமாயிருக்கிறது. நாளை இதைப்பற்றிப் புரொபஸரைக் கேட்போம்.
கண்ணு, நம் இருவருடைய படமும் அப்படியே தத்ரூபமாக விழுந்திருக்கிறதே! எப்படி?
ஸார், இந்த மாதிரி போட்டோப் படங்கள் எப்படிப் பிடிக்கிறார்கள்?
2
இரு குவி லென்ஸ், (Double convex) தலைகீழான நிஜ பிம்பங்களை எப்படி அமைக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? அதே தத்துவம் தான் இதிலும் பயன்படுகிறது. இதுதான் போட்டோப் படம் பிடிக்கும் கருவி. இதற்குக் காமிரா என்று பெயர். இந்தக் காமிராப் பெட்டியின் முன்புறத்தில் லென்ஸ் இருக்கிறது. இதன் மூலமாகப் பொருளின் பிம்பம் தலைகீழாகப் பின்புறமுள்ள தட்டில் விழுகிறது.
அந்தத் தட்டில் விழும் படம் எப்படி அழியாமல் பதிக்கப்படுகிறது?
3
இது ஒரு ரசாயன விஷயம். அந்தத் தட்டில் (Silver Iodide) ஐயோடைடு, புரோமைடு போன்ற வெள்ளி உப்புக்களில் ஏதாவதொரு ரசாயனப் பொருள் பூசப்பட்டிருக்கும் ஒளி அதன் மீது பட்டால் அதில் ஒரு ரசாயன மாறுதல் ஏற்படுகிறது. அதனால் தான் காமிராப் பெட்டிகளை வேறு ஒளி புகாமல் அழுத்தமாக அமைக்கிறார்கள். வேறு வெளிச்சம் பட்டால் படம் கெட்டுப் போகும்.

4

படம் பிடிக்கும் ஆளையோ, பொருளையோ, காட்சியையோ நோக்கிக் காமிராவை வைப்பார்கள். அதிலுள்ள லென்ஸின் வழியாக அதன் ஒளியை ஒரு கணம் புக விடுவார்கள். அந்த ஒளியானது காமிராவின் பின்புறத்திலுள்ள ரசாயனப் பொருள் பூசிய தட்டில் (அல்லது பிலிமில்) ஒரு தலைகீழான நிஜ பிம்பத்தைப் படியச் செய்யும். நிஜ பிம்பம் படிந்த இடத்தில் ரசாயன மாறுதல் ஏற்பட்டுப் படமாகப் பதிவாகிவிடுகிறது

இந்தப் படத்தை அழியாமல் காப்பாற்றுவது அடுத்த வேலை. அதற்குமுன் இதில் வேறு ஒளி பட்டால் படம் அழிந்து போகும். முதலாவது இந்தப் பிலிமை அல்லது தட்டை இருட்டறையில் தகுந்த ரசாயனப் பொருள்களில் போட்டுக் கழுவுவார்கள். இதற்குத்தான் 'டெவலப்பிங்' என்று பெயர்.



படம் பிடிக்கும்போது உட்புகும் ஒளியினால் மாறுதலடையாத வெள்ளி உப்பு முழுவதும் இதில் கரைந்துவிடும். கழுவிய பிறகு, வேறு ஒளி பட்டால் பிம்பம் கெடாமலிருக்க அதை (Hypo) 'ஹைபோ' என்னும் உப்பு கரைந்த தண்ணீரில் போட்டுப் பதியச் செய்வார்கள். பிறகு வேறு ஒளி பட்டாலும் படம் எவ்வகையான மாறுதலும் அடையாது. இப்படி அமைந்த படத்துக்கு 'நெகட்டிவ்' (Negative) என்று பெயர்.



5



6

இந்த 'நெகட்டிவ்' படத்தைப் பார்த்தால் மிகவும் வேடிக்கையாயிருக்கும். இயற்கையாகக் கறுப்பு நிறமெல்லாம் வெள்ளையாகவும் வெள்ளை நிறமெல்லாம் கறுப்பாகவும் அதில் தெரியும்.

ரசாயனப் பொருள் பூசிய அட்டையின் (Printing Paper) மேல் இந்த 'நெகட்டிவ்' படத்தை வைத்து 'நெகட்டிவ்' வழியாக சிறிதுநேரம் ஒளியை அட்டையின்மேல் விழச் செய்கிறார்கள். பிறகு இருட்டறையில் சிவப்பு விளக்கின் உதவியால் அந்த அட்டையை ரசாயன மருந்துகளைக்கொண்டு கழுவுகிறார்கள் இப்பொழுது சரியான பிம்பம் அட்டையில் விழுந்துவிடுகிறது. இதற்கு (Positive) 'பாஸிட்டிவ்' என்று பெயர். நாம் பார்க்கும் படம் இதுதான்.





7 'நெகட்டிவ்' (Negative) — 'பாஸிட்டிவ்' (Positive)





8

9

லூயி டாகர்
(Louis Daguerre)

Prof : 1813-ல் ஜோசப் நீப்ஸ் (Joseph Niepce) என்னும் பிரெஞ்சுக்காரர் சூரிய வெளிச்சத்தால் படம் பிடித்தார். பிரெஞ்சு ஓவியரான லூயி டாகர் (Louis Daguerre) அந்த முறையைத் திருத்தியமைத்தார். அதற்குப் பிறகு டால்போ (Talbot) என்னும் ஆங்கிலேயர் கண்டுபிடித்த முறை வெளியிடப்பட்டது. பின்பு படம் பிடிக்கும் முறைகள் மிகவும் வளர்ச்சியடைந்தன.

அவற்றுள் சில: மைக்ரோ போட்டோகிராபி, கலர் போட்டோகிராபி, சினிமாட்டோகிராபி, டெலிபோட்டோகிராபி முதலியன. இக்காலத்தில் சூரிய வெளிச்சம் இல்லாத இடங்களிலும், இரவிலும் பளிச்சென்ற மின்சார வெளிச்சத்தின் உதவியினால் (Flash Light) படம் பிடிக்கிறார்கள். மேகங்கள் ஊடாகவும் கூடப் படம் பிடிக்க வழி கண்டுபிடித்திருக்கிறார்கள்.





நீச்சல் பழக்கம்

அபாயம்; ஜாக்கிரதை!

1. வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு நீந்தாதே.

2. பரந்த நீர்நிலைகளில் துணையின்றி வெகுதூரம் நீச்சலடிக்காதே.

3. பந்தோபஸ்து இல்லாத நீர் நிலைகளில் காற்றடைத்த ரப்பர் டியூப் முதலிய போலி ஆதாரங்களை வைத்துக்கொண்டு நீந்தாதே.

4. வெடவெடவென்று நடுக்கும் குளிரில் நீந்தாதே.

5. ஆறு, ஓடை முதலியவற்றில் எதிர்நீச்சுப் போடாதே.

6. தடுக்கும்படி ஆடைகளை உடுத்துக்கொண்டு நீந்தாதே.

7. புதிய இடங்களில் போய் முன்பின் தெரியாமல் நீந்தாதே.

மிதத்தல் (தொடர்ச்சி)

நீச்சல் ஒரு தேகப் பயிற்சி. ஆபத்துக் காலத்தில் உதவக்கூடியது. ஆகவே பெரியவர்கள் உதவியுடன் இதைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

★



1. வழக்கமாகக் குதிக்கும் இடம் என்று தெரிந்துகொண்டு ஏறவேண்டும். அந்த இடத்தில் ஆழமில்லாவிட்டால் மண்டையில் அடிபடும். அதற்காகவே இந்த முன்னெச்சரிக்கை.

2. முதலில் குனிந்து மூச்சை இழுத்துக்கொள்ள வேண்டும். படத்தில் காட்டியபடி இருந்தால் தான் பாயும்போது கை பிசகாமல் நீட்ட வசதியாக இருக்கும்.



3. கைகளும் கால்களும் சேர்ந்து இருக்கவேண்டும். பிரிந்து இருந்தால் செருகலாக விழமுடியாது. தண்ணீர் மார்பில் அறைந்துவிடும்.

★

4. சரிந்த நிலையில் தண்ணீரில் விழவேண்டும். மூச்சு அடக்கிய படியே இருக்க வேண்டும். புதிதாக மூச்சு இழுத்தால் தண்ணீர் மூக்கினுள் ஏறிவிடும்.

★



5. தண்ணீரில் விழுந்தபிறகு முதலில் நீர் மட்டத்துக்கு நேராக உடலை மிதக்கவிட வேண்டும். விழுந்த அதிர்ச்சி ஏதாவது இருந்தால் இப்போது தெளிவு பட்டு விடும்.

6. நீர் மட்டத்துக்கு மேலே வரும்போது இடது கையும் வலது காலும் இருக்கும் நிலையைப் பாருங்கள். எந்தக் கையை மேலே முதலில் மாற்றுகிறோமோ அதற்கு எதிர்ப்புறத்துக் கால் தண்ணீரை உதைத்துக் கொடுக்கிறது.

★



7. தண்ணீரில் கன்னத்தைச் சாய்த்துக்கொள்ள வேண்டும். இப்பொழுதுதான் முன்பு குதிக்கும்போது இழுத்த மூச்சை வெளிவிட்டு, புதிதாகச் சுவாசிக்க வேண்டும்.

★



8. குதிப்பது முதல் தண்ணீர் மட்டத்துக்கு வருவதுவரையுள்ள நிலைகள்.

கேட்டீர்களா!

அரிசி ரேஷன் ரத்து

இரண்டாவது உலக யுத்தத்தின்போது தட்டில்லாமல் அரிசி கிடைப்பதற்காக ரேஷன் முறை விதிக்கப்பட்டது. யுத்தம் முடிந்தும் சரியான மழையின்மையால் விளைச்சல் போதாமல் இந்த ரேஷன் நீடித்து விதிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது சென்னை ராஜ்ய சர்க்கார் அரிசிக் கட்டுப்பாட்டை விலக்கிவிட்டார்கள். இனி அரிசியை யார் வேண்டுமானாலும் விற்கலாம். எவ்வளவு கிடைத்தாலும் வாங்கிக்கொள்ளலாம். அரிசியின் விலை ஏருமல் இருப்பதற்காகப் பழைய ரேஷன் கடைகளில் பழைய விலையில் ஏழு அவுன்ஸ் அரிசி வாங்கிக்கொள்ளலாம் என்று ஏற்பபாடு செய்திருக்கிறார்கள். பல ஜில்லாக்களில் அரிசி விலை குறைந்திருப்பதாகச் செய்திகள் கிடைக்கின்றன.

ஆரம்பக் கல்வி

இப்போது ஆரம்பக் கல்வி சரிவர போதிக்கப்படவில்லை. இதைத் திருப்திகரமான முறையில் சீர்திருத்தி அமைக்க நம் சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். புதிய முறையைக் கல்விமான்கள் ஆலோசித்து வருகிறார்கள். சீக்கிரமே இந்தச் சீர்திருத்தம் அமலுக்கு வருமாம்.

திருக்குறளின் பெருமை

தமிழ் மறை என்று எல்லாராலும் பாராட்டப் பெறும் திருக்குறளை அமெரிக்கர் கற்க ஆவலாய் இருக்கின்றனராம். அரசியல், பொருளாதார நுணுக்கங்களைத் திருவள்ளுவர் வெகு தெளிவாக விளக்கியிருப்பதே இதற்குக் காரணம். இவ்விதம் தென்காசி, திருவள்ளுவர் கழகத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின்போது டாக்டர் ஸ்ரீ பா. நடராஜன் (சென்னை சர்க்கார் பொருளாதார ஆலோசகர்) கூறினார்.

ஆதாரக் கல்வி வகுப்புகள்

சென்னை நகரில் 4 இடங்களில் ஆதாரக்கல்வி வகுப்புக்களைக் கார்ப்பரேஷன் பள்ளிகளில் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

கற்காலச் சின்னங்கள்

செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள கருங்குழி என்ற ஊரில் கற்காலச் சின்னங்கள் சில கிடைத்துள்ளன. இவை 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்களுடைய கலாசாரத்தைக் குறிப்பிடுகின்றன. புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் இவற்றை மேலும் பரிசோதனை செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஆஸனப் பயிற்சி

மாணவர்களுக்கு விளையாட்டும் தேகப்பயிற்சியும் மிகவும் முக்கியமானவை. புராதனமாகவே நம் நாட்டில் தேகாப்பியாஸ முறையாக ஆஸன வகைகள் இருந்து வருகின்றன. மாணவர்களுக்கு இந்த ஆஸனப் பயிற்சிகளைக் கல்வி நிலையங்களில் போதிக்க வேண்டும் என்று நம் ஜனாதிபதி யோசனை கூறினார்.

புதிய யோசனை

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு,

கண்ணனை மாதம் இருமுறையாகச் செய்வதா, இப்போது போலவே இருப்பதா என்று நீங்கள் கேட்டதையும் பல குழந்தைகள் அதற்குப் பதில் எழுதியதையும் கண்ணனில் நானும் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன். எங்கள் வீட்டிலேயே இந்த இரண்டு கட்சியார்களும் இருந்துகொண்டு உள்நாட்டுக் கலகம் மாதிரி சண்டை போட்டுக்கொண்டுதான் வருகிறார்கள். என் பெரிய பேரனும் அவன் கடைசித் தங்கையும் மாதம் இருமுறையாக்கவேண்டும் என்ற கட்சி; என் பெரிய பேத்தியும் சின்னப் பேரனும் இன்னொரு கட்சி இதைப் பார்த்தபிறகு எனக்கு ஒரு புதிய யோசனை தோன்றுகிறது. கண்ணன் இப்போது இருக்கிறமாதிரியே இருப்பதுதான் சரி இதுதான் அழகாகவும் நன்றாகவும் இருக்கிறது. வேண்டுமானால் மாதம் இருமுறையாக்கவேண்டும் என்று சொல்பவர்களுக்காக இன்னொரு புதிய பத்திரிகையை ஆரம்பியுங்களேன். இது இரண்டு கட்சியாளர்களுக்கும் திருப்தியாக இருக்குமே. கண்ணனில் மகாபாரதக் கதைகளும் கதாஸரித்ஸாகரக் கதைகளும் சேர்த்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

—டி. எஸ். கே ஐயர், அக்கௌண்டஸ் ஆபீஸர் (ரிடயர்டு), சென்னை-6

* * * *

விடுகதை

தண்டை சிலம்புக்காரி
தாழ்வார வீட்டுக்காரி
முத்துச் சிலப்புக்காரி
முப்பணத்து வேலைக்காரி
அவளைத் தொடுவானேன்!
கவலைப் படுவானேன்?

—M. கிருஷ்ணமூர்த்தி (K. 258)

விடை: [illegible]

* * * *

எதிர்பார்க்கிறோம்

அன்புடையீர்,

சாதகப் பட்சி மழையை எதிர்பார்ப்பதுபோல், எழுத்தாளன் தன் கதை பிரசுரமாவதை எதிர்பார்ப்பதுபோல், விளையாட்டு ஞாபக முள்ள பையன் பள்ளியில் மணி அடிப்பதை எதிர்பார்ப்பதுபோல்,

அபேக்ஷகர் தேர்தல் முடிவை எதிர்பார்ப்பதுபோல், பகுத்தறிவுப் போட்டியில் கலந்துகொண்டவர் முடிவுத் தேதியை எதிர்பார்ப்பது போல், கன்று தாய்ப் பசுவை எதிர்பார்ப்பதுபோல், தொடர்கதை வாசகர்கள் அடுத்த இதழை எதிர்பார்ப்பதுபோல், கடன் கொடுத்த வன் வசூலை எதிர்பார்ப்பதுபோல், ஆகாரம் தேடச்சென்ற பறவை யைக் குஞ்சுகள் எதிர்பார்ப்பதுபோல், அக்கா ஆபீஸிலிருந்து வரும் அத்தானை எதிர்பார்ப்பதுபோல்........குழந்தைகளாகிய நாங்கள் கண்ணன் மாதம் இருமுறையாவதை எதிர்பார்க்கிறோம். கண்ணன் வாழ்க!

—எல். கிருஷ்ணமூர்த்தி (K. 71).

* * * *

நான் நினைக்கிறேன்

பாலாற்றில் பால் ஆறாகப் பெருகவேண்டும் என்று நினைக் கிறேன்.

—M. சுந்தரம், அம்பை.

தூங்கிப் போனதும் ஒரு தேவதை வந்து அதிசய உலகத்துக்கு அழைத்துப்போய், காலையில் எழுந்திருப்பதற்குள் கொண்டு விட்டு விடவேண்டும்.

—எஸ். சித்ரா, பலகணூர்.

ஒவ்வொரு மேகமும் பஞ்சு மெத்தைபோன்ற விமானமாக இருந் தால் என்ன?

—வி. குமார், சென்னை-4.

* * * *

சதுரக் கட்டம்



அகலத்தைப்போல் 2 பங்கு நீளமுள்ள ஓர் அட்டையைக் குறுக்கே வெட்டினால் படத்தில் இருப்பது போன்ற இரண்டு துண்டுக ளாகும். இதில் கேள்வி என்னவென்றால் இதேபோல் 5 துண்டுகளை எடுத்துக்கொண்டு ஒரு சதுரமான கட்டமாகச் செய்யவேண்டும். அந்த 5 துண்டுகளில் ஒன்றை மட்டுமே இரண்டாக வெட்டிக் கொள்ளலாம். மற்ற நாலும் அப்படியே இருக்கவேண்டும்.

முயன்று பாருங்கள்; முடியாவிட்டால் கடைசிப் பக்கத்தைப் பாருங்கள்.

—மகாதேவன், சென்னை, 5.

(விடை கடைசிப் பக்கத்தில்)

* * * *

குழந்தை இலக்கியக் கழகம்

குழந்தை இலக்கியக் கழகத்தின் நிர்வாகிகளாகப் பின்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்: ஜெ. எத்திராஜன் தலைவர்; பூவண்ணன், வேல் முருகன் - செயலாளர்கள்; துருவன் - பொருளாளர்; மற்றும் ஆறுபேர் நிர்வாகக் குழுவினர். கழகத்தில் சேர விரும்புவோர் 5, ராமசாமிப்பிள்ளைத் தெரு, சென்னை-7 என்ற விலாசத்துக்கு எழுதவேண்டும்.

* * * *

டைம்-டேபிள்

அன்புமிக்க ஆசிரியருக்கு,

இந்த மாதக் கண்ணனைப் பிரித்ததுமே அ ..ஆ! என்ன அழகான அட்டை ஒன்று விழுந்தது! நீங்கள் கண்ணனுடன் அனுப்பிய டைம்-டேபிளைத்தான் சொல்கிறேன். என் வகுப்பில் எல்லாரும் அதைப் பார்த்து ஆசைப்படுகிறார்கள். "எனக்குத் தருகிறாயா?" என்று கேட்கிறார்கள். கண்ணன் இவ்விதம் உதவி செய்வான் என்று நினைக்கவேயில்லை. எங்கள் டைம்-டேபிளை அதில் எழுதிக்கொண்டாலே எனக்கு ஒரு பெருமையாக இருக்கிறது. என் நன்றியை ஏற்றுக்கொள்ளுங்கள். இதைக் கண்ணன் அங்கத்தினர்களுக்கும் அனுப்புகிறீர்களா, சந்தாதார்களுக்கு மட்டுந்தானா?

—M. பத்மா, (P. 65) பரமத்தி.

(கண்ணன் வாங்குபவர்களுக்கெல்லாம் உண்டு. ஆ-ர்.)

* * * *

வருந்துகிறோம்

திருச்சி கண்ணன் கிளைக் கழகத்தில் செயலாளராக இருந்து தொண்டாற்றிய J.K. ஜயரங்கன் (J. 156) காலமாகிவிட்ட செய்தியைக் கேட்டு வருந்துகிறோம். அவனுடைய பெற்றோருக்கு எங்கள் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—கண்ணன் கழகம்.

கிளைக் கழகக் கூட்டங்கள்

1-6-52 அன்று வெங்களத்தூரில் திரு. நாகராஜன், (B.A.Hons.) அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

— V. பலராமன், (B. 332.)

* * * *

13-4-52 அன்று பணகுடியில் தமிழ்க் குமாரன் தலைமையில் ஆண்டுவிழா நடைபெற்றது. விழாவுக்கு 300-க்கு மேற்பட்ட மாணவ மாணவிகளும் பல பெரியோர்களும் வந்திருந்தார்கள்.

— தெ. குமாரசுவாமி, உபதலைவன்.

புதுக்கோட்டை கிளைக் கழக அங்கத்தினர்களுக்கும் இதர மாணவர்களுக்கும் நடந்த விளையாட்டுப் போட்டியில் கண்ணன் கழகம் வெற்றி பெற்றது.

—உபதலைவர், கிளைக் கழகம்.

* * * *

குழந்தை எழுத்தாளர் சங்கம்

சங்கத்தின் புது ஆண்டு நிர்வாகிகளாகக் கீழ்க் கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்: வை கோவிந்தன்—தலைவர்; அழ. வள்ளியப்பா, ராஜன்-காரியதரிசிகள்: தணிகை-பொக்கிஷதார்; மற்றும் ஐந்து நிர்வாகிகள்.

சங்க ஆதரவில் சிறுகதைப் போட்டி நடைபெறும். விவரங்களுக்கு 135, பவழக்காரத் தெரு, சென்னை - 1 என்ற விலாசத்துக்கு எழுதவேண்டும்.

* * * *

சதுரக் கட்டம் விடை



ஆவணக் காப்பக நூலகம்
2/11783
சென்னை-600 008

* * *

சைக்கிள் வண்டி

எல்லோரும் அறிந்த வண்டி
எங்களூரில் உயர்ந்த வண்டி
அயல் நாட்டார் போற்றும் வண்டி
அருமையாகப் போகும் வண்டி
இந்நாட்டிற் குகந்த வண்டி
எந்நாடும் புகழும் வண்டி
எல்லோரும் விரும்பும் வண்டி
என்னுடைய சைக்கிள் வண்டி.
நன்ருகப் போகும் வண்டி
நாங்களெல்லாம் செல்லும் வண்டி
கண்டபேரை மயக்கும் வண்டி
கண்ணன்ஏறிப் போகும் வண்டி.

—ராம: மாணிக்கம், சண்முகநாதபுரம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOP: R. VENKATARAMAN.

விசித்திரக் குள்ளன்

விஜயா

ஓர் ஊரில் ஓர் ஏழைக் கிழவி இருந்தாள். அவள் சாப்பாடே இல்லாமல் பட்டினி கிடந்து வாடினாள். ஏதாவது அகப்படுமோ என்று தினம் குப்பை மேடுகளை எல்லாம் துழாவிப் பார்ப்பாள். ஆனால் ஒன்றுமே கிடைக்காது.

ஒரு நாள் ஒரு குப்பை மேட்டில் அவள் ஏதாவது அகப்படுமா என்று தேடிக்கொண்டிருக்கும்போது, "ஏ பாட்டி, அம்மா.. இதோ பார், என்னை எடுத்துக் கொண்டுபோய் உன் குடிசைப் பக்கத்தில் நடு.. உனக்கு அப்புறம் வேண்டிய பொருள் கிடைக்கும்.." என்று ஒரு கீச்சுக் குரல் கேட்டது. கிழவிக்கு, சப்தம் எங்கிருந்து வருகிறதென்று தெரியவே இல்லை. சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். திரும்பவும் குரல் வந்தது. "இதோ பார், பாட்டியம்மா.. இங்கே இருக்கிறேன் பார், பூசணி விதை.." என்று சொல்லிற்று.

கிழவி உற்றுப் பார்த்தாள். அங்கே ஒரு பூசணி விதை இருந்தது. உடனே அதை எடுத்துக் கொண்டு சந்தோஷத்தோடு வீட்டுக்கு வந்தாள்.

மறுநாள் காலையில் பூசணி விதையை எடுத்துப் பள்ளத்தில் நடும்போது, "பாட்டி, என்னை மட்டும் நீ நன்றாய்ப் பார்த்துக்கொண்டு, நான் சொல்வதுபோலவே செய்தால் நீ பெரிய பணக்காரி ஆகிவிடுவாய்" என்றது. பாட்டியும், "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லிப் பள்ளத்தை மூடினாள்.

தினம் அந்தப் பூசணி விதையை நட்ட இடத்துக்கு நிறைய தண்ணீர் விட்டுச் செடி முளைத்துவிட்டதா என்றுஆவலுடன் பார்ப்பாள் கிழவி. அவள் எதிர்பார்த்ததுபோல் சீக்கிரமே பூசணி விதை முளைத்து விட்டது. கிழவிக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. தினம் குப்பை மேட்டிலுள்ள சாம்பல், சாணி எல்லாவற்றையும் கொண்டுவந்து செடிக்குப் போட்டாள். செடி நன்றாய்த் தளதளவென்று வளர்ந்தது. பிறகு பூவும் பூத்துக் குலுங்கியது. கிழவிக்குச் சந்தோஷத்தால் புதுத் தெம்பு ஏற்பட்டது. அது மார்கழி மாதமானதால் வீட்டு வாசலில் பூசணிப்பூ வைப்பவர் வீட்டுக்கெல்லாம் பூவைக் கொண்டுபோய் விற்றுக் கொஞ்சம் பணம் சேர்த்தாள். இதற்குள் பூவினடியில் பிஞ்சும் உருவாவதைக் கண்டாள் கிழவி. அவள் சந்தோஷத்துக்கு அளவே இல்லை. செடியைத் தன் கண்போல் காத்து வந்தாள். செடி நிறையக் காய்கள் தான்.

காய்கள் பக்குவமடைந்ததும் கிழவி அவைகளைக் கொண்டுபோய் தினம் விற்றுவிட்டு, கிடைத்த துட்டை வைத்துக்கொண்டு கஷ்டமில்லாமல் இருந்தாள்.

இப்படி இருக்கும்போது ஒரு நாள் கிழவி வழக்கம்போல் பூசணிக் காய் பறிக்க வந்தாள். அப்போது ஒரு காயிடமிருந்து குரல் வந்தது:

"பாட்டி..என்னை இப்பொழுது பறிக்காதே, நான் சொல்லும் போது பறி." கிழவி அந்தக் காயை உற்றுப் பார்த்தாள். அது பளபள வென்று வெள்ளிபோல் மின்னிற்று. "சரி" என்று அந்தக் காயை மட்டும் விட்டு வைத்தாள்.

தினமும் அந்தக் காயிடமிருந்து, பறிக்கும்படி ஏதாவது வார்த்தை வருமா என்று பார்த்துக்கொண்டிருந்தாள் கிழவி. ஆனால் ஒரு மாத மாகியும் ஒரு குரலும் வரவில்லை. கிழவிக்கு ஆவல் தாங்க முடியவில்லை. ஒரு நாள் அந்தக் காயைப் பறித்துவிட்டாள். தூக்க முடியவில்லை. அவ்வளவு கனமாக இருந்தது. உடனே, "இதற்குள்ளே என்னதான் இருக்கு, பார்க்கலாமே" என்று அதை நறுக்கவும் ஆரம்பித்தாள்.

அப்போது காயினுள்ளே இருந்து குரல் வந்தது. "பாட்டி..என்ன இது? நான் சொன்னதை மறந்து என்னைப் பறிச்சுட்டியே? இப்போ நறுக்க வேறே ஆரம்பிச்சுட்டே.. மெள்ள....மெள்ள.....என்னைப் பத்திரமா எடுக்கணும்.... மெதுவாக நறுக்கு" என்றது. கிழவி மெதுவாய் நறுக்கினாள். தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு. அந்த பூசணிக் காயினுள்ளே ஒரு சிறு வெள்ளி வீடு இருந்தது. அதன் பளபளப்பு கிழவியின் கண்களைப் பறித்தது. அவள் அதைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது அந்தச் சிறு வீட்டுக்குள்ளிருந்து ஒரு குள்ளன் குதித்தான். கிழவி ஆச்சரியத்தால் வாய் திறந்து நின்றாள். அந்தக் குள்ளன் கோபத்தோடு, "என்ன பாட்டி, நான் சொல்லுமுன்பே காயை அறுத்து விட்டாயே, எதற்கு இவ்வளவு அவசரம்?" என்றான்.

கிழவி பதில் சொல்லத் தெரியாமல் விழித்தாள். பிறகு குள்ளன், "எனக்கு ஒரு சாபத்தால் இந்தக் கதி வந்தது. நான் இன்னும் கொஞ்ச நாள் இதற்குள்ளேயே இருந்திருந்தால், உனக்கு அந்தக் காயை வெட்ட வேண்டிய சமயத்தைச் சொல்லியிருப்பேன். அப்பொழுது வெட்டியிருந்தால் நான் ஒரு ராஜகுமாரனாகவே வெளியே வந்திருப்பேன். அதை நீ கெடுத்து, பாதியிலேயே என்னை வெளியே கொண்டு வந்துவிட்டாய்" என்றான். கிழவி விசனத்துடன் தலையைக் குனிந்துகொண்டாள். குள்ளன், "சரி..போகட்டும்.... இந்த வீட்டையாவது பத்திரமாகப் பார்த்துக்கொள்....இனி நான் அதில்தான் இருப்பேன்" என்றான். கிழவி, "ஆகட்டும் அப்பா..உன் பேர் என்ன?" என்றாள் அன்புடன்.

"என் பேர் விசித்திரன்" என்றான் குள்ளன்.

"அப்பா விசித்திரா..எனக்கோ ஒரு மனுஷாளும் இல்லை; இனிமேல் நீதான் எனக்குச் சகலமும்.. நீ என் குழந்தையப்பா இனிமேல்" என்றாள் கிழவி சந்தோஷத்தோடு.

விசித்திரன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. நேராகத் தன் சிறு வெள்ளி வீட்டுக்குள் சென்று புது உடை அணிந்து வெளியே வந்தான்.

"பாட்டி..என் வீட்டைப் பத்திரமாகப் பாத்துக்கொள்..நான் வெளியே போய்விட்டு வருகிறேன்" என்றான்.

கிழவி ஆச்சரியத்துடன், "நீ எங்கேயப்பா போகப்போறே, இத்தனை பெரிய ஊரிலே..? எங்கேயானும் போய் நசுங்கிவிடுவாய்"

கிழவிக்குப் பயம் வந்து விட்டது. "ஐயையோ, .. நீ என்ன உன் சுயபுத்தியுடன் தான் பேசுகிருயா?.. அங்கே போனல் உன்னை இந்த உலகத்திலேயே காண முடியாதே அப்புறம். ராஜ குமாரி எங்கே, நீ எங்கே.. நீதான் எனக்குச் சகலமும். நீ போய்விட்டால் எனக்கு யாரப்பா அப்புறம்?" என்று கத்தினள்.

விசித்திரன், "பாட்டி.. இதென்ன இத்தனை பயம் உனக்கு? நான் திரும்பி வந்தப்புறம் பாரு...." என்று கூறி விட்டு வெளியே சென்றுவிட்டான். கிழவி கவலையுடன் உட்கார்ந்துவிட்டாள்.

விசித்திரன் நேராக அரண்மனை சென்றுன். அவன் ஒரே ஒரு விரல் அளவுதான் இருந்தான். அதனல் அவனை ஒருவரும் பார்க்கவில்லை.

என்ருள். அவளுக்கு அவன் வெளியே போவது பயமாய் இருந்தது.

விசித்திரன், "ஹூம்.. என்னை என்னன்னு நினைச்சுண்டே பாட்டி.. நான் இப்போ எங்கே போறேன், தெரியுமா? இப்பொழுது இந்த ஊரை ஆளும் ராஜா இல்லையா? அவர் பெண்ணைக்கல்யாணம் செய்துகொண்டு வரப்போறேன்" என்ருன் அலட்சியமாக.

அரண்மனையில் அன்று ஒரே கோலாகலம். ராஜகுமாரிக்குத் தகுந்த ராஜகுமாரனை அரசன் தேர்ந்தெடுக்கிறான் என்பதுதான் அதற்குக் காரணம். எல்லா ஊர் ராஜகுமாரர்களும் வந்து சேர்ந்திருந்தனர். எல்லா ராஜகுமாரர்களும், 'நான்தான், நீதான்' என்று போட்டியிட்டுக்கொண்டு முன் வந்தனர். அரசன் ஒவ்வொரு ராஜகுமாரனையும் பார்த்துப் பார்த்து ஒதுக்கினன். கடைசியில் அதி பலசாலியும் அழகனும் புத்திசாலியுமான ஒரு ராஜகுமாரனைத் தேர்ந்தெடுத்தான். அவனை அருகில் அழைத்து வைத்துக்கொண்டு, "சபையோர்களே, இதோ என் அருகில் நிற்கும் இந்த ராஜகுமாரரே நம் குமாரிக்குச் சரியானவர்" என்று அந்த ராஜகுமாரனை ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தினன்.

ஜனங்களும் வெகு சந்தோஷத்துடன் இருந்தனர். இந்தச் சமயத்தில் விசித்திரன் யார் கண்ணிலும் படாமல் நேராக அரசனின் சிம்மாசனத்தின் மேல் பக்கம் வந்து நின்றுகொண்டான். அரசன் அந்த ராஜகுமாரனை அறிமுகப்படுத்திய உடனே அரசனின் கிரீடத்தைத் தட்டிவிட்டான். எல்லாரும் திடுக்கிட்டனர். விசித்திரன் சிம்மாசனத்தின் ஒரு மூலையில் பதுங்கிக்கொண்டு வேடிக்கை பார்த்தான். எல்லாரும் ஒரே கூச்சல் போட்டார்கள். "அபசகுனம்.. அபசகுனம்.. இந்த ராஜகுமாரன் நமக்கு வேண்டாம்" என்று கத்தினர்கள். கிரீடம் தானுக விழுந்ததாக அவர்கள் நினைத்தார்கள். விசித்திரன் அவர்கள் கண்ணில் எப்படித் தென்பட்டிருப்பான்!

அரசனும் அதை ஆமோதித்தான். தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜகுமாரன் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு அவமானத்துடன் வெளியே போய்விட்டான். மற்ற ராஜகுமாரர்களும் தங்களை அரசன் ஒதுக்கிவிட்டார் என்ற அவமானத்தால் அப்போதே போய்விட்டார்கள். அதனல் அரசர், "இனி யாரை நம் குமாரிக்குத் தேர்ந்தெடுப்பது?" என்றுன் கவலையுடன். அப்போதுதான் விசித்திரன் வெளியே வந்தான். "இதோ நான் இருக்கிறேன், அரசே" என்றுன். அரசன் திடுக்கிட்டான். எதிரே யாரும் இல்லை. குரல் மட்டும் வந்தது. "யார் அது?" என்றுன் அதிகாரமாக. விசித்திரன் அரசனின் கைமேல் வந்து நின்றுன். அரசன் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தான். "என்ன, நீயா.. சீ..போ, வெளியே" என்று கோபத்தோடு இன்னெரு கையில் விசித்திரனை நசுக்கப் போனுன். அதற்குள் விசித்திரன் அரசனின் தோளுக்குத் தாவி அவன் காதைக் கடித்துவிட்டான். அரசனுக்கு வலி தாங்கமுடியவில்லை. எழுந்து குதித்தான். விசித்திரனைத் தள்ளிவிடப் பார்த்தான். ஆனல் ஒன்றும் முடியவில்லை. விசித்திரன் அரசனின் தலையில் ஏறி உட்கார்ந்துகொண்டான். குள்ளன் போய்விட்டான் என்று எண்ணித் தன் மாளிகைக்குச் சென்றுன் அரசன். ஆனல் அங்கே சென்று இளைப்பாறும்பொழுது விசித்திரன் அவன் எதிரில் வந்து நின்று, "அரசே, எனக்கு உங்கள் பெண்ணை மணம் செய்து வையுங்கள். உங்களுக்கு அதனல் ஒரு கெடுதலும் வராது" என்றுன் நயமாக.

ஆனால் அரசன் கேட்பானா? "சீ..பதரே.. போ வெளியே.. உன்னைக் கொல்ல எவ்வளவு நேரம் பிடிக்குமென்று நினைத்தாய்? போனால் போகட்டுமென்று பார்க்கிறேன். மரியாதையாகப் போய் விடு" என்று மிரட்டினான். விசித்திரனா விடுபவன்? "ஹூம்..என்னைக் கொல்ல எவனால் முடியும்? எங்கே அதையும்தான் பார்ப்போம்.." என்று தன் சிறு மீசையை முறுக்கினான். அரசனின் கோபம் உச்ச நிலையை அடைந்தது.

"என்ன, அவ்வளவு துணிச்சலா உனக்கு!" என்று பக்கத்திலிருந்த அழகிய சலவைக் கல் பொம்மை ஒன்றை எடுத்து விசித்ரன்மேல் வீசினான். ஆனால் அதற்குள் விசித்திரன் வேறு மூலைக்கு ஓடி விட்டான். பிறகு பின்புறமாக வந்து அரசன் மேல் ஏறி அரசன் மூக்கிலும் காதிலும் புகுந்து அவனை அநேக கஷ்டங்களுக்கு உள்ளாக்கினான். அரசன் உபத்திரவம் தாங்காமல் தன் சேனையை அழைத்து, "எப்படியேனும் இந்தக் குள்ளனைக் கொன்று விடுங்கள்" என்று உத்தர விட்டான். அவ்வளவு சிறு உடம்புடன் இந்த விசித்திரன், சைன்னியத்தார் கையில் சிக்குவானா? தப்பிக் கொண்டு அரசனைத் தொந்தரவு செய்ய வந்துவிட்டான். அரசன் எவ்வளவு முயன்றும் அவனால் விசித்திரனை ஒன்றுமே செய்ய முடியவில்லை. கடைசியில் ராஜகுமாரி தந்தை படும் அவஸ்தையைப் பார்க்கச் சகிக்காமல், "அப்பா, நான் அவரையே மணம் செய்துகொள்ளுகிறேன்" என்றாள்.

அரசன், "என்னம்மா, உனக்கு என்ன வந்துவிட்டது? இவனுக்கா உன்னைக் கொடுப்பது! உன் அழகென்ன! அந்தஸ்தென்ன!" என்று ராஜகுமாரியைக் கேட்டான்.

அவள், "அப்பா..நீங்கள் படும் கஷ்டத்தை என்னால் பார்க்க முடியவில்லை. என்னால்தானே உங்களுக்கு இந்த உபத்திரவம்? விசித்திரன் உங்களை இரவுபகலாகத்

தூங்கவிட மாட்டேன் என்கிறார். என்னால் உங்களுக்குக் கஷ்டம் வர வேண்டாம். நான் இவரையே தான் மணம் செய்துகொள்ளப் போகிறேன். இது நிச்சயம்'' என்றாள் தீர்மானமாக.

அரசன் வேறு வழி இல்லாமல் விசித்திரனிடம், தன் பெண்ணை அவனுக்குக் கொடுப்பதாக வாக்களித்தான். அதன்படி மறு வாரமே விவாகம் நடந்தது. மற்ற ஊர் ராஜகுமாரர்கள் பரிகாசம் செய்ய, ஊர் ஜனங்கள், ''இதென்ன அரசனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா?'' என்று அதிசயித்தார்கள். அரசனுக்கும் ராணிக்கும் ஒரே துக்கம். ராஜகுமாரிக்கும் துக்கமாகத்தான் இருந்தது. இருந்தாலும் அதை அவள் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

அரசனும் அரசியும் அழுது கொண்டே அவர்களுக்குச் சீர் கொடுத்தனுப்பினார்கள். விசித்திரன், சகல விருதுகளையும் சாமான்களையும் அங்கேயே விட்டு விட்டு ராஜகுமாரியுடன் நேராகக் கிளம்பினான்.

நேராகக் கிழவியின் குடிசையை இருவரும் அடைந்தனர். கிழவி ஆச்சரியத்துடன் ராஜகுமாரியைப் பார்த்தாள்.

''பார்த்தாயா பாட்டி, சொன்ன படி ராஜகுமாரியைக் கல்யாணம் செய்துகொண்டு வந்துட்டேன்!''

''ஆமாம் அப்பா, நீ சாதாரண மனிதனா? சொன்னபடியே செய்தும் காட்டிவிட்டாயே'' என்று ஆச்சரியப்பட்டாள் கிழவி.

''என் வீடு எங்கே, பாட்டி?'' என்றான் விசித்திரன். ''இதோ'' என்று உள்ளே காட்டினாள் கிழவி. விசித்திரன் ராஜகுமாரியைப் பார்த்து, ''இதோ பார், இந்த வீட்டை அந்த மேட்டின்மேல் வை'' என்று சற்றுத் தூரத்திலுள்ள ஒரு மேட்டைக் காண்பித்தான். ராஜகுமாரியும் அப்படியே செய்தாள்.

உடனே விசித்திரன் அந்த வீட்டினுள் சென்றான். அப்போது மின்னல்போல் ஒரு வெளிச்சம் தோன்றி மறைந்தது. கிழவிக்கும் ராஜகுமாரிக்கும் கண்கள் கூசின. கண்களை மூடித் திறந்தபோது அந்தச் சிறு வெள்ளி வீடு ஒரு பெரிய அரண்மனையாக மாறிவிட்டது. உள்ளே இருந்து வாட்ட சாட்டமான ஒரு ராஜகுமாரன் வந்தான்.

ராஜகுமாரி ஆச்சரியத்தினால் ஒன்றும் சொல்லத் தெரியாமல் திகைத்து நின்றாள். விசித்திரன், ''நான்தான் உன் கணவன். ஒரு பெரியவரின் சாபத்தால் குள்ளனாகிவிட்டேன். இனி அது தீர்ந்தது. வா, போகலாம்'' என்றான்.

பிறகு கிழவியின் பக்கம் திரும்பி, ''பாட்டி.. இந்தா உனக்கு வேண்டிய பணம். உனக்கு எப்பொழுது, என்ன வேண்டுமானாலும் என்னிடம் வந்து கேள், தருகிறேன். அன்று நீ பூசணிக்காயைப் பறிக்காமல் நான் சொன்ன சமயத்தில் அதைப் பறித்து அறுத்திருந்தால் நான் இந்தக் குள்ளன் ரூபத்தில் வெளியே கஷ்டப்பட்டே இருக்க மாட்டேன்'' என்று சொல்லிக் கிழவியிடம் பெரிய பண முடிப்பு ஒன்றைக் கொடுத்துவிட்டு ராஜகுமாரியுடன் அரண்மனைக்குள்ளே சென்றான்.

இது தெரிந்ததும் அரசன் தன் ராணியுடன் ஓடிவந்தான். மாப்பிள்ளையும் பெண்ணும் சந்தோஷமாய் இருப்பதைக் கண்டு திருப்தியுடன் திரும்பிச் சென்றனர்.

திருட்டு நாடகம்

மணியன்

"ஏண்டா மணி! நேத்து ராத்திரி சத்தப்படாமே எங்கேயோ போனயே, எங்கேடா?" என்று கேட்டார் சர்மா. எனக்குத் திக்கென்றது. இருந்தபோதிலும் சமாளித்துக்கொண்டு, "சம்சாரம் பார்க்கப் போனேன், மாமா!" என்றேன். அதுக்கு, "ஏண்டா திருடன்மாதிரி திரும்பித் திரும்பிப் பார்த்துண்டு போனே?" என்றார் அவர்.

"அப்பாவைக் கேட்டால் பரீட்சை சமயத்திலே விடமாட்டார்! அதனாலே எல்லாரும் தூங்கின பின்பு தெரியாமல் போனேன், மாமா!"

"அப்பவே தெரியும் எனக்கு! அந்தக் காலத்திலே" என்று ஆரம்பித்தார். நானும் அவர் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டேன்.

சர்மா எங்கள் தெருவில் என் வீட்டுக்கு எதிர்ப் பக்கத்தில் இருந்தார். போஸ்ட்மாஸ்டராக இருந்து ரிடையராகிப் பென்ஷன் வாங்கிக்கொண்டு இருக்கிறார். சொந்த வீட்டிலேயே காலம் கழித்து வருகிறார். சென்னையில் கேட்க வேண்டுமா, சொந்தமாக வீடு இருந்தால்? அவர் வீட்டில் ஏழு குடித்தனக்காரர்கள். சர்மாவும் அவர் மனைவியும்தான் தற்போது அங்கே இருக்கிறார்கள். ஒரு பிள்ளை பம்பாயில் வேலையாயிருக்கிறான். இரண்டு பெண்கள் வேறு எங்கேயோ இருக்கிறார்கள். அடிக்கடி அவர் எனக்குக் கதைகள் சொல்வார். அன்றும் அப்படித்தான்!

அந்தக் காலத்திலே நான் ஹைஸ்கூலிலே, இல்லே இல்லே, காலேஜிலே படிக்கிறபோது இந்தச் சம்பவம் நடந்தது. நான் அப்போ சிதம்பரத்தில் படித்துக்கொண்டிருந்தேன். அங்கே யாரும் சொந்தக்காரர்கள் இல்லையாதலால் காலேஜ் ஹாஸ்டலிலேயே சேர்ந்து படித்து வந்தேன். ஹாஸ்டல் வார்டன் மிகவும் கண்டிப்பான பேர்வழி. ஹாஸ்டல் பிள்ளைகள் யாரையும் அதிக நேரம் வெளியே விடாமல் பாதுகாத்து வந்தார். மாலை நாலு மணிக்கு மேல்தான் பிள்ளைகள் எங்கேயும் போகலாம். அதுவும் 6 மணிக்குள் திரும்பிவந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் ஹாஸ்டல் கேட்டைப் பூட்டிவிடுவார்கள்.



ஹாஸ்டல் பிள்ளைகள் காலேஜில் நல்ல மார்க்கு வாங்கவேண்டும். எவனாவது 50 மார்க்குகளுக்குக் குறைவாக வாங்கினால் வந்தது ஆபத்து. "ஏண்டா, தடிப்பயலே! உனக்கென்னடா குறைச்சல்? ராஜா மாதிரி சாப்பிட்டுவிட்டுப் படிக்காமே என்னடா செய்யறே! இனிமேல் இதுமாதிரி வாங்கினால் உன்னை டிஸ்மிஸ் செய்துவிடுவேன்" என்று கத்த ஆரம்பித்துவிடுவார். அது போலவே மற்ற விஷயத்திலும் மிகவும் கண்டிப்பாகவே இருந்து வந்தார். "நாடகம் பார்க்கணும் சார்!" என்று எவனாவது அவரிடம் கேட்டுவிட்டால் வந்தது ஆபத்து. "என்னடா, நாடகம் வேண்டிக் கிடக்கு! யாரோ ரெண்டு பேர் வந்து காலைத் தூக்கி, 'தா - தை' அப்படின்னு ஆடிக் காசைப் புடுங்கறா! அதை வேறு பார்க்கணுமாடா! நாடகமாம், கூத்தாம்" என்று இவரே டான்ஸ் செய்ய ஆரம்பித்துவிடுவார்.

மணி! உன் சினிமாப் பைத்தியத்தைப் போலவே நானும் அப்போது நாடகப் பைத்தியம் பிடித்துக்கொண்டு அலைந்தேன். என் அறையில் ஒரு பையன் இருந்தான். அவன் என்னைவிட ஒரு வகுப்பு அதிகம் படித்து வந்தான். எப்போது பார்த்தாலும் புஸ்தகத்தையே கட்டிக்கொண்டு அழுவான். நான் அறையில் படிக்காமல் என் நண்பன் கோபாலன் அறையிலேயே படிப்பேன். அங்கேயே எப்போதும் படுத்துக்கொண்டு விடுவேன். அப்போது ஒரு பிரசித்தி பெற்ற நாடகக் கம்பெனி வந்திருந்தது. அவர்களுடைய, 'குலேபகாவலி' நாடகம் ரொம்ப நன்றாயிருக்கிறது என்று பார்த்தவர்களெல்லாம் சொன்னார்கள். அதனால் என் நண்பன் கோபாலும் நானும் அதைப் பார்க்க எண்ணினோம்.

அன்றுதான் கடைசி நாள். இரவு மணி 10 அடித்தது. பத்து அடித்த

பிச்சைக்காரன்: ஐயா, சாமி! பசி கண்ணை இருட்டுதுங்க! எதுனாச் சும்....!

கண் வைத்தியர்: இந்தாப்பா, கம்பவுண்டர்! கண்ணுக்கு ஊத்தற மருந்திலே இரண்டு சொட்டு ஊத்தி அனுப்பு..

பிச்சைக்காரன்:........?

—S. ஞானசம்பந்தம்.

பின்புதான் படுக்கவேண்டும் என்பது வார்டன் கட்டளை. அதன்படி எல்லாரும் படுக்கப் போய்விட்டனர். நானும் கோபாலும் இரண்டாவது ஆட்டத்துக்குப் போக முதலிலேயே பிளான் போட்டு வைத்துவிட்டதால் ஹாஸ்டலை விட்டுக் கிளம்பினோம்.

மெதுவாகப் பதுங்கிப் பதுங்கி ஹாஸ்டல் சுவர் அருகில் வந்து நின்றோம். சுவரின் ஓரம் ஒரு மரம் சாய்ந்து வளர்ந்திருந்தது. அதன் மீது ஏறி சுவரிலிருந்து வெளியே குதித்தோம். முன்னேற்பாடாக எங்களை யாரும் தெரிந்துகொள்ளாமலிருக்கக் கையிலிருந்த டவலின் உதவியால் முண்டாசு கட்டிக்கொண்டோம். இருவரும் கொட்டகையை அடைந்து உள்ளே சென்றோம் டிக்கட்டுடன்.

நாடகம் முடிந்தது. வெகு அற்புதமாக இருந்தது நாடகம். இருவரும் கூட்டத்தை விட்டுப் பிரிந்து ஹாஸ்டலை நோக்கி நடந்தோம். எங்களுக்கு முன்பு பல முண்டாசு உருவங்கள் போய்க்கொண்டிருந்தன. அவர்கள் யாரோ என்று எண்ணிக்கொண்டு நாங்கள் அவர்களைக் கவனியாமல் விடு விடு என்று ஹாஸ்டலை நோக்கிச் சென்றோம்.

நல்ல வேளை! அன்று கடவுள் புண்ணியத்தால் நாங்கள் ஹாஸ்டல் முன் வழியாகச் செல்லவில்லை. பின் வழியாகவே சென்றோம். நான் என் அறையை அடைந்தேன். அறை பூட்டிக் கிடந்தது. மிகவும் ஆச்சரியமாக இருந்தது. 'புத்தகப் புழு' (என் அறையில் இருந்த மற்றொருவனுக்கு நாங்கள் அன்புடன் வைத்த பெயர்) கூட நாடகத்துக்குப் போயிருக்கிறான்.

உடனே நான் என் கையிலிருந்த சாவியைக்கொண்டு பூட்டைத் திறந்தேன். ஓர் அறைக்கு இரண்டு பேர் ஆகையால் இருவரிடமும் சாவி இருக்கும். அப்போது ஹாஸ்டல் தோட்டக்காரப் பையன் அந்த வழியே வந்தான். நான் அவனை அழைத்து, "எங்கேடா இந்நேரத்தில் போகிறாய்?" எனக் கேட்டேன். அதற்கு அவன், "வார்டன் எல்லா ரூமையும் சோதனை செய்து கொண்டு வந்தார். அதில் 22 பேரைக் காணவில்லை. நாடகத்துக்கு திருட்டுத்தனமாகப் போயிருப்பார்கள் என்று எண்ணி மற்ற இரண்டு பியூன்களுடன் கேட் ஓரத்தில் நின்றுகொண்டிருக்கிறார்" என்று கூறினான்.

அதைக் கேட்டதும் எங்களுக்குத் 'திக்'கென்றது. கோபால் அவனிடம் நாலணாவைக் கொடுத்து, "நாங்கள் இருவரும் உள்ளே போய்விடுகிறோம். நீ ரூமைப் பூட்டிவிட்டுப் போய்விடு" என்றான். அம்மாதிரியே உள்ளே நாங்கள் போக, அவன் ரூமைப் பூட்டிவிட்டுச் சென்றான்.

ஹாஸ்டல் கொஞ்ச நேரம் நிச்சப்தமாக இருந்தது. நாடகம் பார்த்து விட்டு வந்த யாவரும் ஒருவர் பின் ஒருவராக உள்ளே குதிக்கவே, கீழே தயாராக இருந்த பியூன்களும் வார்டனும் அவர்களைக் கையோடு பிடித்து ஹாஸ்டல் மெயின் ஹாலில் கொண்டுவந்தார்கள். எடுத்த ஜாபிதாவின்படி ஒவ்வொருவராகப் பேரை வாசித்தார் வார்டன். அவர் வாசித்தவர்களில் 8-ஆம் நம்பர் ரூம் சர்மா, 2-ஆம் நம்பர் ரூம் கோபால் இருவரையும் அங்கே காணோம். அவர் மற்றவர்களைப் பார்த்து, "கோபாலையும் சர்மாவையும் நீங்கள் நாடகக் கொட்டகையில் பார்த்தீர்களா?" என்று கேட்டார். அவர்கள் இல்லை என்று கூறிவிட்டனர்.

அவரே நேராக எங்கள் அறையின் அருகில் வந்தார். ரூம் பூட்டியிருந்தது. திறந்து வைத்த ஜன்னல் வழியாக டார்ச் லைட்டை அடித்துப் பார்த்தார். நாங்கள் அப்போது தான் புரண்டு படுத்தோம். உடனே அவர் 'புத்தகப்புழு'வை அழைத்து, "தடிப் பயலே! நாடகத்துக்குப் போகிற அவசரத்திலே உள்ளே இருக்கிறவர்கள் கூட உனக்குத் தெரியவில்லையா?" என்று திட்டினார். எங்களுக்கோ சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. புத்தகப் புழுவுக்கு, பாவம், அவமானமாக இருந்தது. நல்ல வேளை! எல்லோரையும் மன்னித்து அனுப்பி விட்டார் வார்டன்.

"எப்படிடா மணி, நாங்கள் நாடகம் பார்த்தது?" என்றார். "சபாஷ்; மாமா?" என்று ஒரு சபாஷ் போட்டுவிட்டு வந்துவிட்டேன்.

பலசாலி!

சூரியனுக்கும் வாயுபகவானுக்கும் ஒரு நாள் பெருத்த விவாதம் ஏற்பட்டது. தங்களுக்குள் யார் அதிகத் திறமையுள்ளவர் என்பதைப் பற்றித்தான். விவாதம் முற்றிக் கடைசியில் வழியில் செல்லும் ஒரு பிரயாணியை தன் மேற்சட்டையைக் கழற்றும்படி செய்வோரே போட்டியில் வெற்றி பெற்றவராவார் என்ற முடிவுக்கு இருவரும் வந்தனர். முதலில் வாயுபகவான் தன் பராக்கிரமத்தைக் காட்ட முன்வந்தார். காற்றைச் சுழற்றிச் சுழற்றி வீசி மூச்சைத் திணற அடித்தார். பிரயாணியின் தலை மயிரும் மேற்சட்டையும் காற்றில் பறந்தது. மேலும் மேலும் அவன் சட்டையை இழுத்து உடம்பை நன்கு மூடிக் கொண்டான். காற்றில் சட்டை பறந்து கிழியாமல் இருக்கத் தன் கையால் உடம்புடன் பிடித்துக் கொண்டான். வாயு பகவானின் ஆட்டம் ஓய்ந்தது.

பிறகு சூரியன் தன் கிரணங்களை அந்தப் பிரயாணியின் தலையில் விழச் செய்தான். மிகவும் புழுக்கமாக இருந்தபடியால் பிரயாணி சட்டைப் பொத்தான்களைக் கழற்றினான். பிறகு சூரியனின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் அவன் தன் சட்டையைக் கழற்றிவிட்டு மரத்து நிழலில் உட்கார்ந்தான். வாயு பகவானின் ரௌத்திராகாரத்தை விட, சூரியனின் கிரணங்கள் மட்டும் அவன் சட்டையைக் கழற்றும்படிச் செய்தன.

ஆர்ப்பாட்டத்தைவிட அமைதியே பலம் வாய்ந்தது என்பதை வாயுபகவான் தெரிந்து கொண்டார்.

—ஈசாப் கதை

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(S) 503. சுப்பிரமணியன், K. N., ஸ்ரீவைகுண்டம். 504. சிவராமன், S., கிருஷ்ணகிரி. 505. சிவநாதன், P., உல்பாரு. 506. சீனிவாசன், பிரகாசன், மேட்டூர் அணை. 507. சுப்பிரமணியன், S.R., சிங்காநல்லூர். 508. சுப்பிரமணியன், K., ராஜபாளையம். 509. சுந்தரம், R., ராசிபுரம். 510. சன்கிருஷ்ணன், P. L., உதகமண்டலம். 511. சுபாஷ்சந்திர போஸ், P., சென்னை-11. 512. சஜீத் M.J.A., கொழும்பு. 513. சுந்தரம், M.K., சென்னை-5. 514. சந்தானம், N. S., சேலம். 515. செல்வராஜ், A., கொழும்பு. 516. சிவராமன், V., திருச்சிராப்பள்ளி. 517. சௌந்தரபாண்டியன், K., புதுச்சேரி. 518. ஷேக் மசூப், கோயம்புத்தூர். 519. சிவகாமி, கந்தசாமி, P., இடப்பாடி. 520. சாமிக்கண்ணு, A., ஆதுறை. 521. சௌந்தரராஜன், J., மதுரை. 522. சுந்தரேசன், S., புதுச்சேரி. 523. சுந்தர மகாலிங்கம், K., சட்டிராப்பட்டி. 524. சுந்தரம், சுப்பிரமணியன், K. S., கல்லிடைக்குறிச்சி. 525. சிவப்பிரகாசம், T. M., குடியாத்தம். 526. சுந்தரம் T., வண்டலூர். 527. சிவராமகிருஷ்ணன், N.S., பரன்பூர். 528. சிவராமன், P., இடப்பாடி. 529. சையத் கியாஸுதீன், திருக்களாச்சேரி. 530. சிவராஜன், V. N., ஊத்துக்குழி. 532. சிவசுப்பிரமணியன், V. S., கொண்டபுரம். 533. சிவராஜன், R., திருவண்ணாமலை. 543. சிவராமலிங்கம், R., திருநெல்வேலி. 535. சாந்தாபாய், காமாக்ஷி, ஸ்ரீவைகுண்டம். 536. சாந்தா, வசந்தா, S., வேலூர். 537. சுப்பிரமணியம், M., சென்னை-5. 539. சீனிவாசன், ராமானுஜம், வரதராஜன், பத்மா, ஜயமணி, விஜயராகவன், ராஜி, V. S., சென்னை-17. 540. சுப்பிரமணியன், N., சென்னை-17. 541. சையத் மஸ்தான், M., புதுச்சேரி. 542. சாரங்கராஜன், K., சென்னை-4. 543. சுந்தரம்மாள், S., கொழும்பு. 544. சுந்தர், K.S., சென்னை-14. 545. சேகரன், K.N., சென்னை-17.

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

____

(தேதி, மாதம், வருஷம்)

மே '52 கூபன் நெ:

546. சுப்பிரமணியன், S., அணைக்கரை. 547. சேஷன், R. S., மதுரை. 548. சாயிபாபா, T.S., சென்னை-5. 549. சுந்தரராஜன் S., சாத்தூர். 550. சுப்பையன், R., மதுரை. 551. சுந்தர ராஜன், N. R., நங்கவரம். 552. சீனிவாசன், வத்ஸலா, S, சென்னை-24. 553. சுப்பிரமணியன், K., திருவிடைமருதூர். 554. ஷேக் தாவூத், M., வழுத்தூர். 555. சீதா, M.R., திருவள்ளூர். 556. செல்வரங்கன், P., சென்னை-4. 557. சகாதேவதுரை, A., சுளிபுரம். 558. சங்கரகிருஷ்ணன், சுந்தரமூர்த்தி, V., சோழவந்தான். 559. செல்வராஜா, S., நெல்லூர். 560. சுப்பிரமணியன், சாமிநாதன், V., ஆரகளூர். 561. சேதுராமலிங்கம், A., கீழக்கரை.

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

மாதந்தோறும்
இங்கிலீஷ் 1 - ஆம் தேதி
வெளிவரும்.

புதிதாகச் சேருபவர்கள் 1952-ஆம் வருஷக் கூபன்களைத் தான் அனுப்பவேண்டும்.
1951-ஆம வருஷக் கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★★

562. ஷேக் அலாவுதீன், ஆதிகுடி. 563. சுப்பிரமணியன், சீனிவாசன், மோகனூர். 564. சம்பத், சுப்பிரமணியன், K.R.G., ஆரணி. 565. சண்முகநாதன், S.K., மணிப்பாய். 566. சுப்புலக்ஷ்மி, V. S., ராஜபாளையம். 567. செல்வராஜ், R., சென்னை-18. 568. சுப்பராஜ், R., விருதுநகர். 569. சுப்பிரமணியன், B., திருவனந்தபுரம். 570. சுப்பிரமணியன், V. R., உடுமலைப்பேட்டை. 571. சத்தியவேல், M. V., மணிநகரம். 572. சீனிவாசன், S. S., சட்டநாதபுரம். 573. சேதுபதி, B., திருப்பராய்த்தறை. 574. குசை அலங்காரம், பெர்னாண்டோ, கொழும்பு. 575. சுந்தரம், N., குளிப்பிறை. 576. சாரதா, பத்மாவதி, G., பெங்களூர். 577. சுவாமிநாதன், S., (விலாசம் எழுதவில்லை) 579. சண்முகநாதன், I., புதூர். 580. சாந்திலால், சோகன்லால், K., செங்கம். 581. சுப்பையா, S., ரத்தினப்புரா. 582. சாரதா, மீனம்பாள், ஜலகண்டபுரம். 583. சாவித்திரிதேவி, சந்திரன், பாலகிருஷ்ணன், ராமசந்திரன், K. C., யாழ்ப்பாணம். 584. சுப்பிரமணியன், மீனாக்ஷி, V., சென்னை-17. 585. சோபனா, விசு, புதுடில்லி. 586. சீனிவாசன், K., புனா. 587. சங்கரன், M.K., திருச்சிராப்பள்ளி. 589. சுப்பிரமணியன், சுந்தரம், P. S., வேலூர். 590. சுப்பிரமணியன், A. V., சென்னை-5. 591. சுந்தரேசன், A. V., சென்னை-5. 592. சுந்தரராமன், N., வீரராகவபுரம். 593. சங்கரநாராயணன், R., கல்லிடைக்குறிச்சி. 594. சிவதாஸ், T. N., திருச்சூர்.

(மீதி அடுத்த இதழில்)

வெளவால்

பி. நாராயணன்

வெளவாலை நீங்கள் எல்லாரும் பார்த்திருக்கிறீர்கள், அல்லவா? சரி; அதைப் பற்றி ஒரு கதைகூடக் கேள்விப் பட்டிருப்பீர்களே! அதுதான்,.. பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் நடந்த சண்டையில் வெளவால் இரு கட்சியிலும் சேர்ந்ததாம்!.. ஆமாம்! அந்தக் கதையேதான்! அது வெறும் சட்டுக் கதை! எதோ சோம்பேறிகள் கயிறு திரித்தார்கள்! அதில் முளைத்ததுதான் இந்தக் கதை!

வெளவால் பாழடைந்த மண்டபங்களிலும் இருள் அடர்ந்த மரங்களிலும் தங்குகிறது. பகல் நேரங்களில் இது வெளியே வருவதில்லை. இதற்கு முக்கிய காரணம் வெளவாலுக்குச் சூரிய வெளிச்சம் பிடிக்காது. சூரிய வெளிச்சத்தில் அதன் கண் பார்வை மட்டு. வெளவால் ஒரு பறவையுமல்ல; மிருகமுமல்ல. ஆனால் பறவையும்தான்; மிருகமும் தான். அதற்கு பல் இருக்கிறது, அதனுல் மிருகம். பறக்கிறது; அதனுல் பறவை. ஆதலால் வெளவால் ஓர் இரண்டுங் கெட்டான். (இனி அதை 'மிருகப் பறவை' என்று கூப்பிடலாமென்று நினைக்கிருயா? பேஷ்..பேஷ்..!) இது மிருகவர்க்கத்தைச் சேர்ந்தது என்றுதான் முக்காலும் தோன்றுகிறது. ஏனென்ருல், மிருகங்கள் குட்டி போடுகின்றன. பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. வெளவால் குட்டிதான் போடுகிறது. ஆனுல் பறவை போல் பறக்கிறது! அதனுல்தான் வெளவால் ஓர் இரண்டுங் கெட்டான் என்று சொன்னேன்!

வெளவால்குட்டி போட்டுத் தன் மார்பில் குட்டியை வளர்க்கிறது. குட்டிவெளவால் தாயின் கழுத்தை நகத்தால் இறுகப் பிடித்துக் கொள்கிறது. குட்டி வெளவால் பறப்பதற்கும் மரக்கிளையில் தொங்கவும் தாய் வெளவால் கற்றுக் கொடுக்கிறது. அதற்குப் பிறகு குட்டி வெளவால் தனியாக வாழச் செல்லும்.

இதன் இறகிலுள்ள நரம்பு பறப்பதற்கும் மரக்கிளையில் தொங்குவதற்கும் சௌகரியமான விதத்தில் அமைந்திருக்கிறது.

வெளவால் சாயந்திர வேளைகளில் அதாவது ஆறு, ஆறரை மணி சமயத்தில் பறக்க ஆரம்பிக்கும். இது பறக்கும் போது வாயைத் திறந்துகொண்டே பறக்கும். போகிற போக்கில் ஏதாவது பூச்சி அதன் வாயில் மாட்டிக் கொள்ளும். உடனே வெளவால் அதை 'ஸ்வாஹா' செய்துவிடும். ஏதாவது வண்டு அகப்பட்டால் வெளவால் அதன் மேலேயுள்ள கெட்டியான மூடியை நீக்கிவிடும். அதற்கான சாமர்த்தியம் வெளவாலுக்கு உண்டு!

வெளவால் மரக்கிளைகளில் தொங்கும்போது தான் கீழே விழாதபடி மரக்கிளையில் நன்ருகப் பிடித்துக்கொண்டிருக்கிறது.

அதக்குக் கால் நரம்புகள் மிகவும் உதவுகின்றன. அது மரக்கிளையில் தொங்கும் போதும் பறக்கும் போதும் நெஞ்சிலுள்ள வெளவால் குட்டி கீழே விழாதபடி அதன் பை அமைந்திருக்கிறது.

அது சரி, உங்களை ஒரு மரங்கள் நிறைந்த சோலைக்குக் கூட்டிச் சென்று கண்ணைக் கட்டிவிட்டு, நடக்கச் சொன்னால்..! மரத்தில் ஒரு..கும்! ஒரு..ணங்! "அப்பாடா! மண்டை போச்சு!" என்று சொல்லிவிட்டு அப்படியே கல்லுப் பிள்ளையார் மாதிரி ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருப்பீர்கள்..! இல்லையா? ஆனால் காதைக் கட்டி விட்டால் 'ஜாம் ஜாம்' என்று ராஜாபோல் ராஜ நடை போட்டு நடப்பீர்கள்! இல்லையா? ஆனால் வெளவாலின் கண்களைக் கட்டி, நீ முட்டிக் கொண்டாயே, அதே சோலையில் பறக்க விடு! 'ஜாம் ஜாம்' என்று ஒரு மரத்திலும் முட்டிக்கொள்ளாமல் பறக்கும். ஆனால் அதன் காதைக் கட்டிவிடு! அந்த மரத்தில் ஓர் இடி; இந்த மரத்தில் ஓர் இடி! அதன் தலை சட்டினியாகிவிடும்!

'அடேடே! ஆச்சரியமாயிருக்கே' என்கிறாயா? நிஜம் தான்! ஆச்சரியம்தான்!

அதன் கண் பார்வை ரொம்ப மட்டு! காதுதான் முக்கியம்! வெளவால் பறக்கும் போது ஒரு சத்தம் செய்துகொண்டே பறக்கிறது. அந்தச் சத்தத்தால் உண்டாகும் அலைகள், எதிரில் உள்ள மரத்தில் போய்ப் படும்! அதில் பட்டு அலைகள் எதிர்த்திசையில் திரும்பும். இந்த அலை, அதாவது திரும்பிவரும் அலை வெளவாலின் காதில் வந்து படுகிறது! காதில் உள்ள சிறிய நரம்புகள் அந்த அலைகளில் உள்ள ஒலியை, ஒலிபெருக்கியைப் போல் வெளவாலுக்குத் தெரிவிக்கிறது! அதனால் வெளவாலுக்கு, ஏதாவது சத்தம்கேட்டால் அந்த இடத்தில் ஏதோ இருக்கிறது என்று வேறு திசையில் பறக்கும். இதெல்லாம் கண்மூடிக் கண் திறப்பதற்குள் நடக்கும். இப்படிக் காதால்தான் வெளவால் திசை அறிகிறது. கண் இருந்தும் சரியாகக்கூடப் பார்க்க முடியாது.

ஒரு விஞ்ஞானி எப்படி இதைக் கண்டுபிடித்து நிரூபித்தார் தெரியுமா?

ஒரு நாள், ஒரு வெளவாலைப் பிடித்து, அதன் கண்களை மறைத்துவிட்டு, ஒரு கஜ அகலத்தில் கெட்டியான கம்பிகள் அடுக்கடுக்காகத் தரையிலிருந்து அடுக்கியிருந்த ஓர் அறையில் கொண்டு பறக்கவிட்டார். அது ஒரு கம்பியில்கூட மோதிக்கொள்ளாமல் பறந்தது. பிறகு காதைக் கட்டிவிட்டுப் பறக்கவிட்டார். அப்போது கம்பிகளில் மோதிக்கொண்டது.

இப்படியே அதன் காதின் உபயோகத்தைக் கண்டுபிடித்தார் அவர்.

"அம்மாடியோவ்..! வெளவால் ஓர் அதிசயப் பிறவிதான்" என்கிறீர்களா? சந்தேகமென்ன?

வெளவாலிலேயே பல ரகமுண்டு. சில இரவு வேளைகளில் பழம் தின்னும். சில மிருகங்களின் ரத்தம் குடிக்கும். லாடம் போன்ற முகமுள்ள வெளவால்கூட இருக்கிறதாம்!

வாஸ்தவமாகவே வெளவால் ஓர் அதிசயப் பிறவிதான்!


மைக்ரோஸ்கோப்
புரொபஸர் விஞ்ஞானம்
1
வாருங்கள். குட்டையில் தேங்கிய நீரில் ஒரு சொட்டை இந்தக் கண்ணாடியில் வைத்திருக்கிறேன். அதில் என்ன தெரிகிறது பாருங்கள்
குட்டை நீரிலுள்ள பூச்சிகள்
2
போ! போ! பயமுறுத்தாதே. என் கண்ணுக்கு அழுக்குத் தண்ணீர்தானே தெரிகிறது!
அப்பப்பா! எத்தனை பயங்கரமான பூச்சிகள் தெரிகின்றன!
3
நீ பாரேன், கண்ணு.
எத்தனை விதமான பூச்சிகள்! எவ்வளவு பெரிதாய்த் தெரிகின்றன இவ்வளவுமா இந்தச் சொட்டுத் தண்ணீரில் இருக்கின்றன?
மலேரியா கிருமிகள்

4
இந்தமாதிரியான பூதக் கண்ணடி சிறிய எழுத்துக் களேயும் பொருள்களேயும் பெரிதாகக்காட்டும் அல்லவா? இதற்கு இரட்டைக் குவிலென்ஸ் (Double Convex Lens) என்று பெயர். ஒருலென்ஸின் வழியாகப் பார்த்தால் எவ்வளவு பெரிதாகத் தெரியுமோ அதைப் போல இரண்டுலென்ஸ்களே உபயோகித்துப் பார்த்தால் பல மடங்கு பெரிதாகத் தெரியும்.
இது எப்படி ஸார தெரிகிறது?
5
இதோ இருக்கும் கருவிக்கு மைக்ரோஸ்கோப் என்றுபெயர். மைக்ரோஸ்கோப்புகளில் இரண்டு லென்ஸ்கள்தான் இருந்தன. இப்பொழுது மிகச் சிறந்த மைக்ரோஸ் கோப்புகளே அமைத்திருக் கிருர்கள். அவைகளில் பல லென்ஸ் அடுக்குகள் இருக்கின்றன. இந்தக் கருவி 20000 மடங்கு வரையில் பெரிதாகக் காட்டக்கூடியது
மைக்ரோஸ்கோப்
6
பல மடங்கு பெரிதாகப் பார்ப்பதால் என்ன பயன்?
இதனல் எத்தனேயோ வகையான உபயோகங்கள் உண்டு. மலேரியா ஜுரத்துக்குக்கண்ணுக்குத் தெரியாத ஒரு வகை நுண்ணிய பாக்டீரியாக்கள்தான் காரணம் என்று ஸர் ரோனுல்டுராஸ் கண்டு பிடித்தார். ரத்த சோதனே, தாவரம் முதலிய ஜீவ ஜந்துக்களின் உள் அமைப்பு, நோய்க் கிருமிகள் இப்படிப் பல ஆராய்ச்சிகளுக்கு இதுபயன்படுகிறது.

7
மைக்ரோஸ்கோப்பை யார் கண்டுபிடித்தார்கள்?
ஒரு லென்ஸினால் பொருள்களைப் பெரிதாகப்பார்க்க முடியும் என்று முன் காலத்திலேயே தெரியும். இரண்டு லென்ஸ்களைப் பொருத்தி அடுக்கினால் அந்தப் பொருள்கள் மேலும் பன்மடங்கு பெரிதாகத் தெரியும். இதை ஹாலந்து நாட்டினரான ஜான்ஸேன் 1590-ஆம் வருஷத்தில் கண்டுபிடித்தார். பிறகு ஹாலந்து நாட்டின் லீவென் ஹூக் என்பவர் இவ்வகையான மைக்ரோஸ் கோப் ஒன்றை அமைத்து ரத்த ஓட்டம், பாக்டீரியா முதலிய அற்புதமான விஷயங்களைக் கண்டுபிடித்தார்.
லீவென் ஹூக்
முந்நூறு வருஷங்களாக மைக்ரோஸ்கோப்பின் அமைப்பு மேலும் மேலும் வளர்ந்து வந்திருக்கிறது. அதன் உதவியால் மிகமிக நுண்ணிய நோய்க் கிருமிகளையும் இப்போது காணமுடிகிறது.
8
லீவென் ஹூக் செய்த மைக்ரோஸ்கோப்
டைபாய்ட
டிப்தீரியா
காலரா
டியூபர் குளோஸிஸ்


9 பிரான்ஸ் தேசத்துக் கோட்டைக்குள்ளே அடைபட்ட பிரெஞ்சுக்காரர் அன்றாடச் செய்திகளை மிகச் சிறிய அளவில் படமாகப் பிடித்தனர். அதில் 50,000 செய்திகள் அடங்கியிருக்கும். இந்தப் படத்தைச் சுருட்டி வாத்து இறகின் குழாயில் செருகி, புறாக்காலில் கட்டி, பலூனில் அந்தப் புறாக்களை ஏற்றி வெளியே அனுப்பினார்கள். வெளியிலுள்ளவர்கள் அவைகளைப் பிடித்துச் செய்திகளை மைக்ரோஸ்கோப்பின் உதவியால் பெரிதாக்கிப் படித்துத் தெரிந்துகொண்டு, அவைகளைப் பறக்க விட்டதும் அவை மீண்டும் பாரிஸ் நகருக்குள் வந்து விட்டன. இவ்வாறு 25 லக்ஷம் செய்திகள் அந்த முற்றுகையின்போது அனுப்பப்பட்டன.
காக்
ராஸ்
பாஸ்டியர்

நீச்சல் பழக்கம்

அபாயம்; ஜாக்கிரதை!

1. வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு நீந்தாதே.

2. பரந்த நீர்நிலைகளில் துணையின்றி வெகுதூரம் நீச்சலடிக்காதே.

3. பந்தோபஸ்து இல்லாத நீர் நிலைகளில் காற்றடைத்த ரப்பர் டியூப் முதலிய போலி ஆதாரங்களை வைத்துக்கொண்டு நீந்தாதே.

4. வெடவெடவென்று நடுக்கும் குளிரில் நீந்தாதே.

5. ஆறு, ஓடை முதலியவற்றில் எதிர்நீச்சுப் போடாதே.

6. தடுக்கும்படி ஆடைகளை உடுத்துக்கொண்டு நீந்தாதே.

7. புதிய இடங்களில் போய் முன்பின் தெரியாமல் நீந்தாதே.

★

மிதத்தல் (தொடர்ச்சி)

நீச்சல் ஒரு தேகப் பயிற்சி. ஆபத்துக் காலத்தில் உதவக்கூடியது. ஆகவே பெரியவர்கள் உதவியுடன் இதைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

முன்புற நீச்சல்

1. மிகவும் தேர்ச்சியடைந்தவர்கள்கூடக் காலால் உதைத்துக் கொள்வதற்கு ஒரு கட்டையை வைத்துக்கொண்டு பழகுகிறார்கள். மரக்கட்டை குறைந்தது $1\frac{1}{2}$ அடி அகலமும் 2 அடி நீளமும் இருப்பது நல்லது. அந்தப் பலகையில் கையை ஊன்றிப் பிடித்துக்கொண்டு காலால் படத்தில் காட்டியபடி உதைத்துப் பழகிக் கொள்ளலாம்.





2. இந்த மாதிரி பிடித்துக்கொண்டால் காலை மேலும் கீழும் நன்ருக உதைத்துக்கொள்ளலாம். அதிக நேரம் நீந்த நேர்ந்தாலும் கை சளைக்காதபடி இருப்பதற்காக இவ்விதம் செய்து பழகுவது அவசியம். கை சளைக்காமல் இருக்கவும் இதே போல நிற்கக் கூடிய ஆழத்தில் பயிற்சி செய்துகொள்ள வேண்டும்.

★

3. குட்டி நீச்சல் என்று இதைச் சொல்கிருர்கள். கையும் காலும் தண்ணீருக்குள்ளேயே ஒரே அளவு வேகத்தில் முன்னேறிச் செல்கின்றன.

★

4. பிறகு காலை நீட்டிக்கொண்டு படுக்கை நிலையில் உதைத்துக் கொள்ளவேண்டும். கை மெல்ல மெல்ல உயர்ந்து வந்து தண்ணீரைத் தள்ளுகிறது.

5. இதற்குக் கைமாற்றுப் போடுதல் என்று பெயர். இதில் மூன்று முக்கிய விஷயங்களைக் கவனிக்கவேண்டும்.

(i) கையை ஒரே அளவு உயரம் தூக்கி, ஒரே வேகத்துடன் தண்ணீரைத் தள்ளவேண்டும்.

(ii) அலையைப் போன்று கால்கள் மாறி மாறித் தண்ணீரைத் தள்ள வேண்டும். இரண்டு கையும் ஒரு தடவை நீச்சலடிப்பதற்குள் கால்கள் மாறி மாறி ஆறு தடவைகள் தண்ணீரில் உதைத்துக் கொள்ளும்.

(iii) கையை மாற்றிப் போடும்போதுதான் மூச்சு விட்டு அடக்கிப் பழகவேண்டும்.

★

6. கைமாற்றுப் போட்டு வேகமாக நீந்துவது. இந்த நீச்சல் பார்ப்பதற்கே அழகாக இருக்கும். முகத்தைத் தண்ணீரில் கவிழ்த்துக்கொண்டு மூச்சு விடும்போது மட்டும் தலையை உயர்த்துவது.

★

7. மூச்சை நன்றாக இழுத்து அடக்கிக்கொண்டு நீச்சலடிப்பது. படம் 6-இலும் 7-இலும் உடம்பு இருக்கும் வாட்டத்தை நன்றாக மனசில் பதிய வைத்துக்கொள்ளுங்கள்.



கேட்டீர்களா!

சேலத்துக்குக் காவிரி ஜலம்

மேட்டூரிலிருந்து சேலத்துக்கு ஜலம் சப்ளை செய்வதற்காக ஹஸ் தம்பட்டியில் காவிரி ஜலத்தைத் தேக்கிக் குழாய் மூலம் கொண்டு வருகிறார்கள். இந்தச் சேலம் - மேட்டூர்க் குடிதண்ணீர்த் திட்டத்தை, சென்னைப் பிரதம மந்திரி ராஜாஜி முதல்முதலாகத் திறந்து வைத்தார்.

ஹிந்து ஹைஸ்கூல் நூற்றாண்டு விழா

திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலின் நூற்றாண்டு விழாவை, சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா தொடங்கி வைத்தார். இந்த ஹைஸ்கூல் 1852-ஆம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. சுதேசமித்திரனைத் தொடங்கிய ஜி. சுப்பிரமணிய ஐயரும், மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரும் இதற்குத் தலைமை ஆசிரியர்களாக இருந்திருக்கிறார்கள். இந்தப் பள்ளிக்கூடத்தின் முதல் தலைமையாசிரியருக்குச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? பத்து ரூபாய்தான். ஆசிரியர்களுக்குச் சம்பளம் ஒன்றரை ரூபாய்தான்.

ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ்

இங்கிலாந்து நிதி மந்திரியாக இருந்த ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் ஸ்விட்ஸர்லாந்தில் காலமானார். இவர் இந்தியா சுதந்தரமடைவதில் மிகுந்த ஆர்வம் காட்டியவர்.

உப ஜனாதிபதி

சென்னையைச் சேர்ந்த டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் இந்தியாவின் உப ஜனாதிபதியாகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். இவர் இதுவரை மாஸ்கோவில் இந்தியத் தூதராக இருந்துவந்தார்.

அமெரிக்கக் கலைவிழா

அமெரிக்கக் கலைவிழா நடக்கப் போவதாக அறிவிக்கும் விளம்பரமொன்றைத் தீட்டுவதற்காக நடந்த போட்டியில் சென்னையைச் சேர்ந்த 4 ஓவியர்கள் பரிசு பெற்றார்கள். சென்னை நகரைச் சேர்ந்த கே. ஸ்ரீநிவாசலு, ஜி. வி. சுப்பராவ், கோவையைச் சேர்ந்த எம். என். நாம், திருச்சியைச் சேர்ந்த ஏ. ஒய். வி. நாதன் ஆகியோர்களே அவர்கள்.

ராயலசீமைப் பஞ்சம்

சித்தூர், கடப்பை, கர்நூல், அனந்தப்பூர் ஜில்லாக்கள் சேர்ந்தது ராயலசீமைப் பிரதேசம். இங்கே கொடும் பஞ்சமான நிலைமை. பஞ்ச நிவாரண வேலைகளுக்காக இந்திய ராணுவம் அனுப்பப்பட்டுள்ளது. ராணுவத்தினர் கிணறுகளை ஆழ வெட்டி, தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்கப் பாடுபட்டு வருகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி

வருகிற நவம்பர் மாதம் நடக்கவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு ட்ருமன் தாம் ஓர் அபேட்சகராக இருக்க மறுத்துவிட்டார்.

தந்தையின் கடிதம்

அன்பார்ந்த ஐயா,

தங்கள் மாதாந்தரப் பத்திரிகை 'கண்ணன்' குழந்தைகளுக்கு மிகக் கவர்ச்சியளிக்கிறது. குழந்தைகள் எழுதும் கதைகளைப் பிரசுரிப்பதால், பிற்காலத்தில் பெரிய எழுத்தாளர்களாக ஆகவேண்டும் என்னும் ஆர்வத்தை ஏற்படுத்துவதுடன் பல புஸ்தகங்களைப் படிக்கும் ஆர்வத்தையும் அளிக்கிறது. பத்திரிகைகளுக்கு எழுதும் ஒரு தீவிர விருப்பத்தை உண்டாக்கினுல் அவர்கள் பள்ளிக் கல்வி பாதிக்கப்படுவதாய் எண்ணுவது தவறு. பத்திரிகைகளுக்குப் புத்தி சாலித்தனமான கதைகளையோ விஷயங்களையோ எழுதுவதால் அவர்களுக்குப் புத்தி விசாலமாவதுடன் பொதுவில் விஷயங்களைக் கிரகிப்பதிலும் எடுத்துரைப்பதிலும் வன்மை ஏற்படும். விடுமுறை நாட்களை வீண் காலமாகக் கழிக்காமல் குழந்தைகள் அபிவிருத்தியடைய இத்தகைய உற்சாக மூட்டல் மிக அவசியம். பெற்றோர்களுக்கும் தங்கள் குழந்தைகள் முன்னேற்றத்துக்கு உதவும் ஒரு கருவியாகக் கண்ணன் இருப்பது மகிழ்ச்சியை ஊட்டுகிறது.

T.R. நடராஜன், பி. ஏ., டிபார்ட்மெண்ட் ஆப் பிஸிக்ஸ், லயோலா காலேஜ். அஸிஸ் நகர். [N. வத்ஸலா (V. 67)வின் தந்தை]

* * * *

தாயின் கடிதம்

ஆசிரியர் அவர்களுக்கு,

கண்ணன் மாதம் ஒரு முறையாக இருக்கலாமா இரு முறையாக வேண்டுமா என்று கேட்டிருக்கிறீர்கள். படிக்கும் இரண்டு குழந்தைகளின் தாய் என்ற முறையில் நானும் என் அபிப்பிராயத்தை எழுதியிருக்கிறேன். மாதம் இரண்டாக இருந்தாலும் வாரம் ஒரு முறையாக இருந்தாலும் சந்தோஷமாகத்தான் இருக்கும். ஆனுல் நீங்கள் கலைமகள் பத்திரிகையை மாதம் இரண்டாக்கச் சம்மதிப்பீர்களா? பத்திரிகைகளில் அது மாணிக்கம்போல், தனக்கு நிகரேயில்லாதபடி மதிப்பாக இலங்குகிறது. இரண்டு முறை என்றுல் உள் விஷயங்களும் அதற்குத் தகுந்தாற்போலத்தான் இருக்கும். குழந்தை ...ம் சரி, விரும்பிய பொருளை அடிக்கடிதான் கேட்பார்கள். கொடுக்க முடியுமா? கொடுக்கக் கூடாது என்றே ஒரு தாய் கூறுவாள்.

"சம்பளம் வாங்கி வருவார் கணவர்" என்று நான் எண்ணியிருப்பேன். குழந்தைகள், "அப்பா கண்ணனுடன் வருவார்" என்று காத்திருக்கும். இந்த ஆசையை மாற்ற விரும்புகிறீர்களா?

—எஸ். விஜயலக்ஷ்மி, தென்னூர் ரோடு, திருச்சி.

எப்படிப் படித்தனரோ?

பல்லவி

எப்படிப் படித்தனரோ? - அண்ணன்மார்
அப்படிப் படிக்க நான் ஆசைகொண்டேன், டீச்சரே (எப்படி)

அநுபல்லவி

அக்பரும் பாபரும் அல்லா வுத்தீன்களும்
ஆட்டிப் படைத்திடும் சரித்திரப் பாடத்தை (எப்படி)
ஸல்பரும் சோடியமும் பாஸ்பேட்டும் நைட்ரேட்டும்
அடங்கி அவதிப்படுத்தும் சயன்ஸ் பாடத்தை (எப்படி)

சரணம்

பெருங்கடல் ஆங்கிலமும் பேரில்லாச் செந்தமிழும்
பெருந்தொல்லை அளிக்கின்ற இலக்கணப் பாடத்தையும்
கல்லுளி சம்ஸ்கிருதமும் கடன்கார ஜாக்ரபியும்
கடுந்தொல்லை அளிக்கின்ற அல்ஜிப்ரா ஜாமெட்ரியும்
சர்க்கார் பரீட்சைகளில் காப்பியடிக்காமல்
சல்லிசாய் பாஸாகச் சங்கடமில்லாமல் (எப்படி)

—C. சாம்பு, புதுத்தெரு, சிதம்பரம்.

* * * *

பாகப் பிரிவினை

ஓர் அரண்மனையைக் காவல் காத்தவர்கள் தூங்கி வழிந்தார்கள். மேலதிகாரி பார்த்தார். கீழ்க்கண்டபடி கட்டம் ஒன்று போட்டார். கத்திரிக்கோலையும் காகிதத்தையும் கொடுத்து, "இந்தக் கட்டத்தை உருவத்திலும் அளவிலும் சமமாக நாலு துண்டுகளாக்க வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் ஒரு வீடு, ஒரு தென்னைமரம், ஒரு கிணறு இருக்க வேண்டும். எங்கே அதேபோல் பிரித்துக் கத்தரியுங்கள்" என்று அந்தக் காவலாளிகளுக்கு வேலை கொடுத்தார். அந்த வேலையை நீங்கள் செய்யமுடியுமா?



— தியாகு (T. 206).

(விடை கடைசிப் பக்கத்தில்)

கிரிக்கெட் ஸ்கோர்

ஸ்கோரு கேட்டனர் - கிரிக்கெட்டு
ஸ்கோரு கேட்டனர்!
பேரும் புகழும் பெற்ற மாட்சைப்
பார்த்திடாத பிரியரெல்லாம் (ஸ்கோரு)
சாரியாக க்யூவில் நின்றும்
சடுதியாக உள்ளே சென்றும்
காரில் வந்தும் பார்த்துவிட்டுக்
களிப்புடனே வருபவரை (ஸ்கோரு)
ஆட்டம் பார்க்க ஓட்டம் ஓடி
அங்கே டிக்கெட் கிடைக்காதவர்
கேட்டிலேயே நின்றுகொண்டு
ஆட்டம் பார்த்து வருபவரை (ஸ்கோரு)
ரேடியோவைத் திருப்பிவிட்டு
நாலு புறமும் சூழ்ந்துகிட்டு
ஓடிய ரன் எத்தனை என்று
உரைக்கும்படி கோஷமிட்டு (ஸ்கோரு)
வாசலிலே நின்றுகொண்டும்
வழி நடந்து செல்லும்போதும்
ஆசையுள்ள சிறுவரெல்லாம்
அடுத்தவரைப் பார்க்கும்போதும் (ஸ்கோரு)

—கோ. கந்தசாமி, சென்னை.

* * *

சிலுவையில் விசித்திரம்

கம்	பம்		கடி	தம்		பட்	டம்
பம்	பாய்		தம்	படி		டம்	பம்

S. சீனிவாசன் (S.784).

* * * *

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு,

நான் கண்ணனை வாங்கிப் படித்தேன். அதில் பல கதைகள் எனக்குப் பிடித்திருக்கின்றன. நான் இப்பொழுது நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரி சானடோரியத்தில் இருக்கிறேன். என் மனசுக்குக் கண்ணன் மிகவும் பிடித்திருக்கிறது. என்னைக் கண்ணன் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளுங்கள். மூன்று கூபன்கள் இதில் உள்ளன.

S. தனவேலு, பெட் நெ. 2, டி.பி. சானடோரியம், தாம்பரம்.

* * * *

ஆறப் பொறு

ஆசிரியருக்கு,

வணக்கம், கண்ணன் என்னும் கற்பகம் உலகில் உதித்து ஆண்டு இரண்டு முடிந்து மூன்றும் ஆண்டு நடக்கிறது. அண்ணா! மாதம் ஒரு முறை வரும் கண்ணனை இருமுறையாக்கினால்;—செய்திகள், கட்டுரைகள், கதைகள், துணுக்குகள், பக்கங்கள் எல்லாம்

குறைந்து பஞ்சக் காலத்துப் பருந்தைப் போல் மெலிந்து காட்சியளிக்கும். முக்கியமாக உள்ளத்துக்கும் கண்ணுக்கும் விருந்தாக இருக்கிற அட்டைப் படத்தின் தரம் குறையும். 'ஆக்கப் பொறுத்தவனையே, ஆறப் பொறு' என்ற மூதுரையைப் போல அவசர அவசரமாகத் தயாராகி வரும். அவ்விதம் எவ்வளவோ வருகின்றன. ஆகவே அது போலில்லாமல் மாதம் ஒரு இதழே மேல் என்பது என் அபிப்பிராயம்.

— D. சுப்பிரமணியன், வெங்களத்தூர்.

* * * *

நான் யார்?

என் முதல் எழுத்து பந்தில் உண்டு; மட்டையில் இல்லை.
என் இரண்டாவது எழுத்து அம்மியில் உண்டு; குழவியில் இல்லை.
என் மூன்றாவது எழுத்து பள்ளியில் உண்டு; கலாசாலையில் இல்லை.
என் நான்காவது எழுத்து நரம்பில் உண்டு; எலும்பில் இல்லை.
என் கடைசி எழுத்து தம்பியிடம் உண்டு; அண்ணனிடம் இல்லை.

விடை: [illegible]

— S. நடராஜன், N. 149.

* * * *

விடைகள்: பாகப் பிரிவினை



சென்னை-600 008

* * *

பொழுது போக்கு விடைகள்

மே. கீ:—1. பாலடைக்கட்டி, 2. தட்டு, 3. நகம், 4. கைம்மாறு, 7. மாணவன், 8. சிவன், 9. கர, 11. திருட்டு, 12. கண்ணன், 14. தூவு, 16. உடை.

இ. வ:—1. பாதரசம், 3. நகை, 5. லட்டு, 6. சகம், 7. மாசி, 9. கணவன், 10. கதிரவன், 13. தூண், 15. வட்டி, 16. உணவு, 17. சடுதி.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

1. பழனி:
- உபதலைவர்: V. R. பாலசுப்பிரமணியன் (B. 212)
- பொருளாளர்: தானியல் பால்ராஜ்
- செயலாளர்: T. V கோபாலகிருஷ்ணன்

ஒன்பது பேர் கொண்ட செயற்குழுவும் நிறுவப்பட்டிருக்கிறது. 'செந்தாமரை' என்னும் கையெழுத்துப் பத்திரிகை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

2. திருத்நருப்பூண்டி:
- உபதலைவர்: T. S. கணபதி (G. 234)
- பொருளாளர்: குமாரி ரேஷ்மா
- செயலாளர்: எஸ். ஜயராமன்

ஒன்பது பேர் கொண்ட செயற்குழுவும் ஸ்ரீ ஜி. எம். வி. சி. கால் நடை டாக்டர் ஸ்ரீ டி. சுந்தரம் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் அமைக்கப்பட்டது.

3. ஆதிகுடி:
- உபதலைவர்: S. ரமணி (R. 786)
- பொருளாளர்: S. V. கோபால் (G. 333)
- செயலாளர்: விசுவநாதன் (V. 132)
- வாசகசாலை நிர்வாகி: K. பஞ்சாமி

11 பேர் கொண்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

4. திருவல்லிக்கேணி: (பெண்கள் பகுதி)
- உபதலைவர்: குமாரி S. கல்யாணி
- பொருளாளர்: ,, M. C. வசந்தா
- செயலாளர்: ,, S. நாகலட்சுமி

17 அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. திருவல்லிக்கேணியிலுள்ள பெண்கள் M. C. வசந்தா, 91. T. P. கோயில் தெருவில் சந்திக்கவும்.

5. வேலூர்:
- உபதலைவர்: V. ராமமூர்த்தி
- பொருளாளர்: S. ஜயராமன்
- செயலாளர்: P. ராஜமாணிக்கம்
- விளையாட்டு: T. S கோபாலகிருஷ்ணன்

14 பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

6. பூவாளுர்:
- உபதலைவர்: C. சுப்புரத்தினம்
- செயலாளர்: M. சுந்தரம்
- வாசகசாலை நிர்வாகி: P. N. சிவப்பிரகாசம்
- விளையாட்டு: P. N. ஜயராமன்

21 பேர் கொண்ட செயற்குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

7. நாமக்கல்:
- உபதலைவர்: குமாரி S. ஷிரி நவாஸ்
- பொருளாளர்: ,, R. ஜலஜா (J. 264)
- உதவி: ,, P. சாந்தா
- செயலாளர்: ,, S. R. சுலோசனு

பதினொரு அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழுவும் அமைக்கப் பட்டிருக்கிறது.

8. நாகரசம்பட்டி:
- உபதலைவர்: N. S. வேலாயுதம் (V. 551)
- பொருளாளர்: N. K. பசுபதி
- செயலாளர்: N. K. வைத்திஸ்வரன்

பத்து அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்

REG. No. M. 5542

ஜூபிடர்
தயாரிப்பு
ஏப்ரல்
26உ முதல்
ராணி
சென்னை
பாரகன்
ஸ்ரீ கிருஷ்ணா
&
சயானி
மே 1உ முதல்
தென்னாடெங்கும்
ஆரம்பம்....
டைரக்ஷன்: பிரசாத்... ஸ்டுடியோ: சென்ட்ரல்....நெப்ட்யூன்...